بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ    نَحْمَدُهٗ وَنُصَلِّیْ عَلٰی رَسُوْلِهِ الْكَرِيْمِ    وَعَلٰى عَبْدِهِ الْمَسِيْحِ الْمَوْعُوْدِ

وَلَقَدْ نَصَرَكُمُ اللّٰهُ بِبَدْرٍ وَّاَنْتُمْ اَذِلَّةٌ

தொகுதி 8

இதழ் 7

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian Tamil

வருடாந்திர சந்தா ரூபாய் 600/-

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அப்துர் ரஹ்மான் தாஹிர்

ஹிஜ்ரி கமரி 1444 - ரஜப் 24 ★ ஹிஜ்ரி ஷம்ஸி 1402 - சுல்ஹ் 16 ★ 16 பிப்ரவரி 2023

## அல்லாஹ்வின் கட்டளை

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا لَا تَخُوْنُوا اللّٰهَ وَالرَّسُوْلَ وَتَخُوْنُوْۤا اَمٰنٰتِكُمْ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ۝۲۸

**பொருள் :**

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் நம்பிக்கை தூரோகம் செய்யாதீர்கள். மேலும் உங்களை நம்பி ஒப்படைக்கப்பட்ட பொருள்களில் நீங்கள் தெரிந்து கொண்டே நம்பிக்கைத் துரோகம் செய்யாதீர்கள்.

(அல் அன்ஃபால் : 28)

## அஹ்மதிய்யா செய்திகள்

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸுர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸுர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்

## தனது அறிவு மற்றும் புத்திக்கூர்மை அல்லது தனது செல்வத்தின் மீது பெருமை கொள்ளும் மனிதன் அறிவிலி ஆவான். ஏனெனில், அவை அனைத்தும் இறைவன் வழங்கிய அருட்கொடையே ஆகும். அவன் எங்கிருந்து கொண்டு வந்தான்?

வாக்களிக்கப்பட்ட மஸீஹும் உறுதிமொழி வழங்கப்பட்ட மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து......

وَخُلِقَ الْاِنْسَانُ ضَعِيْفًا ۝۲۹

(அந்நிஸா: 29) மனிதன் பலவீனமான படைப்பினம் ஆவான் என்பது உண்மையான விஷயமாகும்.அல்லாஹ்வின் அருளும், கருணையுமின்றி அவனால் எதையும் செய்ய முடியாது. அவனது பராமரிப்பு மற்றும் அவன் உயிருடன் இருத்தல் ஆகியவற்றிற்கான அனைத்து ஏற்பாடுகளும் அல்லாஹ்வின் அருளைச் சார்ந்துள்ளன. தனது அறிவு மற்றும் புத்திக்கூர்மை அல்லது தனது செல்வத்தின் மீது பெருமைகொள்ளும் மனிதன் அறிவிலி ஆவான். ஏனெனில், அவை அனைத்தும் இறைவன் வழங்கிய அருட்கொடையே ஆகும். அவன் எங்கிருந்து கொண்டு வந்தான்? மனிதன் தனது பலவீனம் மற்றும் இயலாமையை முழுமையாக எண்ணிப் பார்ப்பதும், சிந்தித்துப் பார்ப்பதும் துஆவிற்கு அவசியமான விஷயமாகும். அவன் தனது பலவீனத்தை சீர்தூக்கி பார்க்க, பார்க்க அதே அளவில் அவன் தன்னை இறை உதவியின் தேவையுடையவனாக காண்பான். இவ்வாறு அவனுக்குள் துஆ செய்வதற்கு ஓர் உணர்வு உருவாகும். உதாரணமாக, மனிதனை துன்பம் ஆட்கொள்ளும்போது அவன் துக்கம் மற்றும் வேதனையை உணர்கின்றான். அப்போது அவன் மிகவும் அழுத்தத்துடன் அழைக்கின்றான். மேலும் துடிக்கின்றான். மேலும் மற்றவர்களிடம் உதவி வேண்டுகிறான். அதேபோன்று அவன் தனது பலவீனங்கள் மற்றும் தடுமாற்றங்களை சீர்தூக்கிப் பார்க்கும்போது அவன் ஒவ்வொரு நொடிப் பொழுதும் தன்னை இறைவனின் உதவிக்கு தேவையுடையவனாகக் காண்பான்.

மேலும் அவனது ஆன்மா முழுமையான உத்வேகத்துடனும், வேதனையுடனும் நிம்மதியிழந்து இறை சன்னிதானத்தில் விழுந்து மன்றாடுகின்றது. இறைவா! இறைவா! என்று கூறி அழைக்கின்றது. திருக்குர்ஆனை சீர்தூக்கிப் பாருங்கள்!அப்போது அல்லாஹ் முதல் சூராவிலேயே துஆவிற்கான போதனை நல்கியுள்ளான் என்பது உங்களுக்கு தெரிய வரும்.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝ صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

அருட்கொடைகளைப் பெற்ற கூட்டத்தினர் நான்கு வகைப்படுவர் என்பதை நான் பலமுறை கூறியுள்ளேன். முதலாவது நபி, இரண்டாவது ஸித்தீக், மூன்றாவது ஷஹீத், நான்காவது ஸாலிஹீன் ஆவர். எனவே இந்த துஆவில் இந்த நான்கு கூட்டத்தினரின் சிறப்புகளும் வேண்டப்பட்டுள்ளன.

(மல்ஃபூஸாத், தொகுதி 1, பக்கம் 372, காதியான் பதிப்பு 2018)

## திருக்குர்ஆனைத் தவிர உலகத்தின் கருத்துவேறுபாடுகளை அழிக்கக் கூடிய வேதம் வேறு என்ன உள்ளது? இந்த வேதம் இறைவன் புறமிருந்து வந்துள்ளது என்பதை உலகம் அறிந்து கொண்டால் தனது கருத்துகளை அது கைவிட்டுவிடும்

وَمَاۤ اَنْزَلْنَا عَلَيْكَ الْكِتٰبَ اِلَّا لِتُبَيِّنَ لَهُمُ الَّذِى اخْتَلَفُوْا فِيْهِ ۙ وَهُدًى وَّرَحْمَةً لِّقَوْمٍ يُّؤْمِنُوْنَ ۝۶۵

**(16 : 65)**

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் இந்த வசனத்திற்கு விளக்கவுரை வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

இறைவேதம் இறங்குவதற்கு மேலும் ஒரு தேவையும் உள்ளது. அதாவது, உலகில் மக்களிடத்தில் ஒழுக்கம் மற்றும் மார்க்க விவகாரங்களில் கடுமையான கருத்துவேறுபாடுகள் காணப்படுகின்றன. இறைவன் புறமிருந்து ஓர் உறுதியான ஞானம் கிடைக்காமல் இந்த கருத்துவேறுபாடு எவ்வாறு நீங்க முடியும்? எனவே அந்த ஞானத்தை வழங்குவதற்காக இந்த வேதம் இறங்கியுள்ளது. அதை தவிர, வேறு எந்த போதனை உலகின் கருத்துவேறுபாடுகளை அழிக்க முடியும்? இந்த வேதம் இறைவன் புறமிருந்து இறங்கியுள்ளது என்பதை உலகம் அறிந்து கொள்ளும்போது அது தனது கருத்துகளை கைவிட்டுவிடும். இதுவன்றி உலகம் தனது எண்ணங்களை எவ்வாறு கைவிட முடியும்? ஏனெனில், இயல்பாகவே ஒவ்வொரு நபரும் மற்றவர்களின் எண்ணங்களுக்கு எதிரில் தனது எண்ணங்களுக்கே முன்னுரிமை வழங்குகின்றார்.

இந்த வசனத்தில் இதன் பக்கம் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது, முந்தைய நபிமார்களுக்கு பிறகு அடுத்து நபி தோன்றுவதில் உங்களுக்கு ஆட்சேபனை உள்ளது. அடுத்த நபி என்பவர் உங்களின் செயல்களின் காரணமாகவே வந்துள்ளார். நீங்கள் உண்மையை விட்டுவிட்டு ஏன் கருத்துவேறுபாடு கொண்டீர்கள்? நீங்கள் கருத்துவேறுபாடு கொள்ளாமல் இருந்திருந்தால் நிச்சயமாக நபிக்கான தேவை இருந்திருக்காது. ஆனால், நீங்கள் நோயை உருவாக்கி விட்டீர்கள். இறைவன் புறமிருந்து கருத்துவேறுபாடுகளை அகற்றக் கூடிய எந்த நபரின் தேவையுமில்லை என்று தற்போது கூறுகின்றீர்கள்.

மேற்குறிப்பிட்ட கருத்து தொடர்பாக இந்த கேள்வியை எழுப்பக்கூடும். அதாவது, மூஸா (அலை) அவர்களின் ஷரீஅத்தின்படியே மக்கள் அமல் செய்து வந்தனர். மேலும் எந்த கருத்துவேறுபாடும் கொள்ளவில்லை என்று கற்பனை செய்து கொள்ளுங்கள். அந்நிலையில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மூலமாக முழுமையான ஷரீஅத் அல்லது முழுமையான போதனை இறங்கியிருக்காதா?

இதற்குரிய பதில் என்னவென்றால், இது கற்பனையான கூற்றாகும். உண்மையில் மக்கள் கருத்துவேறுபாடு கொள்வதிலிருந்து விலகி இருந்திருக்க மாட்டார்கள். அதேபோன்று அந்த வேதம் இறங்குவதிலிருந்து எந்த தடையும் உருவாகியிருக்க முடியாது. ஆயினும், ஒருவாதத்திற்கு அதுபோன்ற நிலையை ஏற்றுக் கொண்டாலும் கூட அதற்கு அல்லாஹ் இவ்வாறு பதில் வழங்கியுள்ளான்:

لَّوْ كَانَ فِى الْاَرْضِ مَلٰۤئِكَةٌ يَّمْشُوْنَ مُطْمَئِنِّيْنَ لَنَزَّلْنَا عَلَيْهِمْ مِّنَ السَّمَآءِ مَلَكًا رَّسُوْلًا **(17 : 96)**

ஒருவேளை உலகில் அனைவரும் வானவர்களாகவே இருந்திருந்தாலும் அதாவது, அனைத்து மனிதர்களும் நல்லவர்களாக இருந்தாலும் கூட நாம் அவர்களின் ஒவ்வொரு நபரின் மீது எமது வேதத்தை இறக்கியிருப்போம்.

அதாவது, அந்நிலையில், சமுதாயத்திடம் ஒரு நபி அனுப்பப்பட மாட்டார். மாறாக, அனைவருமே நபியாக இருந்திருப்பார்கள். மேலும், நிராகரிப்பிற்கான கேள்வியே எழமுடியாது. ஆனால், உலகத்தின் மக்கள் அனைவரும் நல்லவராகவும் ஆகவில்லை. இறைவனும் நபிமார்களின் வருகையின் தொடரை நிறுத்தவில்லை. (தஃப்ஸீரே கபீர், தொகுதி 4, பக்கம் 189, காதியான் பதிப்பு 2010)

## நபிமொழி

(1968) ஹஸ்ரத் வஹப் பின் அப்தில்லாஹ் ஸவாயி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் சல்மான் (ரலி) மற்றும் ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) ஆகியோரை ஒருவருக்கொருவர் சகோதரராக ஆக்கிவிட்டார்கள். ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) அவர்களை சந்திப்பதற்காக சென்றார்கள். அப்போது, அன்னார் (ரலி), ஹஸ்ரத் உம்மே தர்தாஃ (ரலி) அவர்கள் அழுக்கான மற்றும் கிழிந்த ஆடையை அணிந்திருப்பதைக் கண்டார்கள். அப்போது, அன்னார் (ரலி) நீங்கள் எப்படி இருக்கின்றீர்கள்? என்று அவரிடம் கேட்டார்கள். அதற்கு, உங்களது சகோதரர் அபூதர்தாஃ (ரலி) அவர்களுக்கு உலகில் எந்த விருப்பமும் இல்லை என்று அவர் கூறினார். அப்போது, ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) அவர்கள் வந்தார்கள். அன்னார் (ரலி) ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்களுக்காக உணவு தயார் செய்தார்கள். பின்னர், நீங்கள் உணவு அருந்துங்கள் என்று அன்னார் கூறினார்கள். தாங்கள் (ரலி) உண்ணாத வரை நான் உண்ண மாட்டேன் என்று ஹஸ்ரத் சல்மான் (ரலி) கூறினார்கள். (வஹப் அறிவிக்கின்றார்). அப்போது ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) அவர்கள் உணவு உண்டார்கள். மேலும், இரவு வந்ததும் ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) எழுந்து தொழத் தொடங்கிவிட்டார்கள். (ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள்) கூறினார்கள்: இப்போது உறங்குங்கள். இரவின் இறுதிப் பகுதி வந்ததும் ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள் கூறினார்கள்: தற்போது எழுந்திருங்கள். பின்னர் இருவரும் தொழுதார்கள்.

ஹஸ்ரத் சல்மான் (ரலி) அவர்கள், உங்கள் இறைவனுக்கும் உங்கள் மீது உரிமை உள்ளது. உங்களது நஃப்ஸிற்கும் மேலும் உமது மனைவிக்கும் உம் மீது உரிமை உள்ளது. எனவே உரிமையுடைய ஒவ்வொருவருக்கும் அவருக்குரிய உரிமையை நீர் கொடு. ஹஸ்ரத் அபூதர்தாஃ (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் வந்து, இந்த விஷயத்தை அன்னாரிடம் கூறினார்கள். அப்போது, சல்மான் (ரலி) உண்மையைக் கூறியுள்ளார் என்று ஹஸ்ரத் நபி (ஸல்) அன்னாரிடம் கூறினார்கள்.

(ஸஹீஹ் புகாரி, தொகுதி 3, பாடம் - நோன்பு, காதியான் : பதிப்பு 2008)

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**வக்ஃபே ஜதீத் திட்டத்தின் 66-வது ஆண்டின் துவக்கத்திற்கான அறிவிப்பு**

**உலகம் முழுவதும் வசிக்கும் அஹ்மதிகளின் தியாகங்களைப் பற்றிய சம்பவங்களைக் குறித்த பொதுவான நற்குறிப்புகள்**

**பொருள் தியாகம் இறைவனின் திருப்தியை பெற்றுத் தரும் உண்மையான நன்மையாகும் இந்த அளவிற்கு பொருள் தியாகத்திற்கு அல்லாஹ் முக்கியத்துவம் வழங்கியுள்ளான்**

**வக்ஃபே ஜதீத் திட்டத்தின் அறுபத்தி ஐந்தாவது ஆண்டில் அஹ்மதிய்யா ஜமாஅத் சார்பாக ஒரு கோடியே இருபத்திரண்டு இலட்சத்து பதினைந்தாயிரம் பவுண்டகள் பொருள் தியாகம் செய்யப்பட்டுள்ளது**

**ஒருவருடைய நேசத்திற்குரிய செல்வமே அல்லாஹ்வின் வழியில் ஒப்புக் கொள்ளப்படும் செல்வம் ஆகும்**

**பிட்காயின் (Bitcoin) வியாபாரம் என்பது எனது பார்வையில் ஒரு வகையான சூதாட்டம் ஆகும்**

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பிறகு நிலைபெற்றுள்ள கிலாஃபத் அமைப்பின் ஒவ்வொரு காலகட்டத்திலும் தியாகம் செய்யக்கூடிய மக்களை அல்லாஹ் வழங்கிக் கொண்டே வருகின்றான்**

**அல்லாஹ்வின் வழியில் செய்யப்பட்ட தியாகம் இவ்வுலகில் மட்டும் பயனளிப்பதில்லை. மாறாக மறுவுலகிலும் மரணத்திற்கு பிறகும் நன்மை பயக்கும்**

**விஷயம் எண்ணத்தை பொருத்து அமைகின்றது. உலகவாதி ஒன்றை சிந்திக்கின்றார். ஆனால், ஒரு மார்க்க சிந்தனை கொண்ட மனிதன் அல்லாஹ்வின் அருள் அவனது வழியில் செலவு செய்ததன் காரணமாக கிடைக்கின்றது என்றே சிந்திக்கின்றார்**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 06 ஜனவரி 2023** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு **ஸுல்ஹ்** மாதம் **06ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ
أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ○ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ○
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ○ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ○
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ○
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ○
لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬ؕ
وَمَا تُنْفِقُوْا مِنْ شَيْءٍ فَإِنَّ اللّٰهَ بِهٖ عَلِيْمٌ

உங்களின் விருப்பத்திற்குரிய செல்வத்தை (இறைவனுக்காக) நீங்கள் செலவு செய்யாத வரை நீங்கள் ஒருபோதும் நன்மையை பெறமுடியாது. நீங்கள் செலவு செய்பவற்றையெல்லாம் நிச்சயமாக அல்லாஹ் நன்கு அறிகின்றான். (ஆலி இம்ரான்: 93)

இந்த வசனத்திற்கு விளக்கமளித்தவாறு ஓரிடத்தில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: உங்களின் நேசத்திற்குரிய அந்த செல்வத்தையும், பொருட்களையும் இறைவழியில் செலவு செய்யாத வரை, உண்மையான இரட்சிப்பை பெற்றுதரும் நன்மையை ஒருபோதும் பெற முடியாது. (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானி கஸாயீன், தொகுதி 3,பக்கம் 38)

அடுத்து, அன்னார் (அலை) கூறினார்கள்: உங்களின் நேசத்திற்குரிய செல்வத்தை மனித இனத்தின் மீதான அனுதாபத்திற்காக நீங்கள் செலவு செய்யாத வரை நீங்கள் உண்மையான நன்மையை ஒருபோதும் பெற முடியாது. (இஸ்லாமி உசூல் கி ஃபிலாஸஃபி, ரூஹானி கஸாயின், தொகுதி 10, பக்கம் 358)

எனவே இறைவன் திருப்தி கொள்கின்ற அந்த உண்மையான நன்மை பொருள் தியாகம் ஆகும் என்ற அளவிற்கு அல்லாஹ் பொருள் தியாகத்திற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளான். ஆனால், நிபந்தனை என்னவென்றால், அவை இறைவனின் திருப்தியை பெறுவதற்காக செய்யப்பட வேண்டும். மேலும், தனது விருப்பத்திற்குரிய பொருளை இறை திருப்தியை பெறும் பொருட்டும், படைப்பின சேவைக்காகவும் செலவு செய்யப்பட வேண்டும். பின்னர் அதே விஷயம் இரட்சிப்பிற்கான வழிமுறையாகவும் ஆகிவிடுகிறது.

ஓரிடத்தில் அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: ஒருவருடைய பசு நோய்வாய்பட்டுவிட்டால் மேலும் அது உயிர் பிழைப்பதற்கு எந்த நம்பிக்கையும் இல்லாதபோது அதனை நாங்கள் இறைவழியில் கொடுத்து விடுகின்றோம் என்று கூறிவிடுவது அல்லது ஒரு யாசகர் வந்து யாசிக்கும்போது அவருக்கு வீட்டில் உள்ள பழைய ரொட்டியை கொடுத்துவிடுவது போன்ற செயல்கள் ஒன்றும் நன்மைகள் அல்ல.

வீட்டில் எவரும் உண்ணாத ரொட்டியை கொடுப்பது நன்மை அல்ல. ஆக, அந்த பொருட்கள் பொதுவாகவே வீட்டிலுள்ளவர்களுக்கு பயன்படாதவை ஆகிவிட்டன.

ஒருவரின் நேசத்திற்குரிய செல்வமாக அது இருந்து பின்னர் அவர் அதனை அல்லாஹ்வின் வழியில் தியாகம் செய்து அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக கொடுக்கும் செல்வமே அல்லாஹ்வின் வழியில் ஒப்புக் கொள்ளப்படுகிறது. இதுவே உண்மையான நன்மையாகும். இந்த விஷயமே படைப்பினத்தின் மீதான அனுதாபத்தை சரியாக வெளிப்படுத்துகிறது. மற்றவர்களுக்காக நமது உள்ளத்தில் எவ்வளவு வேதனை உள்ளது? என்பதும், நமது உள்ளத்தில் மார்க்கத் தொண்டாற்றுவதற்கு எவ்வளவு ஆர்வம் உள்ளது? என்பதும், மேலும் அது குறித்து நமது உணர்வுகள் என்ன? என்பதும் இதிலிருந்தே தெரிய வருகிறது. (மல்ஃபூஸாத் தொகுதி 8, பக்கம் 19, பதிப்பு-1984)

பின்னர் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள்:

மனிதன் உலகில் செல்வத்தின் மீது மிக அதிகமாக அன்பு கொள்கின்றான். எனவேதான், ஒருவர் இதயத்தை எடுத்து ஒருவருக்கு கொடுத்ததாக கனவில் கண்டால் அதன் பொருள் செல்வமாகும் என்று கனவு விளக்க அறிவு எனும் நூலில் எழுதப்பட்டுள்ளது. அதன் காரணமாகவே உண்மையான இறையச்சம் மற்றும் ஈமானைப் பெறுவதற்காக அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬ؕ

உங்களின் நேசத்திற்குரிய செல்வத்தை செலவு செய்யாத வரை உண்மையான நன்மையை நீங்கள் ஒருபோதும் பெற முடியாது. ஏனெனில், இறை படைப்பினங்களுடன் அனுதாபம் மற்றும் நன்னடத்தையின் ஒரு பெரும் பகுதி செல்வத்தை செலவு செய்வதன் அவசியத்தை எடுத்துரைக்கிறது. மனித இனம் மற்றும் இறை படைப்பினத்தின் மீதான அனுதாபம் என்பது எப்படிப்பட்ட விஷயம் என்றால், அது ஈமானின் இரண்டாம் அங்கமாகும். அதுவன்றி ஈமான் முழுமையானதாகவும், உறுதியானதாகவும் இருக்க முடியாது. மனிதன் தியாகம் செய்யாத வரை மற்றவர்களுக்கு எவ்வாறு நன்மை பயக்க முடியும்? மற்றவர்களுக்கு நன்மை பயப்பதற்கும், அனுதாபம் கொள்வதற்கும் தியாகம் என்பது அவசியமான விஷயமாகும்.

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۬ؕ

என்ற இந்த வசனத்தில் இதே தியாகத்திற்கான போதனை மற்றும் வழிகாட்டலே வழங்கப்பட்டுள்ளது.

தியாகத்திற்கான போதனை மற்றும் வழிகாட்டலே வழங்கப்பட்டுள்ளது.

எனவே, அல்லாஹ்வின் வழியில் செல்வத்தை செலவு செய்வதும் கூட மனிதனின் நற்பேறு, இறையச்சம் ஆகியவற்றின் அடையாளங்களுக்கான அளவு கோலும், உரைகல்லும் ஆகும். அல்லாஹ்விற்காக அர்ப்பணிப்பதற்கான அபூபக்ர் (ரலி) அவர்களின் தரம் எத்தகையது என்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு தேவையை எடுத்துரைத்தபோது அன்னார் (ரலி) தமது ஒட்டுமொத்த செல்வத்தையும் எடுத்துக் கொண்டு சென்று ஆஜராகிவிட்டார்கள். (மல்ஃபூஸாத், தொகுதி 2,

பக்கம் 95-96, பதிப்பு 1984)

எனவே தியாகம் மற்றும் விருப்பத்திற்குரிய செல்வத்தை (இறை வழியில்) முன்வைப்பதற்கான தரத்தின் உயர்ந்த முன்னுதாரணம் என்பது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் குறிப்பிட்டது போன்று ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் நிலைநாட்டியுள்ள உதாரணம் ஆகும். பின்னர், ஸஹாபா பெருமக்கள் தத்தமது தகுதிக்கேற்ப, அந்தஸ்திற்கேற்ப தியாகங்களுக்கான தரத்தை நிலைநாட்டினார்கள்.

அடுத்து நாம் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் பார்க்கின்றோம். அன்னாரின் நோக்கங்களை முழுமை செய்யக்கூடிய பிரசுரங்கள் வெளியீட்டிற்காகவும், இஸ்லாத்தை பரப்புவதற்காகவும் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் ஹகீம் மவ்லானா நூருத்தீன் (ரலி) அவர்கள் உயர்தரமான அந்த முன்னுதாரணத்தை நிலைநாட்டினார்கள்.

எனவே ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களுக்கு அன்னார் ((ரலி) கடிதம்) எழுதினார்கள். அதனை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் சுயமே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்கள்:

நான் (அதாவது ஹஸ்ரத் முதலாவது கலீஃபா (ரலி)) தங்களின் வழியில் அர்ப்பணம் ஆகிவிட்டேன். என்னிடம் உள்ளவையெல்லாம் எனக்குரியது அல்ல. அவை தங்களுடையதாகும். ஹஸ்ரத் ஸாஹிப்! தலைவரே! வழிகாட்டியே! நான் முழுமையான நேர்மையுடன் கூறுகின்றேன். எனது அனைத்து செல்வங்களும் மார்க்கத்தை பரப்புவதற்காக செலவாகிவிட்டால் பின்னர் நான் எனது நோக்கத்தை அடைந்து விட்டேன்.

அடுத்து அன்னார் (ரலி) எழுதினார்கள்:

எனக்கு தங்களுடன் ஃபாரூக்கிய ஒப்புமை உள்ளது. நான் எல்லாவற்றையும் இந்த வழியில் அர்ப்பணம் செய்வதற்கு தயாராக உள்ளேன். எனது மரணம் ஸித்தீக்குகளின் மரணமாக அமைய துஆ செய்யுங்கள். (ஃபத்ஹே இஸ்லாம், ரூஹானி ஹஸாயின், தொகுதி 3, பக்கம் 36)

இதே போன்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஏராளமான ஸஹாபிகள் இருந்தனர். அவர்கள் தத்தமது ஆற்றல்களுக்கு ஏற்ப தியாகம் செய்தனர். அந்த ஸஹாபிகள் எப்படிப்பட்ட தியாகங்கள் செய்தனர் என்றால், அவர்களின் தியாகங்களைப் பார்த்து எனக்கு ஆச்சரியம் ஏற்படுகிறது என்று ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள். அந்த தியாகங்களை அவர்கள் ஏன் செய்தனர்? ஏனென்றால், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் வருகையின் நோக்கமான இஸ்லாத்தை பரப்புகின்ற நோக்கத்தில் தாங்கள் உதவியாளர்களாக ஆக வேண்டும் என்பதற்காக (செய்தனர்). படைப்பினத்தின் மீது அனுதாபம் கொண்டவாறு தங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரின் ஜமாஅத்தில் இணைத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக செய்தனர். மேலும், நேர்வழியை முழுமை செய்கின்ற பணியில் பங்களிப்பை வழங்க வேண்டும் என்பதற்காகவும் தியாகம் செய்தனர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு பிறகு நிலைபெற்ற கிலாஃபத் அமைப்பின் ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்லாஹ் தியாகம் செய்யக்கூடிய நபர்களை ஜமாஅத்திற்கு வழங்கிக் கொண்டே வருகிறான். அவர்கள் தியாகங்கள் செய்கின்றனர். மேலும் அவர்கள் தமது சொந்த தேவைகளை புறந்தள்ளிவிட்டு போட்டிபோட்டுக் கொண்டு தியாகம் செய்வதற்காக முயற்சி செய்து வருகின்றனர். அவர்களில் பழைய அஹ்மதிகளும் இடம் பெற்றுள்ளனர். மேலும், புதிய அஹ்மதிகளும் இணைந்துள்ளனர். அப்படிப்பட்ட மக்களின் தியாகங்களுக்கான உதாரணங்களை நான் எடுத்துரைப்பேன்.

எவ்வாறிருப்பினும், இன்றைய குத்பா என்பது ஜனவரி மாதத்தின் முதல் குத்பா ஆகும். பொதுவாக, இந்த குத்பா வக்ஃபே ஜதீதின் புதிய வருடத்திற்கான அறிவிப்பு குறித்து அமையும்.

ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூத் (ரலி) அவர்கள் 1957 ஆம் ஆண்டில் இந்த திட்டத்தை துவக்கி வைத்தார்கள். கிராமப் புறங்களில் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணிகளுக்காக அன்னார் (ரலி) இந்த திட்டத்தை ஆரம்பித்தார்கள். அது முதலில் பாகிஸ்தானிற்கு மட்டுமான திட்டமாகவே இருந்தது. பின்னர், நான்காவது கிலாஃபத் காலத்தில் அது விரிவுபடுத்தப்பட்டு அனைத்து நாடுகளுக்கும் பரப்பப்பட்டது. அதாவது முன்னேற்றம் அடைந்த நாடுகளின் சந்தாக்களின் அந்த தொகையை ஆஃப்ரிக்க நாடுகளில் தர்பிய்யத் மற்றும் தப்லீக் பணிகளில் செலவிடுவதற்கு ஹஸ்ரத் நான்காவது கலீஃபா (ரஹி) அவர்கள் வழிகாட்டல் வழங்கினார்கள். பொதுவாக அந்த நடைமுறையே தற்போது தொடர்ந்து வருகிறது. அந்த சந்தாவில் கிடைக்கும் தொகை ஆஃப்ரிக்கா மற்றும் மற்ற ஏழை நாடுகளில் செலவிடப்படுகிறது. ஜமாஅத் சகோதரர்கள் அல்லாஹ்வின் அருளினால் போட்டிபோட்டுக் கொண்டு அதில் பங்கு பெறுகின்றனர். அதே நேரம், ஆஃப்ரிக்காவின் மற்ற முன்னேற்றம் அடைந்த நாடுகள் அல்லது வளரும் நாடுகளின் அஹ்மதிகளும் இந்த திட்டத்தில் பங்கு பெற்று வருகின்றனர். அந்த மக்களின் தியாகங்களும் அவர்களின் வருமானம் மற்றும் சூழ்நிலையை வைத்து பார்க்கும்போது பாராட்டத் தக்கதாகும். எனினும், கூடுதல் செலவினங்கள் பணக்கார நாடுகளின் சந்தாக்களின் மூலம் முழுமை செய்யப்படுகின்றன. வளர்ந்த நாடுகளின் சந்தாக்களிலிருந்து முழுமை செய்யப்படுகின்றன. தியாகம் செய்யக்கூடியவர்கள் எல்லா இடங்களிலும் இந்த விஷயத்தை முழுமையாக புரிந்து வைத்துள்ளனர். அதாவது அல்லாஹ் கூறுகின்றான்: ஆதமின் மகனே! நீ உனது கருவூலத்தை என்னிடத்தில் ஒப்படைத்து விட்டு நிம்மதியாக இரு. அதில் தீ பற்றிக் கொள்ளும் அபாயமுமில்லை அல்லது அது நீரில் மூழ்கிவிடும் என்ற அச்சமும் இல்லை அல்லது திருடன் யாராவது திருடிவிடுவான் என்ற பயமும் தேவையில்லை. நீ எந்த நாளில் மிக அதிக தேவையுடையவனாக இருப்பாயோ அன்று என்னிடத்தில் வைக்கப்பட்ட கருவூலத்தை நான் முழுமையாக உனக்கு வழங்கிவிடுவேன் என்ற ஹதீஸே குத்துஸியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இந்த விஷயத்தை புரிந்து வைத்துள்ளனர். (கன்ஸுல் உம்மால், தொகுதி 6, பக்கம் 352, ஹதீஸ் எண்: 16021, பெய்ரூத் -1985)

ஆக, அல்லாஹ்வின் வழியில் செய்யப்பட்ட தியாகம் இந்த உலகில் மட்டும் பயனளிப்பதில்லை. மாறாக, மறுவுலக வாழ்விலும் மரணத்திற்கு பிறகும் பயனளிக்கும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறுகின்றான்:

وَمَا تُنْفِقُوْا مِنْ خَيْرٍ يُّوَفَّ اِلَيْكُمْ وَاَنْتُمْ لَا تُظْلَمُوْنَ

செல்வத்திலிருந்து நீங்கள் என்னவெல்லாம் செலவு செய்கின்றீர்களோ, அவை உங்களுக்கு முழுமையாக திருப்பிக் கொடுக்கப்படும். மேலும் ஒருபோதும் உங்களுக்கு எந்த அநீதியும் இழைக்கப்பட மாட்டாது. (அல்பக்ரா: 273)

எனவே, அல்லாஹ் வாக்குறுதி வழங்கும்பொழுது அதனை அவன் நிறைவேற்றியும் கொடுக்கின்றான். மறுவுலகிலும் அல்லாஹ்வின் அருட்கொடைகளுக்கு நீங்கள் வாரிசாகுவீர்கள் என்ற நம்பிக்கையில் நிலைபெறும் பொருட்டு அவன் இவ்வுலகிலும் நமக்கு அதன் உதாரணங்களை காட்டுகின்றான். வியாபாரங்களில் தொகையை முதலீடு செய்து நஷ்டம் ஏற்பட்டுவிடுவதை போன்றோ அல்லது சிலகாலம் பயனளித்துவிட்டு அதுவும் உலகியல் பயன் மட்டுமே இருந்து அதன் பிறகு எந்த உத்திரவாதமும் இல்லாத உலகியல் நிறுவனங்களைப் போன்றதல்ல (இந்த வணிகம்). இன்னும் கூறப்போனால், உலகின் சில வியாபாரங்கள் உள்ளன. அவை சிலகாலம் வரை இலாபம் தரக்கூடியதாக இருக்கின்றன. பின்னர் அதனை நடத்துபவரே அனைத்தையும் விழுங்கிவிடுகின்றார். ஆனால், அதில் ஏழை மக்கள் முதலீடு செய்திருப்பார்கள். அவர்களின் பணம் முழுவதும் மூழ்கிவிடும். உதாரணமாக, இன்றைய நாட்களில் மிகவும் சர்ச்சை இருந்து வருவதை போன்று. அதாவது பிட்காயினில் அல்லது கிரிப்டோ கரன்ஸியில் தங்களது பணத்தை முதலீடு செய்திருந்தனர். மக்களின் பல மில்லியன் டாலர்கள் மூழ்கிவிட்டன. அதனை நடத்தியவர்கள் விழுங்கிவிட்டனர். அனைத்தும் முடிந்துவிட்டது.

எவ்வாறிருப்பினும், என்னைப் பொருத்தவரை பிட்காயின் போன்றவை ஒரு வகையான சூதாட்டமும் ஆகும்.

ஆனால், எவ்வாறிருப்பினும், தனக்காக தியாகம் செய்யக்கூடியவர்களுக்கு அல்லாஹ் எவ்வாறு அருளுகின்றான் என்பதற்கு பல விநோதமான காட்சிகள் உள்ளன. நான் கூறியதுபோன்று, நான் (இன்று) சில உதாரணங்களை எடுத்துரைப்பேன். அவை எப்படிப்பட்ட உதாரணங்கள் என்றால், எங்கு தியாகம் செய்யக்கூடியவர்கள் உலகியல் பயன்களைப் பெற்று வருகின்றனரோ அங்கு அவர்களின் ஈமானும் அதிகரித்து வருகிறது.

உதாரணமாக, லைபீரியாவின் ஓர் உதாரணம் உள்ளது. அங்கு போமி கவுன்டி என்ற இடம் உள்ளது. முஅல்லிம் கூறுகின்றார்: வக்ஃபே ஜதீத் சந்தா வசூல் செய்வதற்காக ஃபோமா என்ற ஜமாஅத்திற்கு நான் சென்றேன். உள்ளூர் இமாம் சாஹிபை சந்தித்த பிறகு, கூட்டு நிகழ்ச்சி ஒன்று நடத்தப்பட்டது. அதில் கிராமத்தின் பெரும்பான்மை கலந்து கொண்டது. ஜமாஅத் உறுப்பினர்களுக்கு வக்ஃபே ஜதீதின் முக்கியத்துவம் மற்றும் அருட்கள் குறித்து கூறப்பட்டது. நிகழ்ச்சிக்கு பிறகு, ஜமாஅத் உறுப்பினர்களிடம் தனிப்பட்ட முறையில் வீடுகளுக்கு சென்றும் சந்தா வசூல் செய்தேன். ஒரு இளைஞரின் வீட்டிற்கு நான் சென்றேன். அவரது வீட்டில் ஒன்றும் இருக்கவில்லை. வீட்டில் தற்போது சந்தா பணம் இல்லை. பின்னர் எப்போதாவது கொடுத்துவிடுவோம் என்று அவரது தாயார் வருத்தத்துடன் தெரிவித்தார்.

நாங்கள் திரும்பி வந்துவிட்டோம். சிறிது நேரத்திற்கு பிறகு, அந்த இளைஞர் ஓடோடி வந்தார். மேலும் அவர் கூறினார்: இதோ 250 லைபீரியன் டாலர்கள் உள்ளன. இதனை எனது தந்தையார் எனது பள்ளிக் கட்டணத்திற்காக கொடுத்திருந்தார். இந்த திட்டத்திலிருந்து எங்களது குடும்பம் இழப்பிற்குரியதாக ஆகிவிடக் கூடாது என்பதற்காக நான் இதனை சந்தாவிற்காக கொடுத்துவிடுகிறேன்.

கூறுகின்றார்கள்: சில நாட்களுக்கு பிறகு, அதே இளைஞர் என்னுடைய சென்டருக்கு வந்தார். மேலும் இவ்வாறு

கூறினார்:

எனது ஓர் உறவினர் எனது பள்ளிக்கூட தேவைகளுக்காக 2500 லைபீரியன் டாலர்களை அனுப்பியுள்ளார் என்ற தகவல் நீங்கள் சென்றுவிட்ட பிறகு இரண்டு நாட்கள் கழித்துதான் எனக்கு கிடைத்தது.

எனவே, நான் அதிலிருந்து எனது கல்விக் கட்டணத்தையும் செலுத்திவிட்டேன். மேலும், மற்ற தேவையான பொருட்களையும் வாங்கிக் கொண்டேன். அல்லாஹ் எனது தியாகத்திற்கு பத்து மடங்கு அதிகரித்து கொடுத்துவிட்டான் என்றும் அவர் கூறினார்.

ஆக, இவ்வாறு அல்லாஹ் உள்ளங்களில் ஈமானையும், உறுதியையும் உருவாக்குகின்றான். அல்லாஹ் இவ்வுலகிலும் அருளுகின்றான். மேலும் மறுவுலகின் வாக்குறுதிகளும் உள்ளன. அதனையும் இன்ஷாஅல்லாஹ் முழுமை செய்துவிடுவான். அங்குதான் இந்த கணக்கு ஒன்று சேர்க்கப்படுகின்றது.

அடுத்து, கினிகனாகரியின் ஓர் உதாரணம் உள்ளது. அங்கு ஓர் மண்டலத்தைச் சேர்ந்த மன்ஸாயா என்ற ஜமாஅத் உள்ளது. அந்தப் பகுதியின் மிஷனரி கூறுகின்றார்:

வக்ஃபே ஜதீத் வாரம் கொண்டாடிக் கொண்டிருந்தோம். ஜமாஅத் உறுப்பினர்களுக்கு மஸ்ஜிதில் வைத்தும், தனிப்பட்ட முறையிலும் வக்ஃபே ஜதீத் திட்டத்தின் முக்கியத்துவம் மற்றும் அருட்களை எடுத்துரைத்தவாறு இந்த அருளுக்குரிய அமைப்பில் இணைவதன் பக்கம் கவனமூட்டிக் கொண்டிருந்தோம். அப்போது சமீபத்தில் அஹ்மதி ஆகியிருந்த கிராமம் மற்றும் பள்ளிவாசலின் இமாம் அபூபக்ர் கமாரா சாஹிப் இவ்வாறு கூறினார்: முதலில் நான் சந்தா கொடுப்பேன். ஏனெனில் மற்றவர்களுக்கு நாம் முன்மாதிரியாக ஆக இருக்க வேண்டும்.

தற்போது இந்த நிலைமை உள்ளது. அதாவது, தாமும் திட்டத்தில் பங்கு பெற்று மற்றவர்களுக்கும் கூறுகின்ற நிலைமை உள்ளது.

இன்னும் கூறப்போனால், சுயமே கூறுகின்றார்கள்: அதாவது, முதலில் நாம் முன்மாதிரியாக இருக்க வேண்டும். எனவே அன்னார் தமது சட்டைப்பையிலிருந்த ஆயிரம் ஃபிரான்க் கினி தொகையை சந்தாவாக கொடுத்துவிட்டார்கள். பின்னர், அவர் சந்திக்க வந்தார். அவர் கூறினார்: நான் அந்த தொகையை சந்தாவில் கொடுத்துவிட்டேன். ஆனால், சிறிது நேரம் கழிந்த உடனேயே எனது ஒரு நண்பர் எனக்கு பதினைந்து லட்சம் ஃபிரான்க் அன்பளிப்பாக அனுப்பினார்.

கூறுகின்றார்கள்: எனது அந்த தியாகத்தின் விளைவாகவே அல்லாஹ் இதனை எனக்கு வழங்கியுள்ளான் என்று நான் கருதுகிறேன். இனி நான் முன்பை விட இன்னும் அதிகமாகவும், தொடர்ந்து முறையாகவும் சந்தாக்களில் பங்கு பெற்று வருவேன்.

இதுவே புதிதாக பைஅத் செய்தவர்களுடன் அல்லாஹ்வின் நடைமுறை ஆகும். எனது வழியில் செலவு செய்தால் நான் இங்கும் உங்களுக்கு அருளுவேன். மறுவுல வாக்குறுதிகளும் முழுமை செய்யப்படும். இன்ஷா அல்லாஹ் என்பது இறைவனின் நடைமுறையாக உள்ளது.

அடுத்து, கேமரூனைச் சேர்ந்த ஒரு முஅல்லிம் எழுதுகின்றார்கள்:

ஓர் இளைஞர் என்னுடன் தஹ்ரீகே ஜதீத் சந்தாவிற்காக கிராமப்புறங்களுக்கு சென்று கொண்டிருந்தார். அவர் வேலைவாய்ப்பு எதுவும் இல்லாத நபராக இருந்தார். எனவே தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் ஓராயிரம் ஸைஃபாவை மட்டுமே அவர் சந்தாவாக கொடுத்தார்.

மேலும், எனக்கு வேலை கிடைப்பதற்காக துஆ செய்யுங்கள். எனக்கு வேலை கிடைத்துவிட்டால் இன்னும் அதிகம் கொடுப்பேன் என்று அவர் கூறினார். அதற்கு, சரி! நானும் துஆ செய்கிறேன்; நீங்களும் உங்களுக்கு வேலை கிடைக்க துஆ செய்யுங்கள் என்று முஅல்லிம் ஸாஹிப் கூறினார். அல்லாஹ் சிலகாலம் கழித்து அவரது துஆவை ஏற்றுக் கொண்டான். ஒரு மாதத்திற்கு பிறகு, அவருக்கு ஐக்கிய நாட்டு சபையின் ஓர் அமைப்பில் ஓட்டுனராக வேலை கிடைத்துவிட்டது. நான் கஷ்டமான சூழ்நிலையில் சந்தா கொடுத்தேன். அதற்கு பகரமாக அல்லாஹ் எனது வருமானத்தை அதிகரித்துவிட்டான் என்று கூறி அவர் வக்ஃபே ஜதீத் சந்தா வாக்குறுதியில் பத்தாயிரம் ஸைஃபா தொகையை அதிகரித்துவிட்டார்.

தன்ஸானியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்:

ஒரு ஜமாஅத்தின் ஒரு பெண்மணி கூறினார்: ஒருநாள் அவர் வீட்டுப் பொருட்களை வாங்குவதற்காக கடைவீதிக்கு சென்று கொண்டிருந்தார். வழியில் முஅல்லிம் ஸாஹிபை சந்தித்தார். அவர் வக்ஃபே ஜதீத் சந்தா குறித்து கூறினார். மேலும் அதனை செலுத்துவதன் பக்கம் கவனமூட்டினார். அப்போது, அவர் இவ்வாறு கூறினார்: என்னிடம் தற்போது இரண்டாயிரம் ஷிலின்ங் தொகை உள்ளது. கடைவீதியிலிருந்து பொருட்கள் வாங்க சென்று கொண்டிருக்கின்றேன். அதிலிருந்து ஓராயிரம் ஷிலின்ங் தொகையை நான் சந்தாவாக கொடுத்துவிட்டேன். மீதமுள்ள ஓராயிரம் ஷிலின்ங் தொகையிலிருந்து நான் வீட்டிற்கு தேவையான பொருட்களை வாங்கிக் கொள்வேன் என்று கூறினார்.

அந்தப் பெண்மணி தொடர்ந்து கூறுகின்றார்: அப்போது, என்னிடம் சில காலத்திற்கு முன்னர் ஐந்தாயிரம் ஷிலின்ங் தொகையை (கடனாக) வாங்கியிருந்த ஒரு பெண்மணி அங்கு எனக்கு பின்னால் இருந்து குரல் கொடுத்தார். அவர் அந்த பணத்தை வாங்கி ஒரு நீண்ட காலம் ஆகியிருந்தது. அந்த தொகை திரும்ப கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்கு அப்போது இருந்திருக்கவில்லை. அந்தப் பெண்மணி ஐந்தாயிரம் ஷிலின்ங் தொகையை என்னிடம் திருப்பிக் கொடுத்துவிட்டு, இது நான் உமக்கு திருப்பிக் கொடுக்க வேண்டிய கடன் தொகையாகும் என்று கூறினார்.

பின்னர் அவர் மீண்டும் முஅல்லிம் சாஹிபிடம் சென்றார். மேலும், சந்தாவின் பரக்கத்தின் காரணமாக அல்லாஹ் எனக்கு இதனை வழங்கியுள்ளான் என்று கூறினார். அதனால் மேலும் ஓராயிரம் ஷிலின்ங் தொகையை அவர் சந்தாவாக கொடுத்துவிட்டார்.

லைபீரியா முஅல்லிம் கூறுகின்றார்: அங்கு கான்டா (Ganta) என்ற ஒரு ஜமாஅத் உள்ளது. அங்கு ஓர் உறுப்பினரான ஆயிஷா சாஹிபா இருக்கின்றார்கள். (முஅல்லிமாகிய) அவர் அன்னாருடைய வீட்டிற்கு சென்றார். வக்ஃபே ஜதீத் திட்டத்தில் இணைவதன் பக்கம் கவனமூட்டினார். அதற்கு, தற்போது என்னிடத்தில் எதுவும் இல்லை. ஆனால், நீங்கள் சற்று காத்திருங்கள். நான் சிறிது ஏற்பாடு செய்கின்றேன். ஏனெனில் நீங்கள் எனது வீட்டிலிருந்து வெறுங்கையோடு செல்லக் கூடாது என்று அந்த பெண்மணி கூறினார்.

யாரும் வெறுங்கையுடன் செல்லக்கூடாது என்ற கவலையும் அவருக்கு இருந்தது.

ஆக, அன்னார் விரைவாக ஒருவரிடமிருந்து கடன் வாங்கி நூறு லைபீரியன் டாலர்களை சந்தாவாக செலுத்திவிட்டார்.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்: தற்போது நான் அவருடைய வீட்டில்தான் இருந்தேன். அந்நிலையில், ஒருவர் உங்களுடைய வங்கிக் கணக்கில் ஆன்லைனில் சிறிது பணத்தை டிரான்ஸ்ஃபர் செய்துள்ளார் என்று அவரது ஃபோனிற்கு மெசேஜ் வந்தது. அந்தப் பெண்மணி கூறுகின்றார்: தற்போது நான் கொடுத்த நூறு லைபீரியன் டாலர் சந்தாவிற்கு பகரமாக அல்லாஹ் இதனை உடனடியாக எனக்கு நல்கிவிட்டான்.

அடுத்து, கினிகனாகிரி முபல்லிக் எழுதுகின்றார்: ஜமாஅத்தின் ஓர் உறுப்பினர் ஸயீத் வபா (Saeedouba) இருக்கின்றார். அவர் வேலையில்லாமல் இருந்தார். சுரங்க கம்பெனிகளில் அவர் (வேலைக்கு) விண்ணப்பித்திருந்தார். ஆனால், எந்த நம்பிக்கையும் தென்படாமல் இருந்தது. வக்ஃபே ஜதீத் வாரம் என்ற நிகழ்ச்சியின் பொழுது அவருக்கு சந்தா தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அப்போது, நான் வேலையில்லாமல் இருக்கின்றேன். அதிகமாக எதுவும் கொடுக்க முடியாது என்று கூறினார். எவ்வாறிருப்பினும், சட்டைப்பையில் கையை போட்டார். மேலும், ஐந்தாயிரம் ஃபிரான்க் எடுத்து சந்தாவாக கொடுத்துவிட்டார். தற்போது என்னிடம் உள்ள மொத்த தொகை இவ்வளவுதான் என்று கூறினார்.

அவர் கூறுகின்றார்: சந்தா கொடுத்து ஐந்து நாட்களுக்கு பிறகு அவருக்கு மற்றொரு சுரங்க கம்பெனியிலிருந்து வேலைக்கான ஆஃபர் வந்தது. அங்கு அவர் வேலைக்காக விண்ணப்பம் அளித்திருக்கவில்லை. அல்லாஹ்வின் அருளினால் ஐந்து லட்சம் ஃபிரான்க் மாத வருமானத்தில் அவருக்கு வேலை கிடைத்துவிட்டது. அவர் கூறுகின்றார்: அல்லாஹ்வின் வழியில் நான் எளிய தியாகம் செய்தேன். அல்லாஹ் தனது வாக்குறுதிக்கு ஏற்ப பல மடங்கு அதிகரித்து அதனை எனக்கு கொடுத்துவிட்டான்.

அடுத்து, நைஜீரியாவின் முபல்லிக் இருக்கின்றார். அவர் எழுதியுள்ளார்: கூறுகின்றார்:

கானுஸ்டேட் ஜமாத்தைச் சேர்ந்த ஓர் அஹ்மதி நண்பரான நாஸிர் ஸாஹிப் இருக்கின்றார். அவர் கூறினார்: நான் மூன்று ஆண்டுகளாக வேலையில்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வந்தேன். நான் ஏன் எனது சக்திக்கேற்ப மீண்டும் சந்தா கொடுக்க தொடங்கக் கூடாது? என்ற எண்ணம் எனக்கு வந்தது.

அவர் வேலையில்லாமல் இருந்ததால், சந்தா கொடுக்க முடியாமல் இருந்தார். சந்தாவை நிறுத்தியிருந்தார்.

கூறுகின்றார்: என்னிடத்தில் உள்ளவற்றிற்கு ஏற்ப சந்தா கொடுக்க தொடங்க வேண்டும் என்று நான் எண்ணினேன். முரப்பி சாஹிப் கூறுகின்றார்கள்: கடந்த வருடம் ஜூன் மாதத்திலிருந்து அவர் சந்தா கொடுக்க தொடங்கியிருந்தார். அவர் முரப்பி சாஹிபிடம் கூறுகின்றார்:

அந்த நபர் கூறுகிறார்: தற்போது மூன்று மாதங்கள் கூட கழிந்திருக்கவில்லை. அதற்குள் என்னை ஒரு நண்பர் தொடர்பு கொண்டு, ஒரு கம்பெனியில் மார்கெட்டிங்கிற்காக ஒரு பணியிடம் காலியாக உள்ளது என்று கூறினார். இவ்வாறு அந்த கம்பெனி என்னை வேலையில் சேர்த்துக் கொண்டது. மேலும், அந்த கம்பெனியின் முதலாவது கான்ட்ராக்டாக அது இருந்தது. இவ்வளவு காலத்திற்கு பிறகு எனக்கு கிடைத்துள்ள இந்த வேலை அல்லது வியாபாரத்திற்கான பணி என்பது சந்தாவின் பரக்கத் ஆகும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுவிட்டது.

அடுத்து, சென்டரல் ஆஃப்ரிக்காவின் முபல்லிக் எழுதுகின்றார்: ஜிப்ராயீல் என்ற ஒரு புதிய அஹ்மதி இருக்கின்றார். அவர் கூறினார்: கடந்த வருடம் ஜமாஅத்தில் இணைந்தபோது எனது நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைகளில் மாற்றம் ஏற்படத் தொடங்கியது.

இதுவும் சிந்திக்கத் தக்க விஷயமாகும். அதாவது, அவர் ஜமாஅத்தில் மட்டும் இணையவில்லை. மாறாக, நிச்சயமாக அவர் துஆவும் செய்திருப்பார். மேலும், தனது நிலையை மாற்றுவதற்கு முயற்சியும் செய்திருப்பார். மேலும், அல்லாஹ்வின் அருளும் அவர் மீது இறங்கியது. அதாவது தனது ஆன்மீக, நல்லொழுக்க நிலையில் மாற்றம் ஏற்பட்டு வருகிறது என்பதை அவர் சுயமே உணரவும் செய்தார்.

பின்னர் கூறுகின்றார்: ஒருநாள் முபல்லிக் சாஹிப் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்கும்படி கூறினார். அதாவது வருடம் முடிவடைய உள்ளது. குறைந்த அளவு கொடுத்தாலும் பரவாயில்லை. சந்தா கொடுக்க வேண்டும் என்று முபல்லிக் கூறினார். ஆக, அவர் கூறுகின்றார்: நான் சந்தா கொடுத்து ரசீது பெற்றுக் கொண்டேன். மேலும் அந்த நேரத்திலிருந்து இன்று வரை எனது பணியில் மிகவும் பரக்கத் ஏற்பட்டுள்ளது. இறைவனின் சிறப்பான அருள் கிடைத்துள்ளது. தற்போது நான் ஓய்வின்றி பணி செய்து வருகின்றேன். முன்னர் பற்பல நாட்கள் வரை வாடிக்கையாளர்கள் வராமல் இருந்தனர். தற்போது தினமும் தொடர்ந்து வருகின்றனர். அல்லாஹ்வின் அருளினால் நான் எவ்வளவு பணம் சம்பாதித்து விடுகின்றேன் என்றால், அதனை என்னால் முன்னர் கற்பனைக் கூட செய்ததில்லை.

அடுத்து, டேகோவிலிருந்து முபல்லிக் ஆரிஃப் சாஹிப் எழுதுகின்றார்கள்:

காரா மண்டலத்தின் ஆபாகாஜி (Abagagi)யைச் சேர்ந்த ஒரு சகோதரர் இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: எனது பொருளாதார நிலைமைகள் மோசமாக இருந்தன. வக்ஃபே ஜதீத் வருடத்தின் கடைசி மாதமாக இருந்தது. வாக்குறுதியை எவ்வாறு முழுமை செய்வேன் என்று மிக அதிமாக கவலைப்பட்டு வந்தேன். பின்னர், வீட்டில் வேறு நோக்கத்திற்காக நான் வைத்திருந்த ஓர் ஆட்டை விற்று சந்தா செலுத்திவிட வேண்டும் என்ற எண்ணம் எனக்கு தோன்றியது. அந்த ஒரு பொருள் மட்டுமே இருந்தது. வீட்டில் வேறு எதுவும் இருக்கவில்லை. அதை விற்றுவிட்டு சந்தா கொடுத்துவிடுகிறேன் என்று நான் எண்ணினேன்.

கூறுகின்றார்: நான் இந்த எண்ணம் கொண்டிருந்தேன். அந்நிலையில், ஒருநாள் சந்தா வாங்குவதற்காக மிஷனரி சாஹிப் வந்துவிட்டார்கள். அதே நாளில் ஒரு நபர் என்னிடமிருந்து கடனாக பணம் வாங்கியிருந்தார். அந்த தொகை திரும்பி கிடைப்பதற்கு எந்த நம்பிக்கையும் இருக்கவில்லை. அவரும் அப்போதே பணத்தை திருப்பிக் கொடுக்க வந்துவிட்டார்.

அவர் கூறுகின்றார்: ஆக, அந்த பணம் முழுவதையும் நான் வக்ஃபே ஜதீத் சந்தாவாக கொடுத்துவிட்டேன். இவ்வாறு அல்லாஹ் எனக்கு மறைவிலிருந்து உதவி செய்தான்.

நன்மை செய்வதற்கு எண்ணம் கொண்டார். அதன்படி செயல்படுவதற்கு முன்பே அல்லாஹ் ஏற்பாடும் செய்துவிட்டான். விருப்பத்திற்குரிய பொருளை தியாகம் செய்வதன் பக்கம் கவனம் செலுத்தினார். அப்போது அதற்கு முன்பே அல்லாஹ் அருளிவிட்டான். ஏனெனில், அவன் உள்ளங்களின் நிலைகளை அறிகின்றான்.

மார்ஷல் ஐலேண்ட்டின் ஸாஜித் இக்பால் சாஹிப் கூறுகின்றார்கள்: இங்கு லோரீன் (Loreen) என்ற ஒரு சகோதரி இருக்கின்றார். அவர் கூறுகின்றார்: பொருள் தியாகத்தின் காரணமாக அல்லாஹ் என் மீதும் எனது குடும்பத்தினர் மீதும் நிறைய அருள் செய்துள்ளான்.

முன்பு பொருள் தியாகத்தில் பங்கு பெறாமல் இருந்தார். ஏனெனில், தியாகத்திற்கு பகரமாக அல்லாஹ் எவ்வளவு அருள் செய்கின்றான் என்பதில் அவருக்கு நம்பிக்கை இல்லாமல் இருந்தது. மேலும் அந்தநேரத்தில் பணக் கஷ்டமும் இருந்தது. உண்பதற்கும், பருகுவதற்கும் பொருட்கள் வாங்கக் கூட அவரிடம் பணம் இருக்கவில்லை. குடும்பத்தின் செலவினங்களை பூர்த்தி செய்வதற்கு மிகவும் கஷ்டப்பட்டு வந்தார்.

அந்தப் பெண்மணி கூறுகின்றார்:

ஆனால், பொருள் தியாகத்தின் பரக்கத்துகளைக் குறித்து மஸ்ஜிதில் குத்பாக்கள் கேட்டேன். அப்போது தியாகத்தில் பங்கு பெறவேண்டும் என்று நான் நினைத்தேன். எனவே நாங்கள் தியாகம் செய்ய தொடங்கிவிட்டோம். சந்தா கொடுக்க தொடங்கிவிட்டோம்.

தற்போது அல்லாஹ்வின் அருள் எந்த அளவுக்கு உள்ளதென்றால் குடும்பத்தின் தேவைகளும் பூர்த்தியாகிவிடுகின்றன. உணவிலும், பானத்திலும் எந்த தட்டுப்பாடும் இல்லை. பல முறை இவ்வாறு நிகழ்ந்துள்ளது. அதாவது, நாங்கள் நினைத்து பார்க்காத இடங்களிலிருந்தெல்லாம் எங்களுக்கான தொகை வந்துவிடுகின்றது. நாங்கள் எவ்வளவு கொடுத்தாலும் அல்லாஹ் அவ்வளவு அதிகரித்து கொடுத்துவிடுகின்றான்.

புதிய அஹ்மதிகளுடனும் அவர்களின் ஈமானை உறுதிபடுத்துவதற்காக அல்லாஹ் இவ்வாறு நடந்து கொள்கிறான்.

இந்தியாவிலிருந்து வக்ஃபே ஜதீத் இன்ஸ்பக்டர் ஸாஹிப் கூறுகின்றார்: தமிழ்நாட்டில் உள்ள மேலப்பாளையம் ஜமாஅத்திற்கு வக்ஃபே ஜதீத் பட்ஜெட் மற்றும் (சந்தா) வசூல் நோக்கத்துடன் நான் சென்றேன். அப்போது, அங்கு ஒரு தூய அஹ்மதியை சந்தித்தேன். அவர் என்னிடம் கூறினார்:

நான் 2014 ஆம் ஆண்டில் பைஅத் செய்தேன். மேலும் அஹ்மதிய்யா ஜமாஅத்தில் இணைவதற்கு எனக்கு நற்பேறு கிடைத்தது.

அப்போது அவர் புதிய அஹ்மதியாக இருந்தார். தற்போது அவர் புதிய அஹ்மதி கிடையாது.

நான் பைஅத் செய்தபோது வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கு நான்காயிரம் ரூபாய் வாக்குறுதியாக கொடுத்து, அதனை நான் செலுத்தி வந்தேன். ஏனென்றால், அவ்வளவு தான் எனக்கு வாய்ப்பு இருந்தது.

மேலும், பின்னர் ஒவ்வொரு ஆண்டும் அதன் பிறகு கிடைத்து வந்த நற்பேறுக்கேற்ப அதிகரித்துக் கொண்டும் சென்றேன். மேலும், அதன் காரணமாக வியாபாரத்திலும் அல்லாஹ் பெரும் வளர்ச்சியை வழங்கிக் கொண்டே சென்றுவிட்டான். பின்னர் சில காலத்திற்கு பிறகு குடும்பத்தின் எஞ்சிய உறுப்பினர்களும் பைஅத் செய்துவிட்டனர். மேலும் கூறுகின்றார்கள்: அல்லாஹ்வின் அருளினால் இன்று என்னுடைய வக்ஃபே ஜதீத் சந்தா ஐந்து லட்சமாக ஆகிவிட்டது.

இந்த கடந்த வருடத்தில் அவர் ரமலான் மாதத்திலேயே தமது ஐந்து லட்சத்தையும் முழுமையாக செலுத்திவிட்டார்.

அவர் கூறுகின்றார்: லாக்டவுன் அமலில் இருந்தபோதும் எனது சந்தாக்களின் பரக்கத்தின் காரணமாக வியாபாரத்தில் எனக்கு எந்த நஷ்டமும் ஏற்படவில்லை. மாறாக, (வியாபாரம்) இன்னும் கூடுதலாக அதிகரித்துவிட்டது. மேலும் தற்போது அல்லாஹ்வின் அருளினால் வியாபாரம் இந்தியாவைக் கடந்து தாய்லாந்து வரையிலும் பரவிவிட்டது.

கூறுகின்றார்: இவை அனைத்தும் சந்தாக்களின் அருட்களாகும்.

இவை அல்லாஹ்வின் அருட்கள் ஆகும். சூதாட்டத்தைப் போன்ற வகையான வியாபாரம் அல்ல. பணத்தை முதலீடு செய்தார். உழைத்தார். வியாபாரம் செய்தார். அல்லாஹ்வின் வழியில் செலவு செய்தார். அப்போது அல்லாஹ் பல மடங்கு அதிகரித்தும் விட்டான்.

அடுத்து, இந்தியாவின் மற்றோர் உதாரணம் உள்ளது. அங்கிருந்து முபல்லிக் இன்சார்ஜ் எழுதியுள்ளார்: நாஸிம் சாஹிப் மால் மற்றும் இன்ஸ்பெக்டர் வக்ஃபே ஜதீத் வக்ஃபே ஜதீத் வருடம் முடிவடைய இருப்பதைக் கருத்தில் கொண்டு மலப்புரம், கேரளாவில் சுற்றுப்பயணத்தில் இருந்தார்கள். எங்களது பகுதிக்கும் வந்தார்கள். அப்போது, அங்கு வியாபாரம் செய்து வரும் ஒரு தூய அஹ்மதியான ரஹ்மான் சாஹிப் அவர்களிடமிருந்து ஃபோன் வந்தது.

நீங்கள் முதலில் எனது கம்பெனிக்கு வந்துவிடுங்கள். நான் எனது கம்பெனி ஒன்றை கட்டியுள்ளேன். அங்கு ஒரு புதிய பகுதி ஒன்றை உருவாக்கியுள்ளேன். அந்தப் பகுதியில் துஆ செய்ய வேண்டும் என்று அன்னார் கூறினார்கள். நாங்கள் அங்கு சென்றபோது, நாங்கள் கேட்காமலேயே பத்து லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்கள். மேலும், சுற்றுப் பயணம் மேற்கொள்வதற்காக தனது பெரிய வண்டியை பெட்ரோல் எல்லாம் நிறைத்து கொடுத்துவிட்டார்கள்.

எங்களுக்கு சிறிய வண்டி போதும் என்று கூறப்பட்டது. ஆனால், இல்லை. மேலிடப் பிரதிநிதிகளுக்கு நல்ல நம்பிக்கைக்குரிய வண்டி இருக்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் நிம்மதியாக பயணம் செய்ய முடியும் என்று அன்னார் கூறிவிட்டார்கள். மேலும் அன்னார் கூறினார்கள்: நான் இந்த தொகையை எனது பழைய பிராஜக்ட்டின் பத்திரம் பதிவிற்காக வைத்திருந்தேன். ஆனால், தாங்கள் வந்ததன் காரணமாக வக்ஃபே ஜதீதில் கொடுத்துவிட்டேன். மேலும் பதிவு செய்வதற்கான தேதியை தள்ளிப் போட்டுவிட்டேன்.

சில நாட்களுக்கு பிறகு, அன்னார் கூறுகின்றார்கள்: ஒரு பெரும் தொகை எந்த சிறப்பான முயற்சியும் செய்யாமலேயே அன்னாருக்கு கிடைத்துவிட்டது. அவை அன்னாரின் தேவையை பூர்த்தி செய்வதற்கு தேவையான தொகையைக் காட்டிலும் பல மடங்கு அதிகமானதாக இருந்தது. பத்து லட்சத்தைக் காட்டிலும் மிக அதிகமான தொகையாக இருந்தது.

மொரிசீயஸைச் சேர்ந்த மிஸ் ஷிப்ரீஸ் என்ற ஒரு சகோதரி இருக்கின்றார்கள். அன்னார் கூறுகின்றார்கள்:

எனக்கு எனது பெற்றோரிடமிருந்து பிறந்த நாள் அன்பளிப்பாக பணம் கிடைத்தது. நான் வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீத் சந்தாவில் ஐநூறு, ஐநூறு ரூபாய் கொடுப்பதற்கு முடிவெடுத்தென். நான் அதனை ஒரு கவரில் வைத்திருந்தேன். அந்தநேரத்தில் நான் நோய்வாய்பட்டிருந்தேன். இதற்கிடையில் எனது ஒரு சிறிய தந்தையாரும், எனது சகோதரியும் என்னை சந்திக்க வந்தனர். இருவரும் எனக்கு அன்பளிப்பாக கவர் ஒன்றைக் கொடுத்தார்கள். அந்த ஒவ்வொரு கவரிலும் ஐந்தாயிரம், ஐந்தாயிரம் இருந்தது. அதை பார்த்த நான், அல்லாஹ் இதை விட பத்து மடங்கு அதிகமாக எனக்கு அன்பளிப்பு வழங்கிவிட்டான் என்று வியந்து போனேன்.

அடுத்து, ஜார்ஜியாவின் ஜமாஅத் சதர் ஸாஹிப் கூறுகின்றார்கள்: முஹம்மது அபூ ஹமாத் ஸாஹிப் என்ற ஓர் உறுப்பினர் இருக்கின்றார். அவர் பாலஸ்தீனத்தைச் சேர்ந்தவர் ஆவார். அவர் ஜார்ஜியாவில் மருத்துவக் கல்லூரி மாணவராக கல்வி பயின்று வருகிறார். மூன்று ஆண்டுகளுக்கு முன்பு அவர் பைஅத் செய்தார். அல்லாஹ்வின் வழியில் இவ்வாறு செலவிட வேண்டும் என்று வக்ஃபே ஜதீத் சந்தா கருத்தரங்கம் ஒன்றை ஜமாஅத் நடத்தியது.

ஆக, அவர் கூறுகின்றார்: அந்தநேரத்தில் என்னிடம் சுமார் முந்நூறு டாலர்கள் இருந்தன. நான் இதிலிருந்து பாதியை வக்ஃபே ஜதீதில் கொடுத்து விடுவேன் என்று முடிவெடுத்தேன். ஏனெனில், எனக்கு

قَدْ أَفْلَحَ مَن زَكَّاهَا

என்ற அந்த வசனம் நினைவுக்கு வருகிறது.

பொருள்: தூய்மையானவர் வெற்றி பெற்றுவிட்டார். (அஷ் ஷம்ஸ்: 10)

ஆக, சந்தா செலுத்திவிட்டு, சாதாரண செலவினங்களை செய்த பிறகு எனது வங்கிக் கணக்கில் மாதத்தின் இறுதியில் இரண்டு டாலர்கள் மட்டுமே எஞ்சியிருந்தது.

அவர் மாணவராகவே இருக்கின்றார்.

டிசம்பரின் இறுதியில் எனது உறவினர்கள் பாலஸ்தீனத்திலிருந்து ஜார்ஜியா வரவிருந்தனர். அவர்களுக்கு எவ்வாறு என்னால் விருந்து உபசரிப்பு செய்ய முடியும்? என்ற கவலையே எனக்கு இருந்தது. ஆனால், விருந்தினர்கள் வந்த நாளன்று அல்லாஹ் தனது சிறப்பான அருளினால் வங்கிக் கணக்கில் ஏதோ ஒரு வழிமுறையின் மூலமாக ஓராயிரம் டாலரை டிரான்ஸ்ஃபர் செய்ய வைத்துவிட்டான்.

கூறுகின்றார்: அதற்காக நான் அல்லாஹ்விற்கு எப்போதும் நன்றி செலுத்துகின்றேன். மேலும் இதனையும் சந்தாவின் பரக்கத்தாக நான் கருதுகிறேன்.

எண்ணத்தை பொருத்து விஷயம் உள்ளது. உலகவாதியின் சிந்தனை மாற்றமாக இருக்கும். ஆனால், அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதன் காரணமாக அவனது அருள் கிடைத்து வருகின்றது என்றே ஒரு மார்க்கவாதி சிந்திப்பார்.

கென்யாவின் முஅல்லிம் சாஹிப் எழுதுகின்றார்: எங்களது ஜமாஅத்தில் கதீஜா என்ற ஒரு புதிய அஹ்மதிப் பெண்மணி இருக்கின்றார். அவர் சிறுவர் பள்ளிக்கூடத்தின் ஆசிரியர் ஆவார். ஆண்டின் துவக்கத்தில் ஐநூறு ஷிலிங் தொகையை வக்ஃபே ஜதீதின் வாக்குறுதியாக எழுதினார். அதனை கொடுத்தும் விட்டார்.

கூறுகின்றார்கள்: அவருக்கு ரசீது கொடுப்பதற்காக நான் பள்ளிக்கூடம் சென்றேன். எனவே அடுத்த நாள் அவர் எனது வீட்டிற்கு வந்தார். மேலும், இன்னும் கூடுதலாக ஐநூறு ஷலின்ங் தொகையை சந்தாவாக நான் கொடுக்க விரும்புகின்றேன். மேலும் மொத்த தொகை ஆயிரமாக ஆகிவிட வேண்டும் என்பது எனது விருப்பம் ஆகும் என்று எனது மனைவியிடம் அவர் கூறினார்.

அல்லாஹ் இன்னும் பரக்கத் செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் நான் இதனை செய்கின்றேன் என்று அவர் கூறினார்.

நான் வீட்டிற்கு வந்தபோது, மனைவி என்னிடம் அதனை கூறினார். எனவே, நான் மீண்டும் ரசீது கொடுத்தேன். கூறுகின்றார்கள். நான் ரசீது கொடுப்பதற்காக சென்றேன். அப்போது, எனக்கு ஒரு மகன் இருக்கின்றார். அவர் கல்லூரியில் படிக்கின்றார். அவரது செலவினங்களுக்காக நான் விண்ணப்பம் கொடுத்திருந்தேன். அது ஏற்றுக் கொள்ளப்படாமல் இருந்தது. ஆனால், அவருடைய (கல்விச்) செலவு முப்பதாயிரம் ஷிலின்ங் அரசாங்கம் சார்பாக ஸ்கூல் வங்கிக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுவிட்டது என்று எனக்கு இன்றுதான் கல்லூரியிலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது என அந்தப் பெண்மணி என்னிடம் கூறினார். மேலும், இந்த விஷயத்தால் எனக்கு மிகவும் நிம்மதி கிடைத்துள்ளது என்றும் அந்தப் பெண்மணி கூறினார்.

இந்தோனேஷியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: அப்துர் ரஹீம் சாஹிப் என்பவர் (இங்கு) ஒரு ஜமாஅத்தைச் சார்ந்தவர் ஆவார். அந்த ஜமாஅத் சிறிய ஜமாஅத் ஆகும். அவர் கூறுகின்றார்: ஒவ்வொரு ஆண்டும் வக்ஃபே ஜதீத் வாக்குறுதியை நான் செலுத்தி வருகின்றேன். 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டு எனக்கு மிகவும் கஷ்டமான ஆண்டாக இருந்தது. ஏனெனில், அந்த ஆண்டில் எனக்கு வேலை எதுவும் கிடைக்கவில்லை. சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் நான் வேலையை ராஜினாமா செய்தேன். மேலும், வியாபாரம் செய்வதற்கு முயற்சி செய்தேன். அதிலும் எனக்கு வெற்றி கிடைக்கவில்லை. எஞ்சியிருந்த பணம் கொஞ்சம் கொஞ்சமாக முடிந்து விட்டது. வக்ஃபே ஜதீத் ஆண்டு முடிவடைந்து கொண்டிருந்தது. சந்தாவிற்கான வாக்குறுதியை நான் வழங்கியிருந்தேன். சந்தா கொடுப்பதற்கு எந்த சூழலும் உருவாகாமல் இருந்தது. வேலை கிடைப்பதும் கஷ்டமாக இருந்து வந்தது. ஏனெனில், எனது வயது 51 ஆகும். இந்த வயதில் வேலை கிடைப்பது மிகவும் கடினம் ஆகும். கூறுகின்றார்: ஒவ்வொரு நாளும் தஹஜ்ஜுத் தொழுகையில் நான் துஆ செய்து கொண்டிருந்தேன்.

வக்ஃபே ஜதீத் சந்தா கொடுக்க வேண்டும். அதற்கு எனக்கு நற்பேறு கிடைத்து விட வேண்டும் என்பதற்காக துஆ செய்யுங்கள் என்று இங்கு எனக்கும் அன்னார் கடிதம் எழுதி வந்தார்கள்.

ஆக, அவர் கூறுகின்றார்: வக்ஃபே ஜதீத் வருடம் முடிவடைவதற்குள் எனது வாக்குறுதிக்கேற்ப சந்தா கொடுப்பதற்கு அல்லாஹ் எப்படியோ எனக்கு நற்பேறு வழங்கிவிட்டான். எவ்வாறிருப்பினும், நான் எப்படியோ அந்த தொகையை செலுத்திவிட்டேன். சந்தா கொடுத்து சில நாட்களுக்கு பிறகு, எங்கு நான் முன்னர் வேலை பார்த்து வந்தேனோ அந்த நிறுவனத்தின் (எனது) முன்னாள் அதிகாரியின் தொலைபேசி அழைப்பு வந்தது. நேர்முகத் தேர்விற்கு வரும்படி என்னிடம் கூறப்பட்டது. எனவே, எனக்கு வேலை கிடைத்துவிட்டதற்காக நான் அல்லாஹ்விற்கு நன்றி செலுத்தினேன். நான் வியந்துபோனேன். ஏனெனில், என்னை அழைத்த நபர் எனது டைரக்டர் சூப்பர்வைஸர் கிடையாது. நான் மட்டுமே ஏன் அழைக்கப்பட்டேன்? என்று எனது நண்பரும் குழப்பத்தில் இருந்தார். ஏனென்றால், நான் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே அங்கிருந்து ராஜினாமா செய்திருந்தேன்.

அவர் கூறுகின்றார்: எனது நிரந்தரமான வருமானம் இந்த வயதிலேயே ஆரம்பமாகிவிட்டது என்பதும் அல்லாஹ்வின் அருளாகும்.

செனிகால் நாட்டில் தாம்பாகோன்டா (Tamacounda) என்ற இடம் உள்ளது. அங்கிருந்து முபல்லிக் கூறுகின்றார்: எனது சுற்றுப் பயணத்தின்போது ஓரிடத்தில் சந்தா கொடுக்கும்படி கூறப்பட்டது.

மேலும் கடந்த குத்பாவில் நான் எடுத்துரைத்த மக்களின் சம்பவங்கள் அவர்களுக்கு கூறப்பட்டது. அப்போது உஸ்மான் என்ற ஓர் அஹ்மதி கூறினார்: அவர் பைஅத் செய்தபோது, அவருடைய பொருளாதார நிலை மிகவும் மோசமாக இருந்தது. பைஅத்திற்கு பிறகு, அவரை அறிந்தவர்களும், அந்நியர்களும் அனைவருமே எதிரிகளாகிவிட்டனர். நான்கு முறை எதிரிகள் அவரது வீட்டை எரிப்பதற்கு முயற்சி செய்தனர். ஒவ்வொரு முறையும் வீட்டின் ஒரு பகுதி எரிந்துபோனது. அவர் கூறுகின்றார்: ஆனால், நான் ஜமாஅத்தின் சந்தாக்களில் பங்கு பெற்றதிலிருந்து எனது மோசமான பொருளாதார நிலை நீங்கியது.

சந்தாக்களின் பரக்கத்துகளின் காரணமாக தற்போது அவர் தனக்கு சொந்தமாக ஒரு நல்ல உறுதியான வீட்டை கட்டியுள்ளார். முன்னர் சிறிது புல் மற்றும் வைக்கோலால் வீடு அமைந்திருந்தது. ஆனால், தற்போது உறுதியான வீட்டை கட்டிவிட்டார். பிள்ளைகளும் நகரத்தில் நல்ல கல்வி பயின்று வருகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் ஏனைய சந்தாக்களைப் போன்று வக்ஃபே ஜதீத் சந்தாவை குறிப்பிடத்தக்க அளவில் உயர்த்தி அதனை செலுத்தியும் விட்டார்கள். கூறுகின்றார்கள்: எனது எதிரிகள் அனைவரும் ஒன்று அவர்கள் மரணித்துவிட்டனர் அல்லது உயிருடனேயே இருந்தாலும் கூட மிகவும் மோசமான நிலையில் உள்ளனர்.

தன்ஸானியா அமீர் சாஹிப் ஒரு விவசாயினுடைய சம்பவத்தை எழுதுகின்றார்கள்:

அவருடைய உருளைக் கிழங்கு வயல் உள்ளது. விக்டோரியா ஏரியிலிருந்து தண்ணீர் தேக்கப்பட்டு வயலுக்கு நீர் பாய்ச்சப்படுகிறது. அதற்காக வாடகைக்கு மிஷன்களும், பம்புகளும் வாங்க வேண்டியது ஏற்படுகின்றது. கூறுகின்றார்கள்: இந்த வருடம் குறைவான மழையே பெய்தது. வயல்களின் நிலை மிக மோசமான ஆகிவிட்டது. அன்னாரின் வயலுக்கு அருகில் உள்ள நிலம் இருந்த விவசாயிகள் அன்னாரைப் பார்த்து உமது வயலின் நிலை இப்படி உள்ளதே என்று சிரித்து வந்தனர்.

எவ்வாறிருப்பினும், கூறுகின்றார்கள்: முஅல்லிம் எனக்கு சந்தாக்களின் பக்கம் கவனமூட்டினார். எனவே என்னிடம் இருந்த ஓராயிரம் ஷிலின்ங் தொகையை கொடுத்துவிட்டேன். பின்னர் முஅல்லிம் சாஹிப் ரசீது கொடுத்தார். அடுத்தநாள் அவர் மஜ்லிஸே ஆமிலா கூட்டத்திற்கு வந்தார். அப்போது, நான்

**நபிமொழியிலிருந்து...**

சொர்க்கத்தின் வாசல்களில் ஒரு வாசலின் பெயர் தர்மத்தின் வாசல் ஆகும். தான, தர்மங்கள் செய்யக்கூடியவர்கள் அதன் வழியாக நுழைவர். (முஸ்லிம்)

S.S.H. Muhammed Lebbai
(Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை வணங்குவதற்காகவே படைத்துள்ளேன். (51:57)

A. Nasir Ahmad
(District Ameer, Melapalayam)

**திருக்குர்ஆனிலிருந்து...**

அவர்கள் இரவு நேரத்தில் குறைவாகவே துயில் கொண்டனர். (54:18)

A. Shamsul Alam
(Gen.Sec. Melapalayam)

செய்த வியாபாரத்திற்கு நற்கூலி கிடைத்துவிட்டது என்று அவர் முஅல்லிம் சாஹிபிடம் கூறினார். ஏனெனில், இந்த பருவத்தின் முதல் மழை எனது வயலிலேயே விழுந்துள்ளது. மேலும், தண்ணீரும் நிறைந்துவிட்டது. எனவே அல்லாஹ் இவ்வாறு எனக்கு அருளிவிட்டான் என்று அவர் கூறினார்.

ஸிராலியோனிலிருந்து முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: அலெக்ஸ்டாமு (Alextamu) என்ற சகோதரர் ஆசிரியராகவும், ஆராய்ச்சியாளராகவும் இருக்கின்றார். அவர் ஸிராலியோனீ ஆவார். அவர் கூறுகின்றார்: என்னுடைய வஸிய்யத் சந்தா மற்றும் இதர சந்தாக்களில் கொஞ்சம் பாக்கி ஆகிவிட்டது. ஏனெனில், கடந்த வருடம் சில அரசாங்க விவகாரங்களின் காரணமாக நிறுவனம் சம்பளம் கொடுப்பதில் மிகவும் காலதாமதம் செய்துவிட்டது. மேலும் சிலகாலம் வரை வாழ்க்கை மிகவும் கடினமானதாக ஆகிவிட்டது. எவ்வாறு இருப்பினும், அவர் எங்கிருந்தோ தொகையை பெற்று உடனடியாக ஏற்பாடு செய்துவிட்டார். மேலும் கஷ்டமான சூழ்நிலையிலும் வஸிய்யத் சந்தா மற்றும் இதர சந்தாக்களை கொடுத்துவிட்டார்.

அவர் கூறுகின்றார்: சந்தா கொடுத்து முடித்த பிறகு, முதலில் அரிசி குறித்த ஓர் ஆராய்ச்சித் திட்டத்தில் கினிகனாகரி குழுவில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன். பின்னர் பெரிய ஃபிரன்ஷெட் வீடும் கிடைத்துவிட்டது. பின்னர் 2022 யூ.கே ஜல்ஸாவிற்கு முன்னதாக வீட்டில் mta வைப்பதற்கும் எனக்கு நற்பேறு கிடைத்தது. பின்னர், எல்லாவற்றையும் விட கிடைத்த மாபெரும் அருள் என்னவென்றால், ஜப்பானில் காகோஷிமா (Kogashima) யூனிவர்சிட்டியில் பி.எச்.டி செய்வதற்கு எனக்கு ஸ்காலர்ஷிப் கிடைத்தது.

எனவே கூறுகின்றார்கள்: கடந்த வருடம் நான் விண்ணப்பித்திருந்தேன். எனவே நிறுவனத்தின் சார்பாக எனக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது. மேலும், நான் அங்கு செல்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டேன்.

கூறுகின்றார்கள்: ஆக, நான் கடந்த வருடத்திலிருந்து ஜப்பானில் வசித்து வருகிறேன். ஜப்பானிலும் அல்லாஹ்வின் அருளினால் ஜமாஅத்துடன் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. அல்லாஹ் இவ்வாறும் அருள் செய்துள்ளான். அதாவது, நிறுவனத்தின் சார்பாக எனது குடும்பத்திற்கு வீடு மட்டும் கிடைக்கவில்லை. மாறாக, வருமானத்தின் ஒரு பகுதியை அங்கு ஸிராலியோனில் குடும்பத்திற்கு நிறுவனம் வழங்கி வருகிறது.

எவ்வாறிருப்பினும், கூறுகின்றார்கள்: இந்த விஷயம் எனக்கு ஈமானை அதிகப்படுத்திக் கொள்வதற்கு காரணியாக அமைந்துள்ளது. அதாவது, சந்தாவின் பரக்கத்துகளின் காரணமாக அல்லாஹ் என் மீது இந்த அருளை செய்துள்ளான்.

அஹ்மதிகளிடம் இன்னும் கூறப்போனால், புதிய அஹ்மதிகளிடம் அல்லாஹ்விற்காக செல்வத்தின் மீதான நேசத்திலிருந்து விலகியிருப்பதற்கான இன்னும் அதிகமான உதாரணங்கள் நமக்கு தென்படுகின்றன.

ஆக, ஸிராலியோனின் மியாம்பா (Moyamba) மண்டலத்தின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: குத்பாவின் போது வக்ஃபே ஜதீத் தொடர்பாக கவனமூட்டப்பட்டது. அதாவது, ஒரு முறை ஒரு ஸஹாபி கோடாளியை எடுத்துக் கொண்டு காட்டிற்கு சென்றுவிட்டார். மேலும் விறகு வெட்டி கொண்டு வந்தார். மேலும் அதனை விற்பனை செய்து அதில் கிடைத்த தொகையை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களிடம் கொடுத்துவிட்டார் என்று அதில் கூறப்பட்டது.

கூறுகின்றார்கள்: இங்கு அருகில் டோடு (Dodo) என்ற ஒரு கிராமம் உள்ளது. அங்கிருந்து அஹ்மதிகள் ஜுமுஆ தொழுகைக்கு வருகின்றனர். அவர்களில் ஒரு தூய அஹ்மதியான காஸிம் சாஹிப் ஒருநாள் கடுமையான வெப்பமான மதியவேளையில் வந்தார். ஒரு பெரும் தொகையை கொடுத்துவிட்டு, இது எனது முழு வருமானம் ஆகும். இதனை நான் வக்ஃபே ஜதீத் திட்டத்தில் கொடுக்கின்றேன் என்று கூறினார். இதிலிருந்து கொஞ்சம் மாத செலவினங்களுக்காக வைத்துக் கொள்ளுங்கள் என்று அவரிடம் கூறப்பட்டது. அப்போது, நீங்கள் எந்த நாளில் ஸஹாபியின் சம்பவத்தைக் கூறினீர்களோ நான் அந்த நாளிலிருந்து உறுதி எடுத்துவிட்டேன். அதாவது இந்த சம்பவத்திற்கேற்ப அமல் செய்ய வேண்டும் என நான் தீர்மானித்தேன். எனவே முழு தொகையையும் நீங்கள் வைத்துக் கொள்ளுங்கள். அல்லாஹ் எனக்கு சுயமே வழங்குவான் என்று மிகவும் உணர்ச்சி பொங்க கூறினார்.

அடுத்து, தன்ஸானியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஷான்கார் மண்டலத்தின் முஅல்லிம் இவ்வாறு கூறினார்: அங்கு சிம்பாசாயீ (simbachai) என்ற ஒரு கிராமம் உள்ளது. இது புதிய இடமாகும். ஜமாஅத்தின் புதிய செடி நடப்பட்டுள்ளது. அதாவது ஜமாஅத் புதிதாக அங்கு நிறுவப்பட்டுள்ளது. டிசம்பர் வரை 49 நபர்கள் பைஅத் செய்து ஜமாஅத்தில் இணைந்திருக்கின்றனர். கடந்த மாதம்தான் இந்த ஜமாஅத் நிறுவப்பட்டுள்ளது.

முஅல்லிம் சாஹிப் கூறுகின்றார்கள்: நான் டிசம்பரில் எனது பகுதிகளில் உள்ள ஜமாஅத்துகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தேன். அந்த புதிய ஜமாஅத்திற்கும் சென்றிருந்தேன்.

அங்கு பைஅத் செய்தவர்களில் பெரும்பாலோர் முன்னர் மார்க்கமற்றவர்களாக இருந்தனர். மார்க்கத்துடன் அவர்களுக்கு எந்த தொடர்பும் இருந்திருக்கவில்லை. எனவே தர்பிய்யத் வழங்குவதற்கு தொழுகை மற்றும் திருக்குர்ஆன் பக்கம் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. லுஹர் தொழுகைக்குப் பிறகு தர்பிய்யத் வகுப்பு நடந்தது. அதில் முஅல்லிம் சாஹிப் தொழுகை விளக்கம் மற்றும் அதன் வழிமுறைகளையும் இதர விஷயங்களும் கூறப்பட்டன. முதிய அஹ்மதி ஒருவர் முஅல்லிம் சாஹிப் அவர்களின் பையில் ரசீது புக் இருப்பதைக் கண்டார். மேலும், அதைக் குறித்து கேள்வி கேட்டார். இது வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான கடைசி மாதமாகும். வாக்குறுதிகளுக்கேற்ப நாங்கள் வசூல் செய்து தலைமையகத்திற்கு ரிப்போர்ட் அனுப்ப வேண்டும் அப்போதுதான் எங்களது அறிக்கை கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு கிடைக்கும். எந்த அஹ்மதி எல்லாம் இந்த சந்தாவில் இணைந்திருப்பாரோ அவருக்கு அதற்குரிய ரசீது இதிலிருந்து கொடுக்கப்படும் என்று முஅல்லிம் சாஹிப் அவரிடம் கூறினார்கள். அப்போது, எங்களுடைய சந்தாவை எப்போது வாங்குவீர்கள்? என்று மற்றோர் அஹ்மதி கேட்டார். அதற்கு, உங்களுடைய நிலைமைகள் கஷ்டமாக உள்ளது. இப்போதுதான் புதிதாக அஹ்மதி ஆகியுள்ளீர்கள். தர்பிய்யத்திற்கான தேவை உள்ளது. எனவே அடுத்த வருடம் உங்களை சந்தாவில் இணைத்துக் கொள்ளலாம் என்பது எனது எண்ணமாகும் என்று முஅல்லிம் சாஹிப் கூறினார். அப்போது, அப்படியென்றால், இந்த வருடம் எங்களது பெயர் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களுக்கு அனுப்பப்படாதா? அவ்வாறு நடக்கக் கூடாது! என்று அனைத்து புதிய அஹ்மதிகளும் கூறினர். அப்போது அங்கிருந்த அனைத்து உறுப்பினர்களும் தங்களிடம் இருந்தவற்றை கொடுத்துவிட்டார்கள்.

நான் அங்கிருந்து புறப்பட்டபோது, முஅல்லிம் சாஹிப்! அடுத்த வருடத்திற்கான வாக்குறுதிகளையும் எங்களிடமிருந்து பெற்று செல்லுங்கள் என்று அவர்கள் கூறினர். எனவே, அவர்கள் புதிய ஆண்டிற்கான வக்ஃபே ஜதீத் சந்தாவிற்கான வாக்குறுதிகளையும் எழுதிக் கொடுத்தனர்.

ஆக, புதிய அஹ்மதிகளிடமும் அல்லாஹ் இவ்வாறு ஈமானை உருவாக்குகின்றான். இவ்வாறு அவர்களை ஈமானால் நிறைத்து வருகின்றான்.

கேம்பியாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: நார்த் பேங்குடைய தூதாபாலூ (Dutabulu) என்ற ஒரு ஜமாஅத்தின் ஜாலூ (jallow) சாஹிப் என்ற ஓர் அஹ்மதி நண்பர் இருக்கின்றார். அவருடைய தந்தையார் அஹ்மதி கிடையாது. அவர் கிராமத்தின் தலைவர் ஆவார். மிகவும் வயது முதிர்ந்தவர் ஆவார். நோயாளியாக இருக்கின்றார். எனவே அவரது இடத்தில் அஹ்மதியான அவரது மகன் கிராமத்தின் விவகாரங்களை கவனித்து வந்தார்.

அவர் கூறுகின்றார்: ஒரு நாள் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனம் அவரது கிராமத்திற்கு வந்தது. அவர்கள் பதினைந்தாயிரம் டலாஸி தொகையின் மூலமாக முஸ்லிம்களுக்கு உதவி செய்துவந்தனர்.

கூறுகின்றார்:

நாங்கள் உங்களைப் பற்றி கேள்விப்பட்டோம். நீங்கள் மிகவும் நல்ல, கண்ணியமான மனிதராவீர்கள். நாங்கள் உங்களுக்கும், உங்களது தந்தையாருக்கும் உதவித் தொகையாக முப்பதாயிரம் டலாஸி தொகையை கொடுக்க விரும்புகிறோம். ஆனால், சிக்கல் என்னவென்றால், நீங்கள் அஹ்மதியாக இருப்பது தான். நீங்கள் ஜமாஅத்தை விட்டு விலகிவிட்டால் உங்களுக்கு இந்த தொகை கிடைத்துவிடும் என்று அவர்கள் என்னிடம் தொலைபேசியில் கூறினர்.

அதற்கு ஜாலூ சாஹிப் அந்த தொண்டு நிறுவனத்திடம் இவ்வாறு பதிலளித்தார்கள்:

எனக்கு பணத்திற்கு எந்த அவசியமுமில்லை. ஏனெனில், அல்லாஹ் தனது அடியார்களுக்கு போதுமானவன் என்று ஜமாஅத் எங்களுக்கு கற்றுத் தந்துள்ளது. நான் ஒவ்வொரு வருடமும் பதினைந்தாயிரம் டலாஸி சந்தா கொடுத்து வருகின்றேன்.

இதைக் கேட்டுவிட்டு அவர்கள் மிகவும் ஆச்சரியம் அடைந்து விட்டார்கள். நீங்கள் சுயமே ஏழையாக இருக்கும்போது இவ்வளவு பெரும் தொகையை நீங்கள் ஏன் கொடுக்கின்றீர்கள்? அவர்கள் கேட்டனர். அதற்கு, நான் பெற்று வரும் அல்லாஹ்வின் அருட்கொடைகள் மற்றும் திருப்தியைக் குறித்து நீங்கள் அறிந்துவிட்டால் பின்னர் நீங்களும் இமாம் மஹ்தி (அலை) அவர்களின் ஜமாத்தின் அங்கமாக ஆகிவிடுவீர்கள் என்று அந்த அஹ்மதி அவர்களுக்கு பதில் அளித்தார்.

ஆக, இதுவே ஈமானிய நிலையாகும். இதனை அல்லாஹ் இந்த தொலை தூர பகுதிகளில் வசித்து வரும் மக்களின் உள்ளங்களில் உருவாக்கி வருகின்றான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை பேரன்பரை ஏற்றுக் கொண்ட பிறகு அவர்கள் ஈமானில் மேலும், மேலும் உறுதிவாய்ந்தவர்களாக ஆகி வருகின்றனர்.

கான்கோ கன்ஷாஸாவின் அமீர் சாஹிப் எழுதுகின்றார்கள்: ஜுமுஆ குத்பாவின்போது, வக்ஃபே ஜதீத் சந்தா தொடர்பாக அறிவுறுத்தப்பட்டது. அதே நாளில், காவல் துறையில் பணி செய்து வரும் ஒரு தூய அஹ்மதியான நூருத்தீன் சாஹிப் அவர்கள், நமது முஅல்லிம் சாஹிபை ஃபோன் செய்து

வீட்டிற்கு அழைத்தார்கள். மேலும், நான் சிறிது காலமாக கொஞ்சம் தொகையை அவசரத் தேவைக்காக சேமித்து வைத்திருந்தேன். ஆனால், இன்று ஜுமுஆ குத்பாவில் முரப்பி சாஹிப் வக்ஃபே ஜதீத் சந்தா கொடுப்பதன் பக்கம் கவனமூட்டினார்கள். எனவே நான் இந்த தொகையை வைத்துக் கொள்ளுங்கள் என்று கூறினார்.

மேலும், அவர் வக்ஃபே ஜதீதில் இரண்டு லட்சத்து பத்தாயிரம் ஃபிரான்க் தொகையை அவர் செலுத்தினார்.

அது அவர்களை பொருத்த வரை மிகவும் அசாதாரண தியாகம் ஆகும்.

ஆக, இதுதான் நேசம் கொள்ளக்கூடியவர்கள் செல்வத்தை அல்லாஹ்வின் வழியில் செலவிடுவதற்கான உதாரணமாகும்.

மெஸடோனியாவின் முபல்லிக் சாஹிப் எழுதுகின்றார்கள்: இங்கு அஹ்மதிகளின் பெரும்பான்மை மிகவும் ஏழைகளைக் கொண்டதாக உள்ளது. ஆனால், அவ்வாறிருந்தபோதிலும், அவர்கள் பொருள் தியாகத்தில் பங்கு பெறுகின்றனர். ஃபைஸல் என்ற ஓர் அஹ்மதி சகோதரர் இருக்கின்றார். அவர் 1955 ஆம் ஆண்டு, ஜெர்மனியில் பைஅத் செய்தார். பல்வேறு நாடுகளில் வசித்து வந்தார். பிறகு மெஸடோனியாவிற்கு திரும்பி வந்துவிட்டார். துவக்கத்தில் அவருக்கு ஜமாஅத்துடன் மிக குறைந்த அளவில் தான் தொடர்பு இருந்தது. பின்னர் அவருடன் தொடர்பு ஏற்பட்டது. கடந்த ஈதுல் அழ்ஹா சந்தர்ப்பத்தில் அவர் மிஷன் ஹவுஸில் இரண்டு மூன்று நாட்கள் தங்கியிருந்தார். அப்போது, அவருக்கு ஜமாஅத்தின் பொருளாதார அமைப்புக் குறித்து கூறப்பட்டது. கட்டாயச் சந்தாக்கள் மட்டுமின்றி, ஏனைய பொருள் தியாகங்கள், தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீத் குறித்து கூறப்பட்டது.

கூறுகின்றார்கள்: பத்து, பனிரெண்டு நாட்களுக்கு பிறகு நான் அவரை சந்திப்பதற்காக நகரத்திற்கு சென்றேன். அப்போது நான் அவரிடமிருந்து புறப்பட்டபோது அவர் என்னிடம் பத்தாயிரம் தீனார் தொகையை சந்தாவாக கொடுத்தார். அது சுமார் 63 யூரோ என்ற அடிப்படையில் சாதாரண தொகை தான் என்று அவர் கூறினார்.

அந்த நண்பர் வேலை வாய்ப்பு இல்லாத நபர் ஆவார். நீண்ட காலமாக வேலை செய்யவில்லை.

நீங்கள் உங்களுடைய சூழ்நிலையை அறிவீர்கள். நீங்கள் உங்கள் சூழ்நிலைக்கேற்ப சிறிது வைத்துக் கொள்ளுங்கள். மேலும் குடும்பத்திற்காக செலவிடுங்கள் என்று நான் அவரிடம் கூறினேன்.

ஏனெனில் மெஸடோனியாவின் நிலைமையின் அடிப்படையில் அது மிகவும் பெரிய தொகையாகும். ஆனால், அல்லாஹ் எனக்கு ஏற்பாடு செய்து விடுவான் என்று கூறியவாறு அவர் பிடிவாதத்துடனும், மகிழ்ச்சியுடனும் தன் சார்பாகவும், தனது குடும்பத்தினர் சார்பாகவும் அந்த தொகையை வக்ஃபே ஜதீத் சந்தாவில் கொடுத்துவிட்டார்.

ஆக, எவ்வாறிருப்பினும் இந்த மக்கள் தியாகம் செய்யக்கூடியவர்கள். செல்வம் அவர்களுக்கு தேவைப்படுகிறது. ஆனால், அதனை அவர்கள் அல்லாஹ்வின் வழியில் கொடுக்கக் கூடியவர்கள் ஆவர்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்: நீங்கள் செல்வத்துடன் நேசம் கொள்வதும் இறைவன் மீது நேசம் கொள்வதும் உங்களுக்கு சாத்தியமில்லை. ஏதாவது ஒன்றின் மீது மட்டுமே நேசம் கொள்ள முடியும்.

எனவே இறைவன் மீது நேசம் கொள்பவர் நற்பேறு பெற்றவர் ஆவார். உங்களில் ஒருவர் இறைவன் மீது நேசம் கொண்டு அவனது வழியில் செல்வத்தை செலவு செய்வார் என்றால், அவரது செல்வத்திலும் மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக அருட்கள் வழங்கப்படும் என்று நான் நம்பிக்கை கொள்கிறேன். ஏனெனில், செல்வம் தானாக வருவதில்லை. மாறாக, இறைவனின் நாட்டத்தால் வருகிறது. எனவே, எந்த நபர் இறைவனுக்காக செல்வத்தின் சில பகுதியை விட்டு விடுகின்றாரோ அவர் நிச்சயம் அதனை பெற்றுக் கொள்வார். (மஜ்மூஆஃ இஷ்திஹாராத், தொகுதி 3, பக்கம் 323, நஷ்ரோ இஷாஅத் காதியான், 2019)

எனவே (பொருள்) தியாகம் செய்யும் ஒவ்வொரு அஹ்மதியும், செல்வம் இறைவன் புறமிருந்து வருகின்றது என்ற விஷயத்திற்கு சாட்சியாக திகழ்கின்றார். அன்னார் (அலை) கூறிய விஷயம் முற்றிலும் உண்மையாகும். அல்லாஹ் இந்த தியாகங்களைச் செய்யக்கூடிய நபர்களின் தரத்தையும் அதிகரிப்பதற்கு நற்பேறு வழங்குவானாக. மேலும், பொருளாதார ரீதியில் எவர்கள் நல்ல நிலைமைகளில் இருக்கின்றனரோ மேலும் எவர்களின் தியாகத்தின் தரம் உயர்ந்ததாக இல்லையோ அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்தக் கூற்றை புரியக் கூடியவர்களாக இருக்க வேண்டும்.

அதாவது, அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: நான் மீண்டும், மீண்டும் கூறுகின்றேன். இறைவன் உங்களின் தொண்டுகளுக்கு சிறிதும் தேவையுடையவன் அல்லன். ஆயினும், உங்களுக்கு தொண்டாற்றுவதற்கு அவன் வாய்ப்பு வழங்குவது அவன் உங்கள் மீது செய்த அருள் ஆகும். (மஜ்முஆஃ இஷ்திஹாராத், தொகுதி 3, பக்கம் 324, நஸாரத் நஷ்ரோ இஷாஅத், காதியான் 2019)

கருமித்தனத்தைக் காட்டும் மக்கள் இதைக் குறித்து சிந்திக்க வேண்டும். அல்லாஹ் ஜமாஅத்தின் செல்வந்தர்களுக்கும் இந்த விஷயத்தை புரிவதற்கு நற்பேறு வழங்குவானாக.

இதன் பிறகு, இனி நான் கடந்த ஆண்டு வக்ஃபே ஜதீத் சந்தாவின் புள்ளி விவரங்களை எடுத்துரைத்து விடுகிறேன். அல்லாஹ்வின் அருளினால் வக்ஃபே ஜதீதுடைய 65 ஆவது ஆண்டு டிசம்பர் 31ம் தேதியுடன் நிறைவடைந்து விட்டது. ஜனவரி 1 ஆம் தேதியிலிருந்து புதிய ஆண்டு ஆரம்பமாகிவிட்டது. ஜமாஅத் 12.2 மில்லியனுக்கும் கூடுதலாக அதாவது ஒரு கோடியே இருபத்தி இரண்டு லட்சத்து பதினைந்தாயிரம் (1,22,15000) பவுன்ட்கள் பொருள் தியாகம் செய்துள்ளது. உலகத்தின் பொருளாதார நிலைமைகள் சிறந்ததாக இல்லாதபோதும் கடந்த ஆண்டைக் காட்டிலும் ஒன்பது லட்சத்து இருபத்தெட்டாயிரம் (9,28,000) பவுன்ட்கள் கூடுதல் ஆகும். அல்ஹம்துலில்லாஹ்

பிரிட்டன் இந்த ஆண்டும் உலகின் ஜமாஅத்களில் வசூலின் அடிப்படையில் முதலிடத்தில் உள்ளது. மேலும், பிரிட்டனிற்கு பிறகு இரண்டாம் இடத்தில் கனடா உள்ளது. பின்னர் ஜெர்மனி, ஜெர்மனி மூன்றாம் இடத்திற்கு சென்றுவிட்டது. பின்னர் அமெரிக்கா நான்காவது இடத்தில் உள்ளது. ஐந்தாவது இடத்தில் இந்தியா உள்ளது. பின்னர் ஆறாம் இடத்தில் ஆஸ்திரேலியா உள்ளது. பின்னர், ஏழாவது இடத்தில் மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத் ஆகும். பின்னர் எட்டாவது இடத்தில் இந்தோனேஷியா உள்ளது. பின்னர் மத்திய கிழக்கின் ஒரு ஜமாஅத் ஆகும். பத்தாவது இடத்தில் பெல்ஜியம் உள்ளது.

தனிநபர் சந்தா செலுத்துதலின் அடிப்படையில் அமெரிக்கா முதலிடத்தில் உள்ளது. சுவிட்சர்லாந்து இரண்டாம் இடத்தில் உள்ளது. பிரிட்டன் மூன்றாம் இடத்தில் உள்ளது. ஆஸ்திரேலியா நான்காவது இடத்தில் உள்ளது. மேலும் கனடா ஐந்தாவது இடத்தில் உள்ளது.

ஆஃப்ரிக்காவின் ஜமாஅத்துகளில் சிறப்பாக வசூல் செய்தவர்களில் கானா முதல் இடம் பெற்றுள்ளது. இரண்டாம் இடத்தில் மொரீசியஸ் உள்ளது. மூன்றாவது இடத்தில் நைஜீரியா உள்ளது. பர்கினாஃபோஸு நான்காவது இடத்தில் உள்ளது. ஐந்தாவது இடத்தில் தன்ஸானியா, ஆறாவது இடத்தில் லைபீரியா, ஏழாவது இடத்தில் கேம்பியா, எட்டாவது இடத்தில் உகண்டா, ஒன்பதாவது இடத்தில் ஸிராலியோன், பத்தாவது இடத்தில் பெனின்.

கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் இந்த வருடம் நல்லடியார்களில் அறுபத்தி ஓராயிரம் பேர் அதிகரித்துள்ளனர். ஒட்டுமொத்த எண்ணிக்கை பதினைந்து லட்சத்து ஆறாயிரம் (15,06000) ஆகிவிட்டது. கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்த நாடுகளில் முக்கிய இடம் பெற்றுள்ள நாடுகளில் கனடா முதலிடத்தில் உள்ளது. பின்னர் கேம்ரூன், பின்னர் கான்கோ பிரேசில், கான்கோ கன்ஷாஸா, பின்னர் இறுதியில் பங்களாதேஷ் உள்ளது. இவை குறிப்பிடத்தக்கவையாகும்.

வசூலின் அடிப்படையில் பிரிட்டனின் முதல் பத்து ஜமாஅத்துகள் உள்ளன. அவற்றில் ஃபிரன்ஹேம் (franham) முதல் இடம். வோஸ்டர்பார்க் (Worcester park) இரண்டாம் இடம். வால்ஷால் (Wallsall) மூன்றாம் இடம். இஸ்லாமாபாத் நான்காம் இடம். ஜில்நிகம் (Gillingham) ஐந்தாம் இடம். சவுத் சீம் (south cheam) ஆறாம் இடம். ஏழாம் இடம் அல்டர்ஷாட் சவுத் (Aldershot south). எட்டாம் இடம் பிரட்ஃபோர்ட், ஒன்பதாம் இடம் சீம் நவ், பத்தாம் இடம் ஈவல் (Ewell).

மண்டலங்கள் நிலைகள் இவையாகும். முதல் இடம் பைத்துல் ஃபுதூஹ், இரண்டாம் இடத்தில் இஸ்லாமாபாத். மூன்றாம் இடம் மஸ்ஜித் ஃபஸ்ல், நான்காம் இடம் மிடிலேண்ட்ஸ் ஐந்தாம் இடம் பைத்துல் இஹ்ஸான்.

அத்ஃபால் பதிவேட்டின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள்: அவற்றில் முதல் இடம்

அல்டர்ஷாட் சவுத் (Aldershot south). பின்னர் இஸ்லாமாபாத். பின்னர், வால்ஸால் (Wallsall) , பின்னர் ஃபர்ன்ஹேம் (franham) , பின்னர் ரோஹேம்டன் (Roehampon), அல்டர்ஷர்ட் நார்த் (Aldershot north) , பின்னர் மிசம் பார்க் (Mitcham Park), போர்டன், சவுத் சீம், பைத்துல் ஃபுதூஹ் (Baitul futuh).

சிறிய ஜமாஅத்துகளில் வசூலின் அடிப்படையில் ஐந்து ஜமாஅத்துகள்; ஸிபன் வேலி, கேத்லி, நார்த் வேல்ஸ், நார்த் ஹேம்ப்டன் மற்றும் ஸவான்ஸி.

கனடாவின் (முக்கிய இடம் பிடித்த) அமாரத்துகள்: வாகன் (vaughan) முதலிடத்தில் உள்ளது. வான்கூவர் (Vancouver) இரண்டாம் இடம். பின்னர் கேல்கரி (Calgary), பின்னர் பீஸ் வில்லேஜ் (Peace village), பின்னர், டொரன்டோ ( Toronto).

கனடாவின் பத்து பெரிய ஜமாஅத்துகள்: முன்னர் கூறப்பட்டவை அமாரத்துகள் ஆகும்.

மில்டன் வெஸ்ட் முதல் இடம், ஹதீகா அஹ்மது இரண்டாம் இடம், மில்டன் ஈஸ்ட் மூன்றாம் இடம், வின்னி பேக் நான்காம் இடம், ஸஸ்காடூன் பைத்துர் ரஹ்மத் ஐந்தாம் இடம், டர்ஹம் வெஸ்ட் ஆறாம் இடம், ஆடு

வெஸ்ட் ஏழாம் இடம், இனிஸ் ஃபில் எட்டாம் இடம், ரஜாயினா ஒன்பதாம் இடம், அப்போட்ஸ்ஃபோர்ட் பத்தாம் இடம்.

அத்ஃபால் பிரிவில் வாகன் முதல் இடம். பீஸ் வில்லேஜ் இரண்டாம் இடம். பின்னர்,டொரோன்டோ வெஸ்ட், பின்னர் கேல்கரி, பின்னர், பிராம்ப்டன் ஈஸ்ட்.

அத்ஃபால் பதிவேட்டில் சிறந்த ஐந்து ஜமாஅத்துகள்: முன்னர் அமாரத்துகள் கூறப்பட்டிருந்தன. தற்போது சிறிய ஜமாஅத்துகள். ஏர்டேரி, செயின்ட் கேத்தரின்ஸ், ஹதீகா அஹ்மது, இன்னிஸ் ஃபில், பிரட்ஃபோர்ட் ஈஸ்ட்.

ஜெர்மனியின் ஐந்து அமாரத்துகள்:

முதல் இடம் ஹேம்பர்க் (Hamburg), இரண்டாம் இடம் ஃபிரான்ங்ஃபர்ட் (Frankfurt), வேஸ்பாதன் (wiesbaden) மூன்றாம் இடம். பின்னர், குருஸ் கீராவ், பின்னர் ரெட்ஷெடட் (Reidstadt).

மேலும் பத்து ஜமாஅத்துகள்:

ரோடர்மார்க் (Rodermark), ரோட்காவ், பின்னர் மாயின்ஸ், ஹல்கா பைத்துர் ரஷீத், நோயிஸ், ஃபோலோ ஹாயிம், நேய்தா, மஹ்திஆபாத், ஃபிரட் பர்க் மற்றும் கூபெல்ன்ஸ்.

அத்ஃபால் பதிவேட்டில் ஐந்து மண்டலங்கள்: ஹேஸன் மேட்டே, ஹேஸன் சவுத் வெஸ்ட், ஹேம்பர்க், தாவன்ஸ் மற்றும் வேஸ்பாதன்.

அமெரிக்காவின் பத்து ஜமாஅத்துகள்: அவற்றில் முதல் இடம் மேரிலேண்ட், பின்னர் நார்த் வெர்ஜீனியா, பின்னர் லாஸ் ஏன்ஜல்ஸ், பின்னர் டெட்ரோய்ட், பின்னர் சிலக்கான் வேலி, பின்னர் போஸ்டன், பின்னர் ஆஸ்டன், பின்னர் ஓவ்ஷகோஷ், பின்னர் ரோசஸ்டர், பின்னர் ஃபோனிக்ஸ்.

அத்ஃபால் பதிவேட்டில் பத்து ஜமாஅத்துகள்: அவற்றில் சவுத் வெர்ஜீனியா, மேரிலேண்ட், ஸியாட்டில், ஓர்லேண்டோ, ஆஸ்டன், சிலக்கான்வேலி, ஓவ்ஷ்காஷ், சீயோன்.

பாகிஸ்தானின் முதல் மூன்று ஜமாத்துகள்:

பாகிஸ்தானில் அசாதாரண பொருளாதார நிலைமைகள் இருந்தபோதிலும், உள்ளூர் கரன்சியில் அவர்கள் போதுமான அளவு அதிகரித்துள்ளனர். பவுன்ட்டுடன் ஒப்பிடும்போதும் அவர்களின் கரன்சி மதிப்பு முற்றிலும் முடிந்து விட்டது. அதன் பிறகும் அவர்களுக்கு நல்ல வரவு இருந்துள்ளது.

ஜமாஅத்துகளில் லாகூர் முதல் இடம். பின்னர் ரப்வா, பின்னர் மூன்றாம் இடத்தில் கராச்சி.

அடுத்து மாவட்டங்களில் இஸ்லாமாபாத் முதல் இடம். பின்னர் சியால்கோட், பின்னர் ஃபைஸலாபாத், பின்னர் குஜ்ரன்வாலா, சர்கோதா, உமர்கோட் மற்றும் முல்தான், மீர்பூர் காஸ், டேராகாஸிகான்.

வசூலின் அடிப்படையில் பத்து ஜமாஅத்துகள். இஸ்லாமாபாத் நகரம், டிஃபன்ஸ் லாகூர், டவுன்ஷிப் லாகூர், தாருத்திக்ர் லாகூர், மாடல் டவுன் லாகூர், அல்லாமா இக்பால் டவுண் லாகூர், ராவல்பின்டி நகரம், அஸீஸாபாத் கராச்சி, ஸிமன்ஆபாத் லாகூர், முகல்பூர் லாகூர்.

அத்ஃபால் பதிவேட்டில் மூன்று பெரிய ஜமாஅத்துகள் உள்ளன. அவற்றில் முதல் இடம் லாகூர். இரண்டாம் இடம் ரப்வா. மூன்றாம் இடம் கராச்சி.

அத்ஃபால் பதிவேட்டில் மாவட்டங்களின் நிலை : இஸ்லாமாபாத் முதல் இடம். பின்னர் சியால்கோட். பின்னர் சர்கோதா, பின்னர் முறையே உமர்கோட், மீர்பூர் காஸ், நாரிவால், நன்கானா சாஹிப், ஜெஹ்லம், கோயிட்டா.

அசாதாரண முயற்சிகள் செய்யக்கூடிய சிறிய ஜமாஅத்துகளும் உள்ளன. சிறிய ஜமாஅத்துகள் மட்டும் அல்ல. அவற்றில் பெரிய நகரங்களும் உள்ளன. குஜ்ரன் வாலா நகரம், குல்ஷன் ஜாமி கராச்சி, சத்ர் கராச்சி, ராவல்பின்டி, கேன்ட், பைத்துல் ஃபஸ்ல் ஃபைஸலாபாத், கரீம் நகர் ஃபைஸலாபாத், சியால்கோட் நகரம், பெஷாவர், சர்கோதா, அவ்காடா.

இந்தியாவின் (முதல்) பத்து மாநிலங்கள் பின்வருமாறு: அவற்றில், கேரளா, (அடுத்து முறையே) **தமிழ்நாடு,** கர்நாடகா, ஜம்மு காஷ்மீர், தெலுங்கானா, ஒடிசா, பஞ்சாப், வெஸ்ட் பெங்கால், மஹாராஷ்டிரா, டில்லி.

அடுத்து பத்து ஜமாஅத்துகள் பின்வருமாறு:

அவற்றில் **கோயம்பத்தூர்** (coimbatore), பின்னர், ஹைதராபாத், பின்னர் காதியான், பின்னர், கருளை, அடுத்து பத்தப்பிரியம், அடுத்து, பெங்களூர், **மேலப்பாளையம்,** கொல்கத்தா, பின்னர் கோழிக்கூடு, பின்னர், கேரங்க்.

ஆஸ்திரேலியாவின் பத்து ஜமாஅத்துகள்: அவற்றில் முதல் இடம், காஸில் ஹில் (Castle Hill), மெல்பர்ன் லாங்க் வாரின் (Melbourne Lang warrin), மார்ஸ்டன் பார்க் (Marsden Park), பின்னர் லோகன் ஈஸ்ட், பின்னர், மெல்பர்ன் பெர்விக் (Melbourne Berwick), அடுத்து பென்ரித் (Penrrith), அடுத்து பெர்த், அடிலெய்ட்சவுத் (Adelaide south), மெல்போர்ன் கலாயிட், அடிலெய்ட் வெஸ்ட் (Adelaide west).

காதிம்கள் ஜமாஅத்துகள் முக்கிய இடம் பிடித்தவை பின்வருமாறு: காஸில் ஹில் (Castle Hill), மெல்பர்ன் லாங்க் வாரின் (Melbourne Lang warrin), மார்ஸ்டன் பார்க் (Marsden Park), மெல்பர்ன் பெர்விக் (Melbourne Berwick), லோகோன் ஈஸ்ட், பென்ரித், பெர்த், அடிலெய்ட்சவுத் (Adelaide south), அடிலெய்ட் (Adelaide west), மெல்போர்ன் கலாயிட்.

அத்ஃபால் பதிவேட்டில் முதல் இடத்தில், மெல்பர்ன் லாங்க் வாரின் (Melbourne Lang warrin), லோகோன் ஈஸ்ட், பின்னர் பென்ரீத், பின்னர் பெர்த், பின்னர் காஸில் ஹில் (Castle Hill), பின்னர் மெல்பர்ன் கலாயிட், பின்னர் அடிலெய்ட் சவுத் (Adelaide south), பின்னர் மெல்பர்ன் பெர்விக் (Melbourne Berwick), பின்னர் மவுன்ட் டீரூயிட், பினன்ர் மெல்பர்ன் வெஸ்ட் (Melbourne west).

அல்லாஹ் பங்கு கொண்ட அனைவரின் செல்வங்களிலும், வாழ்நாளிலும் எண்ணற்ற அருட்களை வழங்குவானாக.

தமிழாக்கம்:

மவ்லவி **A.** அப்துர் ரஹ்மான் தாஹிர்.

* * * * *


**நூருல் இஸ்லாம் துறையின் நேரங்கள்**

**தொலைபேசி எண் : 1800 103 2131**

இந்த *TOLL FREE* எண்ணில்

ஃபோன் செய்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் தொடர்பான தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

தினந்தோறும் காலை 8.30 மணியிலிருந்து 10.30 மணி வரை (வெள்ளிக்கிழமை விடுமுறை நாள்)


குத்பா பேருரை : 12ம் பக்கத் தொடர்ச்சி

ஆக, இதுவே ஓர் அஹ்மதியின் பொறுப்பாகும். இதுவே பைஅத்திற்கான உரிமையை செலுத்துவதாகும்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நமது ஜமாஅத்தினருக்கு அவர்களின் ஈமான் அதிகரிக்க வேண்டிய தேவையுள்ளது. இறைவன் மீது உண்மையான நம்பிக்கை மற்றும் இறைஞானம் இருக்க வேண்டும். நற்செயல்களில் சோம்பல் இருக்கக் கூடாது. ஏனெனில் சோம்பல் இருந்தால் பிறகு, உளூ செய்வது கூட ஒரு கஷ்டமாக இருக்கும். பிறகு எங்கிருந்து ஒருவர் தஹஜ்ஜுத் தொழுவார். தஹஜ்ஜுத்துக்காக எழுந்திருப்பது பெரிய விஷயம். சாதாரண தொழுகைகளுக்காக உளூ செய்வது கூட கஷ்டமாகத் தென்படுகிறது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நற்செயல் ஆற்றுவதற்கான ஆற்றல் உருவாகவில்லை என்றால், நன்மைகளில் ஒருவரை ஒருவர் முந்துவதற்கான உத்வேகம் உருவாகவில்லை என்றால், உங்களுக்குள் நன்மைகளில் முந்திச் செல்வதற்கான உத்வேகம் இல்லையென்றால், பின்னர் நம்முடன் தொடர்பு ஏற்படுத்தியிருப்பது பலனற்றது.

(மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 439)

எனவே மிகவும் கவலையுடன் நாம் அல்லாஹ்வுடன் நம்முடைய தொடர்புகளை அதிகரிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இந்த உண்மையான தொடர்பு இருக்கும்போது பிறகு, துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான காட்சிகளையும் நாம் காண்போம். அல்லாஹ் நமக்கு அதற்கான நற்பேறை வழங்குவானாக.

இந்த நாட்களில் குறிப்பாக, பாகிஸ்தானின் அஹ்மதிகளுக்காக அதிகமாக துஆ செய்யுங்கள். அங்கு அஹ்மதிகளுக்கு அதிகமதிகமாக கஷ்டங்களை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. அதேபோன்று, அல்ஜீரியாவின் அஹ்மதிகளுக்காகவும் துஆ செய்யுங்கள். அங்கும் இன்றைய நாட்களில், எதிரிகள் மீண்டும் எழுந்துள்ளனர். கஷ்டங்களை ஏற்படுத்துகிறார்கள்.

அதேபோன்று, மற்ற இடங்களிலும் எங்கெங்கெல்லாம் அஹ்மதிகளுக்குக் கஷ்டங்கள் இருக்கின்றனவோ அல்லாஹ் எல்லா இடத்திலும் ஒவ்வொரு அஹ்மதியையும் பாதுகாப்பாக வைப்பானாக! ஒவ்வொரு பிரச்சனையிலிருந்தும் காப்பாற்றுவானாக! எதிரியை தோற்று ஓடச் செய்வானாக!

தமிழாக்கம்:

மவ்லவி அதாவுல் முக்னி


**உங்களுக்கு வேலையாட்கள் வேண்டுமா?**

உங்களுக்கு டிரைவர், மேஸ்திரி, மெக்கானிக், எலக்ட்ரீசியன் தேவையென்றால் எங்களை தொடர்பு கொள்ளவும்.

**நாங்கள் உங்களுக்கு நம்பிக்கையான, நல்ல வேலையாட்களை ஏற்பாடு செய்துகொடுப்போம்.**

KHAIRUL-ISLAM

JAYGON-WEST BENGAL 97348 44732

# ஜுமுஆ பேருரை

**அமைதியின் நேரத்தில் இறைவனை மறக்காமல் இருப்பவரை இறைவன் துன்பத்தின் நேரத்தில் மறக்க மாட்டான்.**
**எவர் அமைதியின் காலத்தை சுகபோகங்களில் கழிப்பாரோ, மேலும் துன்பத்தின் போது துஆக்கள் செய்ய ஆரம்பிக்கிறாரோ அவருடைய துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.**

**ஒவ்வொரு பணிக்கும் காலம் உள்ளது. நற்பேறு உடையவர்கள் அதற்காக காத்திருப்பார்கள். எவர் காத்திருப்பதில்லையோ கண் இமைப்பதில் அதன் விளைவு வெளிப்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் அவசரக்காரர் ஆவார். அவர் வெற்றி பெற முடியாது.**

**இறைவன் அதிகம் கருணையாளனாக இருக்கின்றான். அவன் நாணம் உள்ளவனாக இருக்கின்றான். அவனது பணிவுடைய அடியான் ஒரு நீண்ட காலம் வரை அவனது அவையில் விழுந்து கிடக்கின்றான் என்பதை அவன் பார்க்கும்பொழுது, பிறகு ஒருபோதும் அடியானது முடிவைத் தீயதாக ஆக்க மாட்டான்.**

**ஹஸ்ரத் அக்தஸ் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் மேற்கோள்களின் ஒளியில் துஆவின் முக்கியத்துவம், அதன் ஒழுங்கு முறைகள், நமது பொறுப்புகள், அதன் அவசியம் மற்றும் அல்லாஹ்வின் மீதான நம்பிக்கை ஆகிய விஷயங்களைக் குறித்த அகப்பார்வை மிக்க குத்பா பேருரை**

**ஸய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்**
(அய்யதுஹுல்லாஹுதஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இஸ்லாமாபாத், டில்ஃபோர்ட் - இங்கிலாந்திலுள்ள பள்ளிவாசலில் 16 டிசம்பர் 2022** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1401 ஆண்டு நுபுவ்வத் மாதம் **16ஆம் தேதி** அன்று ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ
وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيمِ
بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۝ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۝
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝ إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِيْنُ ۝
اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۝
صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝

துஆவைப் பற்றி பல மக்கள் கேள்வி கேட்கின்றனர். இன்றைய நாட்களிலோ குறிப்பாக, இறைவன் மற்றும் துஆவைப் பற்றிய கேள்விகள் எழுகின்றன. முறையாக ஒரு திட்டம் வகுத்து அதன் கீழ் நாத்திகத்துக்கு ஆதரவளிப்பவர்கள் இறைவனின் இயல்பு மீதும் மார்க்கத்தின் மீதும் முழுமையான தாக்குதல் தொடுக்கின்றார்கள். பல்வேறு வழிமுறைகள் மூலமாக மனிதனை இறைவனை விட்டும், மார்க்கத்தை விட்டும் விலக்குவதற்கு முயற்சி செய்யப்படுகிறது. ஷய்த்தான் அனுதாபம் எனும் போர்வையைப் போர்த்திக் கொண்டு அவனை மார்க்கம் மற்றும் இறைவனை விட்டும் விலக்குவதற்கு முயற்சி செய்கின்றான்.

இத்தகைய சூழலில் நம் மக்கள் மீதும் சில இடங்களில், சில நேரங்களில் இந்த ஷைத்தானிய சிந்தனைகள் தாக்கத்தை ஏற்படுத்தி விடுகின்றன அல்லது உலகவாதிகள் மற்றும் மார்க்கத்துக்கு எதிராக நடப்பவர்களின் கூற்றுகள் அவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றியும் இறைவனைப் பற்றியும் இறைவணக்கத்தைப் பற்றியும் அமைதியின்மையை ஏற்படுத்த ஆரம்பித்து விடுகின்றன. குறைவான அறிவுடையவர்களின் உள்ளத்தில் சந்தேகங்கள் உருவாக ஆரம்பித்துவிடுகின்றன.

எப்போதாவது ஏதாவது சோதனையைக் கடந்தால் அல்லது தோல்வியைத் தழுவ நேரிட்டால் பலவீனமான ஈமானை உடையவர்கள் மற்றும் குறைவான அறிவுடையவர்களுக்கு உடனடியாக இவ்வாறு சிந்தனை வர ஆரம்பித்து விடுகிறது.

அதாவது, ஒன்று நாம் நிலைபெற்றிருக்கும் அந்த மார்க்கம் தவறானது; உண்மையில் அதற்கு எந்த உண்மைத்துவமும் இல்லை அல்லது கருணைபுரிந்த வண்ணம் துஆக்களை செவியேறகக் கூடியவனாகவும் நம்மை இந்த சோதனையிலிருந்து, பரீட்சையிலிருந்து வெளியேற்றுபவனாகவும் இறைவன் இல்லை அல்லது இறைவன் நம் மீது அநீதியிழைத்துள்ளான் அதனால்தான் நாம் இந்த நிலையைக் கடக்கின்றோம். துஆக்கள் செய்தும் நம்முடைய பிரச்சனைகள் தீரவில்லை.

ஆக, இதுபோன்ற பல கேள்விகள் சிலரின் சிந்தைகளில் உதிக்கின்றன. குறிப்பாக, உலக விஷயங்களின் மீது மட்டுமே பார்வையை வைத்திருப்பவர்களின் சிந்தைகளில் எழுகின்றன. சில மக்கள் எனக்கு எழுதி விடுகின்றனர் அல்லது தமது சூழ்நிலையைத் தெரியப்படுத்தி கேள்வி கேட்பார்கள். அவர்களின் உள்ளத்தில் அல்லாஹ்வின் இருப்பு மீது இருக்க வேண்டிய அந்த ஈமான் இல்லை என்பது போன்று தென்படும். எந்த சுற்றுச் சூழலில் அவர்கள் வசிக்கின்றார்களோ அதில் வசிக்கும்போது அவர்களுக்கு சிறிதளவு சோதனை ஏற்பட்டாலும் எதிர்மறை சிந்தனைகள் உருவாகிவிடுகின்றன அல்லது சந்தேகங்கள் தலை தூக்க ஆரம்பித்துவிடுகின்றன.

ஆனால், அவர்களோ தங்களது நிலைமைகள் மீது ஆழ்ந்து சிந்தனை செலுத்த வேண்டும். நாம் எந்த அளவு அல்லாஹ்வுக்கான உரிமையை செலுத்துவதற்கு முயற்சி செய்கிறோம்? எந்த அளவு நாம் நம்முடைய இறைவணக்கங்களை சீராக நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறோம்? எந்த அளவு நாம் நம்முடைய துஆக்களின் தரத்தை உயர்த்தியுள்ளோம்? அல்லாஹ்வின் மீதான நமது ஈமானின் நிலை என்ன? என்று அவர்கள் பார்க்க வேண்டும்.

எவ்வாறு இருப்பினும், நான் இன்று துஆ எனும் தலைப்பை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் வழிகாட்டல்களின் ஒளியில் எடுத்துரைப்பேன். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களின் எழுத்துகள் மற்றும் வழிகாட்டல்களில் இது குறித்து நமக்குப் பல விஷயங்கள் தென்படுகின்றன. இலக்கியத்தில் உள்ளது. எவ்வாறு இருப்பினும், சில விஷயங்களை நான் எடுத்துரைப்பேன்.

அவற்றிலிருந்து துஆவின் உண்மைத்துவம் அதற்கான ஒழுங்குமுறைகள் நம்முடைய பொறுப்புகள், அதன் தேவை மற்றும் அல்லாஹ்வின் உறுதியான நம்பிக்கை பற்றி சிறிது விளக்கம் கிடைக்கிறது. இன்னும் கூறுவதாயின், உறுதியான முறையில் விளக்கம் கிடைக்கிறது. நாம் நல்ல நிலையிலும் அல்லாஹ்வை வணங்குதல் மற்றும் துஆக்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும். அப்போதுதான் கஷ்டங்களிலும் நம்முடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதன் பால் கவனமூட்டிய வண்ணம் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

ஒரு துன்பம் வரும் வேளையில் அஞ்சுவதைப் போல் அமைதியான நிலையில் அஞ்சக்கூடிய மனிதர் மீது அல்லாஹ்வின் கருணை உள்ளது. அமைதியின் நேரத்தில் இறைவனை மறக்காமல் இருப்பவரை இறைவன் துன்பத்தின் நேரத்தில் மறக்க மாட்டான்.

எவர் அமைதியின் காலத்தை சுகபோகங்களில் கழிப்பாரோ, மேலும் துன்பத்தின் போது துஆக்கள் செய்ய ஆரம்பிக்கிறாரோ அவருடைய துஆக்களும் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. இறை தண்டனை இறங்குவதற்கு முன் துஆக்களில் ஈடுபடக்கூடியவர் தர்மங்கள் செய்யக்கூடியவர், இறை கட்டளைகளுக்கு கண்ணியம் அளிக்கக்கூடியவர், அல்லாஹ்வின் படைப்பினங்கள் மீது பரிவு காட்டுபவர், தனது அமல்களை கவனத்துடன் செய்து வருபவர் எவ்வளவு நற்பேறு பெற்றவர் ஆவார்! இவையே நற்பேற்றின் அடையாளங்களாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

மரம் அதன் கனிகளைக் கொண்டு அறியப்படுகிறது. அதேபோன்று நற்பேறு பெற்றவரையும், துர்பாக்கியசாலியையும் பிரித்தறிவது எளிதாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 229-230)

எனவே, ஓர் உண்மையான நம்பிக்கையாளரின் பணி என்னவென்றால், தம்முடைய நல்ல நிலையில் இறைவனுக்கான உரிமைகளையும், அவனுடைய படைப்பினங்களுக்கான உரிமைகளையும் ஒருபோதும் மறக்கக் கூடாது. அவர் இந்த உரிமையை நிறைவேற்றுகிறார் என்றால் பின்னர் கஷ்ட கால கட்டத்திலிருந்து இறைவன் அவரைத் தானே வெளி கொண்டு வருகிறான்.

அவருடைய துஆக்களை ஏற்றுக் கொள்கிறான்.

எனவே, நாம் நம்முடைய இறைவணக்கங்கள் மற்றும் துஆக்களில் ஒருபோதும் சோம்பல் காட்டக்கூடாது என்பது அடிப்படை கருத்தாகும். உலக பணி மும்முரங்கள் நம்மை அல்லாஹ்வுக்கான உரிமைகளை செலுத்துவதை விட்டும் விலக்கி வைத்துவிடக் கூடாது. பின்னர், இறைவனிடம் கேட்கும்போது என்ன நிலை இருக்க வேண்டும்? அதற்கான ஒழுங்குமுறைகள் யாவை? மேலும், இந்த ஒழுங்குமுறைகளை எவ்வாறு அல்லாஹ்வே நமக்குக் கற்றுக் கொடுத்துள்ளான்? ஆகியவற்றை விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:

இறைவனிடம் கேட்பதற்கு ஒழுங்குமுறை இருப்பது அவசியமாகும். அறிவுடையவர்கள் அரசரிடம் ஏதாவது ஒன்றை வேண்டும் போது எப்போதும் ஒழுங்குமுறைகளப் பேணுவார்கள். எனவேதான் சூராஃபாத்திஹாவில் இறைவன் எவ்வாறு துஆ கேட்க வேண்டும்? என்பதைக் கற்றுக் கொடுத்துள்ளான். அதில்,

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ

என்று கற்றுக் கொடுத்துள்ளான். அதாவது, அகில உலகங்களுக்கும் இறைவனாகிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும். எல்லாவற்றிற்கும் முதலாக அல்லாஹ்வைப் புகழுங்கள். அவன் الرَّحْمٰن ஆவான். அதாவது, கேட்காமலேயே, வேண்டாமலேயே வழங்குபவன் ஆவான். பிறகு, الرَّحِيْم ஆவான். அதாவது, மனிதனின் உண்மையான உழைப்பிற்கு சிறந்த பிரதிபலன் தருபவன் ஆவான். உண்மையான உழைப்பு எனும் சொல் சிந்திக்கத்தக்கதாகும். அல்லாஹ் الرَّحِيْم ஆவான்.

உண்மையான உழைப்புக்கு கனிதருவான். மேலும், உண்மையான உழைப்பிற்கான தரத்தை அல்லாஹ்வே சுயமாக எடுத்துரைத்துள்ளான். அல்லாஹ்வின் வழியில் ஒரு போர் செய்ய வேண்டிவருகிறது. பிறகு கூறுகிறான்:

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ

நற்கூலி மற்றும் தண்டனை அளிப்பது அவனது கையிலேயே உள்ளது. விரும்பினால் வாழ வைப்பான். விரும்பினால் மரணிக்கச் செய்வான். இவ்வுலக மற்றும் மறுவுலக நற்கூலியும், தண்டனையும் அவனது கையில் உள்ளன. மறுமைக்கான நற்கூலி, தண்டனை மட்டும் அல்ல. இந்த உலகிலும் எந்தப் பணிகள் நடைபெறுகின்றனவோ அவற்றிற்கான தீர்மானமும் அல்லாஹ்வின் கையில் உள்ளது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

மனிதன் இந்த அளவுக்குப் புகழும்போது அவனுக்கு இவ்வாறு தோன்றுகிறது. அதாவது, இறைவன் எவ்வளவு பெரியவன்! அவன் ரப்பு ஆவான். அவன் ரஹ்மான் ஆவான். அவன் ரஹீம் ஆவான். அவன் மறைவானவன் என்று மனிதன் ஏற்று வந்துள்ளான். பிறகு, அவனை முன்னால் இருப்பவனாக அறிந்து கூறுகின்றான். இந்த விஷயங்கள் மறைவானவையாகும். பிறகு, அல்லாஹ் முன்னால் இருப்பதாக அவன் புரிகின்றான். அவன் முன்னால் இருப்பதாக அறிந்து என்ன கூறுகின்றான்?

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

அதாவது, அல்லாஹ்வே நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; அல்லது வணங்க விரும்புகிறோம். மேலும், அதற்காக உன்னிடமே உதவி வேண்டுகிறோம்.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ

அதாவது, மிகவும், நேராகவும் எவ்வித கோணலும் இல்லாத வழி, குருடர்களின் வழி என்று ஒன்று இருக்கிறது. அவர்கள் கடின உழைப்பிற்குப் பிறகு களைப்படைந்து விடுகிறார்கள். எந்த விளைவும் வெளிப்படுவதில்லை. இன்னொரு வழியும் உள்ளது. கடினமாக உழைப்பதால் அதில் விளைவு வெளிப்படுகிறது.

அடுத்து, اَلَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ

அதாவது, நீ அருள் புரிந்த மக்களின் வழி, மேலும் எந்த வழியில் நடப்பதால் அருட்கொடை கிடைக்கிறதோ அது அந்த நேரான வழியே ஆகும்.

பிறகு, غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ

உனது கோபத்திற்கு ஆளானவர்களின் வழியில் அல்ல.

மேலும், الضَّآلِّيْنَ

உன்னிடமிருந்து வெகு தொலைவில் சென்றுவிட்டவர்கள் மற்றும் வழிதவறியவர்களின் வழியில் அல்ல.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஸிராத்தே முஸ்தகீம் - நேரான பாதை என்பது உலகம் மற்றும் மார்க்கத்தின் எல்லாப் பணிகளின் வழியைக் குறிக்கிறது. உதாரணமாக, ஒரு மருத்துவர் இருக்கின்றார். யாருக்காவது, அவர் சிகிச்சை அளிக்கும்போது ஒரு நேரான வழி கைக்கு எட்டவில்லை என்றால், அவரால் சிகிச்சை அளிக்க முடியாது.

இவ்வாறே அனைத்து வக்கீல்கள் மற்றும் ஒவ்வொரு துறைக்கும், கல்விக்கும் ஒரு நேரான பாதை இருக்கின்றது. அது கைக்கு எட்டும்போது, பிறகு எளிதாக பணி நடந்துவிடுகிறது. எனவே, உலக பணிகளிலும், நேரான பாதையைத் தேட வேண்டும் . மேலும், அது அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்கும்போதே சாத்தியமாக முடியும்.

அன்னார் எந்த சபையில் இதைக் கூறிக் கொண்டிருந்தார்களோ அங்கு ஒரு நபர், நபிமார்களுக்கு இந்த துஆவிற்கான தேவை என்ன இருந்தது? இதுவோ சாதாரண மனிதனுக்கான துஆ ஆகும். நபிமார்களுக்கு இந்த துஆவை செய்ய வேண்டிய தேவை என்ன? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏன் செய்து வந்தார்கள்? அவர்களோ ஏற்கனவே நேரான பாதையில் தானே இருப்பார்கள்? என்று ஆட்சேபனை செய்தார்.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

அவர்கள் அந்தஸ்து மற்றும் படித்தரத்தின் முன்னேற்றத்திற்காக இந்த துஆவை செய்கிறார்கள். இன்னும் சொல்வதென்றால்,

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ

எனும் இந்த துஆவை மறுமையில் நம்பிக்கை கொண்டவர்களும் கேட்பார்கள். ஏனெனில், எவ்வாறு அல்லாஹ்வுக்கு எந்த எல்லையும் இல்லையோ அவ்வாறே, அந்தஸ்து மற்றும் படித்தரங்களில் அவன் வழங்கும் முன்னேற்றத்திற்கும் எந்த எல்லையும் இல்லை. (மல்ஃபூஸாத் தொகுதி 4, பக்கம் 399-400)

எனவே இந்த ஒழுங்குமுறைகளை முன்னிறுத்தியே தொழ வேண்டும். துஆ செய்ய வேண்டும். அப்போது மனிதன் எத்தகைய ஒரு நிலையைக் கடந்து செல்கிறான் என்றால், அங்கு அவனுக்கு இறை நெருக்கமும் தன்னுடைய தேவைகளை எடுத்துரைப்பதற்கான சரியான புரிதலும் கிடைத்துவிடுகிறது.

பின்னர், துஆ மற்றும் அதன் ஒழுங்குமுறைகளைப் பற்றி மேற்கொண்டு விளக்கிய வண்ணம் அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

துஆ மிகவும் அற்புதமான ஒன்றாகும். ஆனால், வருத்தம் என்னவென்றால், துஆ செய்யச் சொல்பவர்களும்

அதற்கான ஒழுங்குமுறைகளைத் தெரிந்திருப்பதில்லை. மேலும், இந்தக் காலத்தில் துஆ செய்யக்கூடியவர்களும், துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளை அறிந்திருப்பதில்லை. இன்னும் கூறுவதாயின், துஆவின் உண்மைத் தன்மையில் இருந்தே முற்றிலும் அறிமுகம் இல்லாமல் போய்விட்டது என்பதே உண்மையாகும். சிலரே முற்றிலும் மறுக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள்.

மேலும், சிலர் துஆவை மறுக்கக் கூடியவர்களாக இல்லை என்றாலும், அவர்களது நிலைமை எவ்வாறாக ஆகிவிட்டது? என்றால் அவர்களுடைய துஆக்கள், துஆவின் ஒழுங்குமுறைகளை அறியாததன் காரணத்தினால் ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை. ஏனெனில், (அவர்கள் செய்யும்) துஆ அதன் உண்மையான பொருளின்படி துஆவாக இருப்பதேயில்லை. துஆவுக்கான அசல் பொருளுக்கு ஏற்ப துஆ இருப்பதில்லை. எனவே, அது ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

இதனால், இத்தகைய மக்கள் துஆவை மறுப்பவர்களை விட மிகவும் இழிவடைந்த நிலையில் உள்ளனர். அவர்களது செயல்நிலை மற்றவர்களை நாத்திகத்திற்கு அருகில் கொண்டு சென்றுவிட்டது. துஆவிற்காக முதலில் அவசியமான விஷயமாவது, துஆ செய்யக்கூடியவர் ஒருபோதும் களைத்து நிராசையடைந்து விடக் கூடாது. மேலும், அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொண்டு இருந்து விடக்கூடாது. இனி ஒன்றும் நடக்காது என அல்லாஹ் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது.

சிலவேளை பார்க்கப்பட்டுள்ளது என்னவென்றால், எந்த அளவு துஆ செய்யப்பட்டிருக்கும் என்றால், நோக்கத்திற்கான மொட்டு பசுமையாகப் போகும் நேரத்தில் துஆ செய்யக்கூடியவர் சோர்வடைந்து விடுவார். அதன் விளைவாக நோக்கம் நிறைவேறாமல் தோல்வி ஏற்படும். மேலும், அந்தத் தோல்வி எந்த அளவுக்கு பாதிப்பை ஏற்படுத்திவிட்டது என்றால், துஆக்களின் தாக்கங்களை மறுக்க ஆரம்பித்து விடுகிறார்கள். சிறிது சிறிதாக எந்த அளவு நிலைமை சென்றுவிடுகிறது என்றால், பின்னர் இறைவனையும் மறந்து விடுகிறார்கள்.

நாத்திகம் மேலோங்கி விடுகிறது. இறைவன் இருந்தால், அவன் துஆக்களை ஏற்றுக் கொள்பவனாக இருந்தால், இந்த அளவு நீண்ட காலம் வரை செய்யப்பட்ட துஆ ஏன் ஏற்றுக் கொள்ளப்படவில்லை? என்று கேட்டு விடுகிறார்கள். ஆனால், நினைக்கக்கூடிய, தடுமாற்றம் அடையக்கூடிய மனிதன் தனது உறுதியின்மை மற்றும் இயல்பின் மாற்றத்தைப் பற்றி சிந்தித்துப் பார்த்தால், இந்தத் தோல்விகள் அனைத்தும்

அவன் விரைவை விரும்பியதனாலேயே, அவசரப்பட்டதனாலேயே ஏற்பட்டது என்பது அவனுக்குத் தெரிந்து விடும். இன்று இங்கே; நாளை அங்கே; எந்த நிரந்தரத் தன்மையும் கிடையாது. இயல்பில் அவசரத்தன்மை உள்ளது. ஆகவே, மனிதனின் சொந்த தவறுகளாகும். நிரந்தரத்தன்மை இருந்தால், அவசரப்படுதல் இல்லை என்றால், ஈமான் உறுதியாக இருந்தால், இந்த நிலை ஒருபோதும் ஏற்படவே முடியாது. இது துஆ ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால், அந்த அவசரத்தன்மைக்கான விளைவாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அவர்களுக்கு இறைவனின் ஆற்றல்கள் மற்றும் வல்லமைகள் குறித்து தப்பெண்ணமும், தோல்வியுறச் செய்யக்கூடிய நிராசையும் அதிகரித்துவிட்டது. எனவே, ஒருபோதும் சோர்வடையக் கூடாது.

அன்னார் (அலை) உலக உதாரணங்களைக் கொண்டு துஆ செய்யக் கூடியவரின் பொறுமைக்கு இவ்வாறு உதாரணம் வழங்கியுள்ளார்கள். அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பாருங்கள்! துஆவின் நிலை எதுபோன்றது என்றால், உதாரணமாக ஒரு நில உரிமையாளர் வெளியே சென்று தனது வயலில் விதை விதைக்கின்றார். இப்போது வெளிப்படையில் உள்ள நிலையோ, அவர் நல்லதொரு விதையை மண்ணுக்குக் கீழ் புதைத்துவிட்டார். அந்த நேரத்தில் இந்த விதை ஷ்ஓர் உன்னதமான மரத்தின் வடிவில் வளர்ந்து கனி தரும் என்பதை ஒருவரால் எவ்வாறு புரிய முடியும்? அந்த விதை உள்ளுக்குள்ளேயே பூமியில் ஒரு செடியின் வடிவத்தை மேற்கொள்கிறது என்பதை வெளி உலகத்தாலும் சுயமே நில உரிமையாளராலும் கூட பார்க்க முடியாது.

ஆனால், உண்மை இதுவே! சிறிது நாட்களுக்குப் பிறகு அந்த விதை உருகி உள்ளுக்குள்ளேயே செடியாக ஆரம்பித்து விடுகிறது. ஆயத்தமாகிக் கொண்டே இருக்கிறது. எதுவரை என்றால், அதன் பசுமை மேலே வெளிப்படுகிறது. விதையின் ஒரு தனிச்சிறப்பு என்னவென்றால், முதலில் அதன் வேர்கள் வெளிப்படும். வேர்கள் நிலத்தில் உறுதியாக நிலை பெறுகின்றன. பிறகு தளிர் விட ஆரம்பிக்கிறது.

மற்ற மக்களும் அதை பார்க்க முடியும். இப்போது பாருங்கள்! அந்த விதை பூமிக்கு அடியில் விதைக்கப்பட்ட நேரத்தில் இருந்து, உண்மையில் அந்த தருணத்திலிருந்தே அது செடியாவதற்கான ஆயத்தத்தை மேற்கொள்ள ஆரம்பித்து விட்டிருந்தது. ஆனால், புறத்தைப் பார்க்கக்கூடிய பார்வை அதைப் பற்றி எதையும் அறிந்திருப்பதில்லை. இப்போது அதன் பசுமை வெளியே வந்துவிட்ட பிறகு, அனைவரும் கண்டு கொண்டார்கள். ஆனால், அதில் அதற்குரிய நேரத்தில் பழம் தரும் என்பதை அறியாத சிறுபிள்ளையால் அச்சமயம் புரிய முடியாது.

இப்போது செடி வெளி வந்துவிட்டது. இனி கனிதரும் கட்டம் மீதமுள்ளது. இது சிறியது, இது பழம் எல்லாம் தராது என்று அறியாத சிறு பிள்ளை நினைக்கும். ஏன் அப்பொழுதே அதில் பழம் வருவதில்லை என்று அது நினைக்கும். ஆனால், அறிவாளியான நிலக்கிழாருக்கு அதில் எப்போது பழம் வரும் என்பது தெரியும். அவர் பொறுமையுடன் அதைப் பராமரித்து வருவார். அதைக் கருத்தில் கொண்டு வருவார். இவ்வாறு அதில் பழம் வரும் நேரம் வந்துவிடுகிறது. மேலும் அது பழுத்தும் விடுகிறது. இதுவே துஆவின் நிலையாகும்.

இப்படியே துஆ வளர்ச்சி பெற்று கனிகளை வாரி வழங்குகிறது. அவசரக்காரர்கள் முன்னரே களைத்து போய் விடுகிறார்கள். பொறுமை காட்டக்கூடிய, கவலைப்படக்கூடிய மக்கள் உறுதித் தன்மையுடன் ஈடுபட்டிருந்தார்கள். தொலைநோக்குப் பார்வை உடையவர்கள், விளைவைப் பொறுமையாகப் பார்க்கக் கூடியவர்கள் நிரந்தரத் தன்மையுடன் தம்முடைய பணிகளில் ஈடுபட்டிருப்பார்கள். துஆக்களில் ஈடுபட்டிருப்பார்கள். மேலும், தங்களது நோக்கத்தை அடைந்துவிடுவார்கள்.

பிறகு, துஆ செய்யக்கூடியவர்களின் பொறுமைக்கான தரத்தை எடுத்துரைத்தவாறு அன்னார் (அலை) தொடர்ந்து கூறுகின்றார்கள்:

துஆவில் பெரும் பெரும் படித்தரங்களும், கட்டங்களும் உள்ளன என்பது உண்மையான விஷயமாகும். அவற்றை அறியாததன் காரணமாக துஆ செய்யக்கூடியவர்கள் தங்கள் கைகளால் அவற்றை இழந்து விடுகின்றார்கள். அவர்களுக்கு ஒரு அவசரம் வந்து விடுகிறது. அவர்களால் பொறுமை காக்க இருக்க முடியாது. ஆனால், இறைவனின் பணிகளோ படிப்படியாக நடக்கின்றன. பாருங்கள்! ஒரு மனிதன் இன்று திருமணம் செய்தான்; நாளை அவனுடைய வீட்டில் குழந்தை பிறந்து விட்டது என்று ஒருபோதும் நடப்பதில்லை.

ஆனால், அல்லாஹ் ஆற்றல் படைத்தவன் அவன் தான் நாடியதை செய்ய முடியும். ஆனால், அவன் உருவாக்கி நிர்ணயித்துள்ள சட்டமும், அமைப்பும் அவசியமாகும். முதலில் தாவரங்களின் வளர்ச்சியைப் போன்று எதுவும் தெரிவதில்லை. எவ்வாறு செடி கொடிகள் வளர்ச்சி அடையும் போது முதலில் எதுவும் தெரிவதில்லையோ அவ்வாறு மனிதனின் அல்லது எந்த ஒரு விலங்கின் பிறப்பின்போதும் ஒன்றும் தெரிவதில்லை.

இப்பொழுது மனிதனின் உதாரணம் கூறப்படுகிறது. நான்கு மாதங்கள் வரை யாராலும் உறுதியான முறையில் எதுவும் கூறமுடியாது. பிறகு, ஓரளவு அசைவு உணரப்படுகிறது. பிறகு, முழுமையான கால அளவு கடந்த பிறகு மிகப் பெரும் வேதனைகளை சகித்துக் கொண்ட பிறகு குழந்தை பிறந்து விடுகிறது. மருத்துவர்கள் கூட இப்பொழுது 12 வாரங்களுக்கு பிறகே ஸ்கேன் செய்து எதுவும் கூறமுடியும். ஆக, குழந்தை பிறப்பது குறித்து மருத்துவர்களுக்குத் தாமதமாகவே தெரிய வருகிறது. எப்போது என்றால், அதுவும் 12 வாரங்கள் கழிந்த பிறகுதான் ஸ்கேன் செய்கிறார்கள்.

அன்னார் இதைக் கூறும் அந்தக் காலத்தில் அந்த அளவு டெக்னாலஜி வந்திருக்கவில்லை. ஆனாலும், அவ்வாறு இருந்தும் ஓர் இயற்கை நியதியைப் பற்றி அன்னார் விவரித்துள்ளார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

அந்த கர்ப்ப காலத்தில் பெண் பொறுத்துக் கொள்ள வேண்டி வரும். அந்தத் துன்பங்களையும், வேதனைகளையும் ஆண்களால் கணித்துக் கூட பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால், பெண்ணுக்கும் ஒரு புதிய வாழ்வு உருவாகிறது என்பது உண்மையான விஷயமாகும்.

இப்பொழுது ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்! சந்ததிக்காக முதலில் அவளுக்கு சுயமே ஒரு மரணத்தை ஏற்றுக் கொள்ள வேண்டியது வருகிறது. அப்பொழுதுதான் அவள் அந்த மகிழ்ச்சியைப் பார்க்கிறாள். இவ்வாறே துஆ செய்யக்கூடியவருக்கும் அவசியமான விஷயம் என்னவென்றால், அவர் மனம் போன போக்கையும் அவசரப்படுவதையும் விட்டுவிட்டு எல்லா வேதனைகளையும் சகித்துக் கொண்டிருக்க வேண்டும். அவசரப்படக்கூடாது. துன்பங்களை சகித்துக் கொள்ள வேண்டும். துஆவில் ஈடுபட்டிருக்க வேண்டும்.

துஆ ஏற்றுக் கொள்ளப்-படுவதில்லையே என்று அவர் ஒருபோதும் எண்ணக் கூடாது. கடைசியில் வரக் கூடிய அந்த காலம் வந்துவிடுகிறது. துஆவிற்கான விளைவுகள் உருவாவதற்கான நேரம் வந்தடைந்துவிட்டது. அப்பொழுது ஒருவகையில், நோக்கம் எனும் அந்தக் குழந்தை பிறந்துவிடுகிறது. எங்கு சென்றடைந்து துஆ விளைவைத் தரக்கூடியதாகத் திகழ்கிறதோ அந்தத் தரம் வரை அந்த எல்லை வரை அதைக் கொண்டு சேர்க்க வேண்டியது துஆவுக்கு முதலில் அவசியமான விஷயமாகும்.

முதலில் துஆவை அந்தத் தரம் வரை கொண்டு செல்வது அவசியமாகும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

உதாரணமாக, நெருப்பை வணங்கக் கூடியவர்கள் கண்ணாடிக்கு கீழ் துணியை வைத்துவிடுகின்றனர். மேலும் சூரியனின் கதிர்கள் அந்தக் கண்ணாடியில் வந்து விழுந்து ஒன்றுசேர்ந்து விடுகின்றன. மேலும் அவற்றின் வெப்பமும், சூடும் அந்த துணியை (ஒரு கட்டத்தில்) எரித்து விடும் நிலையை அடைந்து விடுகிறது.

பின்னர் திடீரென அந்த துணி எரியத் தொடங்கிவிடுகிறது. அதேபோன்று, தோல்விகளை எரிக்கும் வகையிலும், நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையிலும் அதில் ஆற்றல் உருவாகிவிடும் அந்தஸ்தை எட்டும் அளவில் துஆவை கொண்டு சேர்ப்பது அவசியமாகும்.

(மல்ஃபூஸாத், தொகுதி 4, பக்கம் 418, 1914 ஆம் ஆண்டு பதிப்பு)

எனவே துஆ செய்யக் கூடிய ஒவ்வொருவருக்கும் தன்னை சுய ஆய்வு செய்வதன் மூலமாக அவர் இந்தத் தரத்தைப் பெற்றிருக்கிறாரோ இல்லையா என்பது அவருக்குத் தெரிந்து விடும்.

அன்னார் (அலை) ஒரு பாரசீகக் கவிதையை உதாரணமாக வைத்து அல்லாஹ்வைப் பற்றி கூறுகிறார்கள்:

பொருள் : அதாவது, அழைப்பதன் மூலம் உனது அவை மிகவும் உயர்ந்தது என்பது தெரிய வருகிறது.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

நீண்ட கால கட்டம் வரை மனிதன் துஆக்களில் ஈடுபட்டிருக்க வேண்டி வருகிறது. கடைசியில் அல்லாஹ் வெளிப்படுத்தி விடுகிறான். நான் எனது அனுபவத்தில் பார்த்திருக்கிறேன். முந்தைய நேர்மையாளர்களது அனுபவமும் இதற்கு சாட்சி பார்க்கிறது. ஏதாவது ஒரு விவகாரத்தில் நீண்ட காலம் வரை மௌனமாக இருந்தால் வெற்றிக்கான நம்பிக்கை இருக்கிறது. மேற்கொண்டு துஆவுக்கான சந்தர்ப்பம் கிடைக்கிறது என்ற நம்பிக்கை இருக்கிறது. பிறகு, அல்லாஹ் வெற்றியை வழங்குவான். ஆனால், எந்த விஷயத்தில் விரைவாக பதில் கிடைத்து விடுகிறதோ, பதில் எதிர்மறையாகக் கிடைத்தால், பிறகு பணி நடைபெறுவதில்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பொதுவாக நாம் உலகத்தில்

பார்க்கிறோம். ஒரு யாசகர் யாராவது ஒருவரின் வீட்டுக் கதவுக்கு அருகில் யாசகம் கேட்க செல்லும் பொழுது, மேலும் மிகவும் அழுது மன்றாடி பணிவுடன் கேட்கும்போது சிறிது நேரம் வரை திட்டுகள் வாங்கியும் தனது இடத்தை விட்டு நகர்வதில்லை எனும்போது வீட்டில் இருப்பவர் அவரைத் திட்டுகிறார், கடிந்து கொள்கிறார். ஆனால், அவர் தனது இடத்தை விட்டு அசைவதில்லை. மேலும், அவர் யாசகம் கேட்டுக் கொண்டே செல்கிறார். கடைசியில் அந்த வீட்டு நபருக்கும் கூட ஓரளவு வெட்கம் வந்தே விடுகிறது. எவ்வளவு பெரிய கஞ்சனாக இருந்தாலும், அந்த யாசகனுக்கு ஏதாவது கொடுத்தே விடுகின்றார்.

ஆக, துஆ கேட்கக் கூடியவருக்கு ஒரு சாதாரண யாசகர் அளவு கூட உறுதித் தன்மை இருக்க வேண்டாமா?

இறைவன் அதிகம் கருணையாளனாக இருக்கின்றான். அவன் நாணம் உள்ளவனாக இருக்கின்றான். அவனது பணிவுடைய அடியான் ஒரு நீண்ட காலம் வரை அவனது அவையில் விழுந்து கிடக்கின்றான் என்பதை அவன் பார்க்கும்பொழுது, பிறகு ஒருபோதும் அடியானது முடிவைத் தீயதாக ஆக்க மாட்டான்.

உதாரணமாக, ஒரு கர்ப்பிணிப் பெண் நான்கு, ஐந்து மாதங்களுக்குப் பிறகு இப்பொழுது ஏன் குழந்தை பிறக்கவில்லை? என்று கூறி, அந்த ஆசையில் அவள் ஏதாவது கருக்கலைப்பு மாத்திரையை சாப்பிட்டுவிட்டால் அப்பொழுது குழந்தை பிறக்குமா என்ன? குழந்தை வீணாகியே விடும் அல்லது நிராசை அடையச் செய்யும் நிலையில் அவள் மூழ்கி விடுவாள்.

அவ்வாறே எவர் குறிப்பிட்ட நேரத்திற்கு முன் அவசரப்படுகிறாரோ அவர் இழப்பையே அடைகிறார். மேலும், அவர் இழப்பை மட்டும் பெறுவதில்லை. இன்னும் கூறுவதாயின் அவரது ஈமானுக்கும் பெரும் துயரம் ஏற்படுகிறது. சிலர் இத்தகைய நிலைமைகளில் இறை மறுப்பாளர்கள் ஆகிவிடுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எங்களது கிராமத்தில் ஒரு தச்சர் இருந்தார். அவர் மனைவி நோயுற்று கடைசியில் மரணித்துவிட்டார். அவர் கூறினார்: இறைவன் இருந்திருந்தால், நான் எவ்வளவு துஆக்கள் செய்திருந்தேனோ அவை ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கும். என் மனைவி மரணத்திருக்க மாட்டாள். இவ்வாறு அவர் இறை மறுப்பாளர் ஆகிவிட்டார்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

ஆனால், நற்பேறு பெற்றவர் தனது உண்மைத் தன்மை மற்றும் கலப்பற்ற தன்மையோடு செயல்பட்டால் அவரது ஈமான் அதிகரிக்கிறது. மேலும், எல்லாம் நடந்துவிடுகிறது. பூமியின் செல்வங்களுக்கு இறைவனுக்கு முன்னால் என்ன மதிப்பு இருக்கிறது? ஒரு நொடிப் பொழுதில் அவனால் எல்லாவற்றையும் செய்ய முடியும்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

எவரும் அறிந்திடாத அந்த சமுதாயத்தினரை அவன் எவ்வாறு அரசனாக்கி விட்டான் என்பதைப் பார்க்கவில்லையா? அரபு நாட்டின் காட்டரபிகள் என்னவாக இருந்தார்கள்? அந்த மக்கள் உலகத்தை ஆண்டார்கள். மேலும், பெரும் பெரும் அரசாங்கங்களை அவர்களுக்குக் கட்டுப்படக் கூடியதாக ஆக்கிவிட்டான். அடிமைகளை அரசர்கள் ஆக்கிவிட்டான். மனிதன் இறையச்சத்தை மேற்கொண்டால், இறைவனுக்காக ஆகிவிட்டால் பின்னர் உலகில் மிக உயர்வான வாழ்வு கிடைக்கும். ஆனால், நிபந்தனை என்னவென்றால் உண்மையாளராகவும், துணிச்சலுடையவராகவும் மாறிக் காட்ட வேண்டும். உள்ளம் ஆட்டங்காணக் கூடாது. மேலும் அதில் எந்தவிதமான வெளிக்காட்டுதல் அல்லது இணை வைத்தலின் கலப்படம் இருக்கக்கூடாது.

எந்த விஷயம் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை சமுதாயத்தின் தந்தையாகவும், சிரம்பணிந்தவர்களின் தந்தையாகவும் ஆக்கியது? இறைவன் அவர்களுக்கு எந்த அளவு மகத்துவமிக்க பரக்கத்துகளை வழங்கினான்? என்றால் அவற்றை எண்ணவே முடியாது. இந்த உண்மைத் தன்மையும் கலப்பற்ற தன்மையுமே இருந்தது. பாருங்கள்! இப்ராஹீம் (அலை) அவர்கள் தம்முடைய சந்ததிகளில் ஒரு நபி தோன்ற வேண்டும் என்று ஒரு துஆ செய்தார்கள். பிறகு, அது அந்த நேரத்திலேயே ஏற்றுக் கொள்ளப்பட்டுவிட்டதா என்ன? ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களுக்குப் பிறகு ஒரு நீண்ட காலம் வரை யாருக்கும் அந்த துஆவுக்கான தாக்கம் என்ன ஆனது? என்ற சிந்தனை கூட வரவில்லை. ஆனால், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் தோற்றத்தின் மூலம் அந்த துஆ நிறைவேறியது. மேலும், மிகவும் மேன்மையான முறையில் நிறைவேறியது!

எனவே ஏற்கனவே கூறப்பட்டதுபோன்று வெறும் கஷ்டத்தில் மட்டும் மனிதன் துஆக்கள் செய்யக் கூடாது. மாறாக, அல்லாஹ் அவனுக்கு வசதி வாய்ப்புகளையும், சுகங்களையும் வழங்கி இருக்கும்பொழுதும் அவன் துஆ செய்து கொண்டே இருக்க வேண்டும்.

துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு உடலுக்கும், ஆன்மாவுக்கும் ஒன்றுடன் ஒன்றுக்குத் தொடர்பு இருக்க வேண்டும் என்பதையும் மேலும் அந்தத் தொடர்பு எப்படிபட்டதாக இருக்க வேண்டும் என்பதையும் விவரித்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

வெளிப்படையான தொழுகை மற்றும் நோன்புடன் கலப்பற்ற தன்மையும் உண்மையும் இல்லை என்றால் அது தன்னிடம் எந்தச் சிறப்பையும் கொண்டிருப்பதில்லை. வந்தார்கள், தொழுதுவிட்டார்கள். ஆனால், ஆன்மா உருகவில்லை என்றால் பின்னர் எந்தப் பலனும் இல்லை. யோகிகளும், சன்னியாசிகளும் கூட தத்தமது இடத்தில் பெரும் பெரும் தவங்கள் செய்கிறார்கள். அவர்களில் சிலர் தங்களுடைய கைகளைக் கூட மரத்துப் போக செய்துவிடுகிறார்கள் என்பது பெரும்பாலும் பார்க்கப்படுகிறது. கையை உயர்த்தினார்கள். மேலும் பல நாட்கள் வரை உயர்த்தியே வைத்திருந்தார்கள் என்று இருப்பார்கள். கை மரத்துப் போய்விடுகிறது.

அவர்கள் பெரும், பெரும் கஷ்டங்களை சகித்துக் கொள்வார்கள். மேலும், தம்மை துன்பங்களிலும், துயரங்களிலும் ஆழ்த்திக் கொள்வார்கள். ஆனால், இந்தத் துன்பங்கள் அவர்களுக்கு எந்த ஒளியையும் வழங்குவதில்லை. மேலும், அவர்களுக்கு எந்த ஒரு மன அமைதியும், நிம்மதியும் கிடைப்பதில்லை. இன்னும் கூறப்போனால், அவர்களது அகநிலை மோசமாகி விடுகிறது. அவர்கள் உடல் தவம் செய்கிறார்கள். அதற்கு அகத்தோடு குறைவான தொடர்பே இருக்கிறது. மேலும், அவர்களது ஆன்மீகத்தில் எந்த ஒரு தாக்கமும் ஏற்படுவதில்லை. அவர்கள் சாகசம் வேண்டுமானால் காட்ட முடியும். பெரும், பெரும் பட்டினிகளையும் மேற்கொள்கிறார்கள். துன்பங்களையும் சகித்துக் கொள்கிறார்கள். ஆனால், அவர்களால் ஆன்மீகத்தின் முன்மாதிரிகளைக் காட்ட முடியாது.

எனவே தான் திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறியுள்ளான்:

لَنْ يَّنَالَ اللّٰهَ لُحُوْمُهَا وَلَا دِمَآؤُهَا
وَلٰكِنْ يَّنَالُهُ التَّقْوٰى مِنْكُمْ

அதாவது, உங்களது குர்பானியின் இறைச்சியும், இரத்தமும் அல்லாஹ்வைச் சென்றடைவதில்லை. மாறாக, இறையச்சமே சென்றடைகிறது.

உண்மையில், அல்லாஹ் வெளித்தோலை விரும்புவதில்லை. அவன் சத்தை எதிர்பார்க்கின்றான். இப்பொழுது ஒரு கேள்வி எழுகிறது. இறைச்சியும், இரத்தமும் அவனை சென்றடைவதில்லை; இறையச்சம் மட்டுமே சென்றடைகிறது என்றால், பின்னர் குர்பானி செய்வதற்கான தேவை என்ன? இதேபோன்று தொழுகை, நோன்பு ஆன்மாவுடையதாக இருக்கின்றன என்றால் பிறகு வெளிப்படையாக செய்ய வேண்டிய தேவை என்ன? உட்கார்ந்து கொண்டே தொழுது கொள்ளலாமே? துஆக்கள் செய்து கொள்ளலாமே? அழுது கொள்ளலாமே? அல்லாஹ்வுக்கு முன்னால் மன்றாடலாமே? முந்தைய மார்க்கங்களில் இருந்தது போன்று செய்யலாமே? தொழுகைகளின் பல்வேறு நிலைகளான கியாம் (நிற்றல்), ருகூ (குனிதல்), ஸஜ்தா (சிரம்பணிதல்) ஆகியவற்றை செய்ய வேண்டிய தேவை என்ன? என்று கேட்கப்படுகிறது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இதற்கான பதில் இதுவாகும். அதாவது, எவர்கள் உடலிடம் வேலை வாங்குவதை விட்டுவிடுகின்றார்களோ அவர்களது ஆன்மா அவர்கள் சொல்வதைக் கேட்பதில்லை என்பது முற்றிலும் உறுதியான விஷயமாகும். மேலும், அசல் நோக்கமாக இருக்கின்ற அந்தப் பணிவும் அந்தப் பற்றுறுதியும் அவர்களிடம் உருவாகுவதில்லை. மேலும் எவர்கள் வெறும் உடலால் மட்டுமே செயல்படுகிறார்களோ மேலும் அதில் ஆன்மாவை இணைப்பதில்லையோ அவர்களும் பயங்கரமான தவறில் மூழ்கி இருக்கின்றார்கள்.

இந்த யோகிகள் இத்தகையவர்களாகவே உள்ளனர். அவர்கள் தமது உடலிடம் வேலை வாங்குகின்றார்கள். ஆனால், ஆன்மாவோடு அவர்களுக்கு எந்தத் தொடர்பும் இருப்பதில்லை. இறைவன் ஆன்மாவுக்கும், உடலுக்கும் ஒரு தொடர்பை வைத்துள்ளான். மேலும், உடலின் தாக்கம் ஆன்மா மீது ஏற்படுகிறது. உதாரணமாக, ஒரு மனிதர் பாசாங்கு செய்து அழ விரும்பினால் இறுதியில் அவருக்கு அழுகை வந்தே விடும். அதேபோன்று ஒருவர் பாசாங்கு செய்து சிரிக்க விரும்பினால் அவருக்கு சிரிப்பு வந்தே விடும். இதேபோன்று, தொழுகையில் எத்தனை நிலைகள் உடலில் ஏற்படுகின்றனவோ உதாரணமாக, நிற்றல் அல்லது ருகூ செய்தல் ஆகியவற்றுடனயே ஆன்மாவிலும் தாக்கம் ஏற்படுகிறது. மேலும், எந்த அளவு உடலில் பணிவு நிலையை வெளிப்படுத்துகிறாரோ

அதே அளவு ஆன்மாவில் ஏற்படுகிறது. எந்த அளவு பணிவும், தன்னடக்கமும் ஏற்படுகிறதோ அது ஆன்மாவிலும் ஏற்படுகிறது. இறைவன் வெற்று ஸஜ்தாக்களை ஏற்றுக் கொள்வதில்லை.

வெறும் ஸஜ்தா செய்தால் அதில் பணிவு இல்லை தன்னடக்கம் இல்லை தாழ்மை இல்லை என்றால், பின்னர் ஆன்மா அத்துடன் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றால் அல்லாஹ்வோ அந்த ஸஜ்தாவை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், ஸஜ்தாவுக்கு ஆன்மாவுடன் ஒரு தொடர்பு இருக்கின்றது. எனவே, தொழுகையில் கடைசி நிலையாக ஸஜ்தா உள்ளது. மனிதன் பணிவுடைய உச்சகட்டத்தை அடையும் பொழுது, அந்த நேரத்தில் அவன் ஸஜ்தா தான் செய்ய விரும்புவான். இது இயல்பான விஷயமாகும். அவன் மிகவும் பணிவு நிலையை வெளிப்படுத்த விரும்புகிறான். குனிந்து ஸஜ்தாவில் சென்றுவிடுகின்றான்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

விலங்குகளிலும் கூட இந்த நிலை காணப்படுகிறது. நாய்களும் அவற்றின் எஜமானரை நேசிக்கும்போது வந்து அவரது காலில் தலையை வைத்து விடுகின்றன. மேலும், தனது நேசத்தை ஸஜ்தா வடிவில் வெளிப்படுத்துகின்றன. உடலுக்கு ஆன்மாவோடு ஒரு குறிப்பான தொடர்பு இருக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகத் தென்படுகிறது.

இதேபோன்று ஆன்மாவின் நிலைகளின் தாக்கம் உடலில் வெளிப்படுகின்றன. ஆன்மா மிகவும் துன்பத்திற்குள்ளாகும் பொழுது உடலிலும் அதனுடைய தடயங்கள் வெளிப்படுகின்றன. கண்ணீரும் சோர்வும் வெளிப்படுகிறது. இயல்பு மிகவும் கவலையுடன் இருக்க ஆரம்பிக்கின்றது. ஆன்மாவில் வேதனை இருந்தால் மனிதனுடைய உள்ளத்தில் ஏதாவது துன்பம் இருந்தால் பிறகு உடலும் சோர்வடைந்து காணப்படுகிறது. இயல்பு கவலைதோய்ந்திருக்கின்றது. அவருடைய நிலை என்னவாக உள்ளது? என்று மற்றவர்களுக்கும் வெளிப்பட்டுவிடுகின்றது.

சபையில் அமர அவர் உள்ளம் விரும்புவதில்லை. அமர்ந்தால் பின்னர் என்ன ஆயிற்று? என்று மக்கள் கேட்பார்கள்.

அன்னார் (அலை) கூறுகிறார்கள்:

ஆன்மா மற்றும் உடலுக்குப் பரஸ்பரம் தொடர்பு இல்லையென்றால், இவ்வாறு ஏன் நடக்கிறது? ரத்த ஓட்டத்தை ஏற்படுத்துவதும் இதயத்தின் ஒரு பணியாகும். ஆனால், அந்த இதயம் உடலுக்கு நீர் பாய்ச்சுவதற்கான இன்ஜினாக இருக்கிறது என்பதிலும் எந்த சந்தேகமும் இல்லை. ரத்தம் இதயத்தின் மூலமாக ஓடுகிறது. ஆனால், ஓர் இன்ஜின் வடிவில் இதயம் இயங்குகிறது. அது விரிவடைவது மற்றும் சுருங்குவதன் மூலமாக எல்லாமே நடக்கின்றது.

இதயம் துடிப்பதனாலேயே எல்லாம் நடந்து கொண்டிருக்கும். ஆக, ஆன்மீக மற்றும் பௌதீக தொடர்புகள் இரண்டும் தொடர்ச்சியாக இருக்கின்றன. சிலவேளை இதயம் விரிகிறது. பிறகு சுருங்குகிறது விரிகிறது, சுருங்குகிறது. அதன் மூலம் ரத்த ஓட்டம் ஏற்படுகிறது.

கூறுகின்றார்கள்: ஆன்மீக மற்றும் பௌதீக தொடர்புகளும் இவ்வாறே தொடர்ச்சியாக நடைபெறுகின்றன. ஆன்மாவில் பணிவு ஏற்படும்போது பிறகு உடலிலும் ஏற்பட்டுவிடுகிறது. எனவே, ஆன்மாவில் உண்மையாகவே பணிவு மற்றும் தன்னடக்கம் இருந்தால் உடலில் அதனுடைய அறிகுறிகள் தானாகவே வெளிப்பட்டு விடுகின்றன. இதேபோன்று உடலில் ஒரு தனி தாக்கம் ஏற்பட்டால் ஆன்மாவும் அதனால் தாக்கத்திற்குள்ளாகியே விடுகிறது. எனவே, அல்லாஹ்வுக்கு முன்னால் தொழுகையில் நிற்கும் பொழுது உங்களது இயல்பால் பணிவு மற்றும் பற்றுறுதியை நீங்கள் அவசியம் வெளிப்படுத்த வேண்டும்.

அப்பொழுது இது ஒரு வகையான நயவஞ்சகமாக இருக்கிறதுதான். அதாவது, உள்ளம் விரும்புவதில்லை. இது ஒரு நயவஞ்சகமாக இருக்கிறது. ஆனால், பிறகும் கூட வலுக்கட்டாயமாக பணிவை வெளிப்படுத்துங்கள்.

ஆனால், அவ்வாறு இருந்தாலும் கூட வலுக்கட்டாயமாக பணிவை வெளிப்படுத்துங்கள். ஆனால், செய்ய வேண்டும். ஏனெனில், சிறிது சிறிதாக அதன் தாக்கம் நிரந்தரமாகிவிடுகிறது. பழக்கம் ஏற்பட்டு விடுகிறது. பிறகு, ஆன்மாவும், உடலும் ஒன்றாக இணைந்து செயல்பட ஆரம்பித்து விடுகின்றன.

மேலும் கூறுகிறார்கள்:

உண்மையிலேயே ஆன்மாவில் அந்தப் பணிவும், தன்னடக்கமும் உருவாக ஆரம்பிக்கிறது. இந்த நிலை உருவாக ஆரம்பித்துவிடும் பொழுது பிறகு மனிதனுக்குத் தொழுகையில் இன்பமும் வர ஆரம்பித்துவிடுகிறது. அவன் தனது நோக்கத்திற்காக மட்டும் இறைவனுக்கு முன்னால் செல்வதில்லை. மாறாக, இறைவனுடனான தொடர்பு மற்றும் அன்பின் காரணமாக மட்டுமே கவனம் செலுத்துகின்றான்.

அடுத்து, மேலும் விவரித்தவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

சில மக்கள் எங்களுக்குத் தொழுகைகளில் இன்பம் கிடைப்பதில்லை என்று கூறுகின்றனர். ஆனால், இன்பம் தங்களது கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும், தரமும் வேறுபட்டது என்பதையும் அவர்கள் அறிவதில்லை. இப்படி நடக்கிறது. அதாவது, ஒரு மனிதன் கடுமையான துன்பத்தில் ஆழ்ந்திருப்பான். ஆனால், அந்த துன்பத்தையும் அவன் இன்பமாக கருதுகிறான்.

அன்னார் (அலை) இதைக் கூறிக் கொண்டிருந்த நாட்களில், டிரான்ஸ்வாலில் சுதந்திரப் போராட்டம் நடந்து கொண்டிருந்தது. அன்னார் (அலை) கூறுகின்றார்கள். டிரான்ஸ்வாலில் போராடிக் கொண்டிருந்தவர்களின் உதாரணத்தை அன்னார் (அலை) கொடுக்கின்றார்கள்:

இதில் உயிர்கள் போகின்றன. பெண்கள் விதவைகளாகவும் குழந்தைகள் அனாதைகளாகவும் ஆகின்றார்கள். அவ்வாறு இருந்தும் கூட, சமுதாயத்தின் மீதான ஆதரவும், கடமை உணர்ச்சியும் அவர்களை மகிழ்ச்சியுடனும், இன்பத்துடனும் மரண வாயிலுக்கு அழைத்துச் செல்கிறது. மறுபுறம், சமுதாய நோக்கங்கள் ஒன்றுபட்டிருக்கும் அதேவேளையில் சமுதாயம் இவர்களின் கடின உழைப்பையும், உயிர் தியாகத்தையும் மதிக்கிறது. நோக்கங்கள் ஒன்றுதான். மற்றொரு பிரிவினர் அவர்களை ஊக்கமூட்டுகின்றனர்; அவர்களுக்கு மதிப்பளிக்கின்றனர். அவர்களது கடின உழைப்பு ஏன் மதிக்கப்படுகிறது? அவர்களது துன்பம் மற்றும் துயரத்தின் காரணமாக. ஏனெனில், அவர்கள் துன்பத்தை மேற்கொள்கின்றனர். அதனால் அவர்கள் மதிக்கப்படுகின்றனர். சுதந்திரத்தைப் பெறுவதற்காகத் துன்பங்களை சகித்துக் கொள்ளக் கூடிய அவர்களின் கடின உழைப்பு மற்றும் உயிர் தியாகங்களின் காரணமாக அவர்கள் மதிக்கப்படுகிறார்கள். சுருக்கமாக, அனைத்து இன்பங்களும், சுகமும் துன்பத்திற்குப் பிறகே வருகிறது.

ஆகையால், தான் திருக்குர்ஆனில் இந்த விஷயம் கூறப்பட்டுள்ளது:

إِنَّ مَعَ الْعُسْرِ يُسْرًا

ஒரு நிம்மதிக்கு முன்பு துன்பம் இல்லை என்றால், அந்த நிம்மதி நிம்மதியே இல்லை. இதைப் போன்றே எங்களுக்கு இறை வணக்கங்களில் இன்பம் வரவில்லை என்று கூறக்கூடிய மக்கள் முதலில், இறை வணக்கங்களுக்காக எந்த அளவிற்கு துன்பத்தையும், துயரத்தையும் அவர்கள் சகித்தார்கள் என்று தம் இடத்தில் சிந்திப்பது அவசியமாகும். இன்பம் கிடைக்கவில்லை என்றால், முதலில் இறை வணக்கத்திற்காக அவர்கள் துன்பத்தை மேற்கொண்டார்களா? என்று பார்க்க வேண்டும். சிந்திக்க வேண்டும். மனிதன் எந்த அளவுக்குத் துன்பம் மற்றும் துயரத்தைத் தாங்குவானோ அதுவே நிலை மாற்றத்திற்குப் பிறகு இன்பமாக மாறுகிறது. மனிதன் தன்னைத் தேவையற்ற துன்பத்தில் ஆழ்த்திக் கொண்டு சகித்துக் கொள்ள முடியாத துன்பத்தை சுமக்க உறுதி கொள்ள வேண்டும் என்பதை நான் குறிப்பிடவில்லை.

மாறாக, அவசியமான அனைத்து விஷயங்களுடனும் தயார் ஆகி சரியான நேரத்தில் தொழுகைகளை நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். தூக்கத்தையும் தியாகம் செய்ய வேண்டும். தனது வியாபாரங்களையும் தியாகம் செய்ய வேண்டும். மேலும் தொழுகைகளை குறித்த நேரத்தில் நிறைவேற்ற முயற்சி செய்ய வேண்டும். இறைவன் மீதான அச்சத்தை உள்ளத்தில் உருவாக்க வேண்டும் என்பது அசல் நோக்கமாகும்.

சில மக்கள் எப்படிப்பட்டவராக இருக்கின்றார்கள் என்றால், சுயம் எந்தத் துன்பத்தையும் சுமப்பதில்லை அல்லது சுமக்க விரும்புவதில்லை. மற்றவர்களிடம் துஆ செய்ய வைத்தால் அவர்களுடைய பிரச்சனைகள் தீர்ந்துவிடும் என்று கருதுகின்றனர். சில சமயங்களில் அவர்களிடம் கேட்கப்பட்டால், ஐவேளை தொழுகைகளையும் முறையாக தொழுவதில்லை என்ற பதில் வருகிறது.

ஒருமுறை ஒருவர் தன் தந்தைக்காக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் துஆவிற்காக விண்ணப்பித்தார். மேலும், அந்த துஆ எந்த ஒரு தனிப்பட்ட விஷயத்திற்காகவும் இருக்கவில்லை. மாறாக, அவரது மார்க்க விஷயத்திற்காக இருந்தது.

அப்போது, ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறினார்கள்:

நீங்கள் கவனமாக துஆ செய்யுங்கள். நீங்கள் சுயம் கவனமாக துஆ செய்யுங்கள். தந்தையின் துஆ மகனுக்காக ஏற்றுக் கொள்ளப்படுவது போன்று மகனின் துஆவும் தந்தைக்காக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

அன்னார் (அலை) கூறினார்கள்:

நீங்கள் கவனமாக துஆ செய்தால் அதாவது அன்னார் (அலை) அந்த நபரிடம் கூறுகின்றார்கள்: நீங்கள் கவனமாக துஆ செய்வீர்கள் என்றால், அப்பொழுது எமது துஆவின் தாக்கமும் இருக்கும். சுயம் துஆ செய்தீர்கள் என்றால், எமது துஆவின் தாக்கமும் இருக்கும். இல்லையென்றால்,

எதுவும் இருக்காது. எனவே மற்றவர்களிடம் துஆ செய்விக்கக் கூடியவர்கள் மற்றவர்களின் துஆவைச் சார்ந்திருக்காதீர்கள். மாறாக, சுயம் நீங்களும் கவனமாக துஆ செய்யுங்கள்.

இறை வணக்கத்தில் இன்பத்தைப் பெரும் வழிமுறையை எடுத்துரைத்த வண்ணம் மேற்கொண்டு கூறுகின்றார்கள்:

இறைவன் பார்வையில் அருவருப்பானதாக இருக்கின்ற, அவனது விருப்பத்திற்கு எதிராக இருக்கின்ற தனக்கு விருப்பமான விஷயங்களை மனிதன் இறைவனுக்காக விட்டு தன்னை துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ளும்போது,

அப்படிப்பட்ட துயரங்களை சுமக்கின்ற உடல்களின் தாக்கம் ஆன்மாவிலும் ஏற்படுகின்றது என்பதை நினைவிற் கொள்ளுங்கள். துன்பங்களை ஏற்றீர்களா? துன்பங்களை ஏற்க வேண்டும் என்று முன்னர் வந்ததல்லவா? எப்படிப்பட்ட துன்பங்கள் என்றால் அருவருப்பாக இருக்கக்கூடிய, அல்லாஹ்வின் விருப்பத்திற்கு எதிராக இருக்கக்கூடிய விஷயங்களை விட்டு விடுங்கள். அவற்றை விடுவதினால் துன்பம் ஏற்பட்டாலும் விட்டு விடுங்கள். ஆக, இப்படிப்பட்ட துன்பங்களை சுமக்கக் கூடிய உடல்களின் தாக்கம் ஆன்மாவிலும் ஏற்படுகிறது. மேலும் ஆன்மாவும் இந்தத் தாக்கத்திற்கு உட்பட்டு உடனுக்குடன் தன்னை மாற்ற ஆரம்பிக்கின்றது. எதுவரை என்றால், முழு பணிவுடன் இறைவனின் அவையில், கட்டுப்பாடற்று விழுகிறது. இவ்வாறு துன்பங்களை மேற்கொண்டால், அல்லாஹ்வுக்காக சில விஷயங்களை கைவிடுவீர்கள் என்றால், பின்னர் ஆன்மாவின் மீது அதன் தாக்கம் ஏற்படும். ஆன்மாவில் அதன் தாக்கம் ஏற்படும்போது பின்னர் தொழுகைகளிலும் ஸஜ்தாவிலும் ருகூவிலும் அந்த ஆன்மா அல்லாஹ்வுக்கு முன் விழும். இதுவே இறை வணக்கத்தில் இன்பத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும்.

மேலும் கூறுகின்றார்கள்:

நீங்கள் பார்த்திருப்பீர்கள்! சில மக்கள் கீதங்கள் பாடுவது, வாத்தியம் வாசிப்பது ஆகியவை இறைவணக்கத்தில் இன்பத்தைப் பெறுவதற்கான வழிமுறையாகும் என்றும் இதுவே அவனை வணங்குவதாகிவிட்டது எனவும் கருதுகின்றனர். கண்களை மூடி தியானத்தில் இருப்பதை இறை வணக்கமாக கருதுகின்றனர் அல்லது பாடல்களைக் கேட்பதை இறைவணக்கமாக கருதுகிறார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்: இவற்றால் ஏமாந்து விடாதீர்கள். இந்த விஷயங்கள் உள்ளத்தின் இன்பத்திற்கு வேண்டுமானால் காரணமாக அமையலாம். ஆனால், ஆன்மாவிற்கு இதில் இன்பத்திற்கான எந்த ஒரு விஷயமும் இல்லை. அவற்றால் ஆன்மாவில் பணிவு மற்றும் தன்னடக்கம் உருவாவதில்லை. இறைவணக்கத்திற்கான அசல் நோக்கம் மறைந்து விடுகின்றது.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

விலைமாதர்களின் சபைகளிலும் ஒரு மனிதன் இவ்வாறான இன்பத்தைப் பெறுகின்றான். அது என்ன இறைவணக்கத்தின் இன்பமாக கருதப்படுகிறதா? இது நுட்பமான விஷயமாகும். இதை மற்ற சமுதாயங்களால் புரிந்து கொள்ளவே முடியாது. ஏனெனில், அவர்கள் இறைவணக்கத்தின் உண்மையான நோக்கத்தைப் புரியவே இல்லை.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் நன்றியுணர்வு, இறைவனுக்காகத் தம்மைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்ளுதல் மற்றும் அதன் விளைவாக இறைவன் அன்னாருடன் எவ்வாறு நடந்து கொண்டான்? ஆகியவற்றை உதாரணம் காட்டியவாறு அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

இறை நெருக்கத்தைப் பெறுவதற்கான வழி எதுவென்றால், அவனுக்காக உண்மைத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் இறை நெருக்கத்தைப் பெற்றிருந்தார்கள் என்றால், அதற்கு இதுதான் காரணமாக இருந்தது. எனவே அல்லாஹ் கூறுகின்றான்:

وَاِبۡرٰهِيۡمَ الَّذِىۡ وَفّٰٓى

இப்ராஹீம் எப்படிப்பட்டவராக இருந்தார் என்றால், அவர் நன்றியுணர்வை வெளிப்படுத்தினார். இறைவனிடம் நன்றி உணர்வு உண்மைத்துவம் மற்றும் கலப்பற்ற தன்மையைக் வெளிப்படுத்த ஒரு மரணம் தேவைப்படுகிறது. மனிதன் உலகம் மற்றும் அதனுடைய அனைத்து இன்பங்களையும், சுகங்களையும் கைவிட்டு விடுவதற்கு ஆயத்தமாகாத வரை மேலும் எல்லா வகையான இழிவு, கடினம் மற்றும் நெருக்கடியை இறைவனுக்காக பொறுத்துக் கொள்ள தயாராக ஆகாத வரை இந்தப் பண்பு உருவாக முடியாது.

மனிதன் ஒரு மரத்தையோ அல்லது கல்லையோ வணங்குவது மட்டும் சிலை வணக்கமாகாது. மாறாக, இறைவனின் நெருக்கத்திலிருந்து தடுக்கின்ற மற்றும் அவனுக்கு இறைவனை விட முதன்மையானதாக இருக்கக்கூடிய அனைத்து விஷயங்களும் சிலையாகும். மேலும் எந்த அளவு சிலைகளை மனிதன் தன்னுள் வைத்துள்ளான் என்றால், நான் சிலை வணக்கம் செய்கின்றேன் என்பதைக் கூட அவன் அறிவதில்லை. எனவே எப்போதுவரை குறிப்பாக இறைவனுக்காக மட்டும் ஒருவன் ஆகிவிடுவதில்லையோ அவனது வழியில் எல்லா வகையான துன்பங்களையும் பொறுத்துக் கொள்ள ஆயத்தமாகவில்லையோ அதுவரை உண்மைத்துவம் மற்றும் கலப்பற்ற தன்மையின் பண்பு உருவாவது கடினமாகும்.

இப்ராஹீம் (அலை) அவர்களுக்குக் கிடைக்கப் பெற்ற இந்தப் பட்டம் வெறுமனே கிடைத்துவிட்டதா? இல்லை. அவர்கள் தம் மகனைத் தியாகம் செய்ய ஆயத்தமான பிறகுதான்,

اِبۡرٰهِيۡمَ الَّذِىۡ وَفّٰٓى

என்ற ஓசை வந்தது.

அல்லாஹ் செயலை எதிர்பார்க்கின்றான். செயலினாலேயே திருப்தி அடைகின்றான். செயல் துன்பத்தினால் வருகிறது. ஆனால், மனிதன் இறைவனுக்காகத் துன்பத்தை சுமக்க தயாராகி விடும்போது இறைவன் அவனைத் துன்பத்திலும் ஆழ்த்துவதில்லை. பாருங்கள்! இப்ராஹீம் அல்லாஹ்வின் கட்டளையை ஏற்க தம் மகனைத் தியாகம் செய்ய விரும்பிய போது, முழு ஏற்பாடுகளையும் செய்த பிறகு அல்லாஹ் அவர்களின் மகனைக் காப்பாற்றிவிட்டான். அவர்கள் நெருப்பில் இடப்பட்டார்கள். ஆனால், நெருப்பால் அவர்கள் மீது எந்த தாக்கத்தையும் ஏற்படுத்த முடியவில்லை.

அல்லாஹ்வின் வழியில் துன்பங்களை சுமக்கத் தயாராகி விட்டால், பிறகு இறைவன் துன்பங்களிலிருந்து காப்பாற்றி விடுகின்றான். நம் கையில் உடல் உள்ளது. ஆன்மா இல்லை.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

நம் கையில் உடல் உள்ளது. ஆன்மா இல்லை. ஆனால், ஆன்மாவுக்கு உடலுடன் தொடர்பு உள்ளது. மேலும் உடல் சார்ந்த விஷயங்களின் தாக்கம் ஆன்மாவின் மீது நிச்சயமாக ஏற்படுகிறது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆகையால், உடலால் எந்தத் தாக்கமும் ஆன்மாவின் மீது ஏற்படுவதில்லை என்று ஒருபோதும் எண்ணக் கூடாது.

மனிதனால் நிகழும் அனைத்து செயல்களும் இவை ஒன்றிணைவதால் நிகழ்கின்றன. அதாவது, உடலும் ஆன்மாவும் இணைவதால். உடல் தனித்தோ அல்லது ஆன்மா தனித்தோ எந்த நல்ல, தீய செயல்களையும் செய்வதில்லை. இதனால்தான் நற்கூலி மற்றும் தண்டனையிலும் இவை இரண்டிற்கும் இடையில் உள்ள தொடர்பைக் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது. சில மக்கள் இந்த ரகசியத்தைப் புரியாததன் காரணமாக முஸ்லிம்களின் சுவர்க்கம் பௌதீகமானது என்று ஆட்சேபனை செய்துவிடுகின்றனர். ஆனால், செயல்கள் வெளிப்பாட்டில் உடல் இணைந்திருந்தபோது நற்கூலியின் நேரத்தில் ஏன் பிரிக்கப்பட வேண்டும்? என்பதைக் கூட அவர்கள் அறிவதில்லை.

சுருக்கமாக, இஸ்லாம் மிகைப்படுத்துதல் மற்றும் குறைத்துக் கூறுதல் ஆகிய இரண்டு வழிமுறைகளையும் விட்டுவிட்டு நடுநிலையான வழியைக் கூறியுள்ளது. இவை இரண்டும் ஆபத்தான விஷயங்கள் ஆகும். இவற்றிலிருந்து தவிர்ந்திருக்க வேண்டும். வெறும் உடலுக்குத் தண்டனை அளிப்பதால் ஒன்றும் ஆகாது. ஓய்வு எடுப்பதால் மட்டுமே எந்த விளைவும் உருவாகாது. உடலைத் துன்பத்தில் ஆழ்த்திக் கொள்வதால் மட்டும் எதுவும் நடக்காது. ஓய்வு மட்டுமே எடுக்காதீர்கள் என்றாலும் எந்தப் பலனும் ஏற்படாது. ஆன்மாவையும், உடலையும் இணைப்பது அவசியம். துஆவின் காலத்திலும் சோதனைகள் வருகின்றன. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் சமுதாயத்தின் மீது எத்தகைய சோதனைகள் வந்தன, நீண்ட காலம் இருந்தன என்பதன் உதாரணத்தை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் வழங்கியவாறு கூறுகின்றார்கள்:

ஒவ்வொரு பணிக்கும் காலம் உள்ளது. நற்பேறு உடையவர்கள் அதற்காக காத்திருப்பார்கள். எவர் காத்திருப்பதில்லையோ கண் இமைப்பதில் அதன் விளைவு வெளிப்பட வேண்டும் என்று விரும்புகிறாரோ அவர் அவசரக்காரர் ஆவார். அவர் வெற்றி பெற முடியாது. என் பார்வையில் இதுவும் சாத்தியமாகும். மேலும், நடக்கிறது. அதாவது, துஆவின் காலத்தில் சோதனைகளாக இன்னும் அதிகம் சோதனைகள் வந்துவிடுகின்றன.

உதாரணமாக, ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் இஸ்ரவேலர்களை ஃபிர்அவ்னின் அடிமைத்துவத்திலிருந்து விடுவிக்க வந்தபோது, அவர்களுக்கு முதலில் எகிப்தில் ஃபிர்அவ்ன் என்ன பணியை வழங்கியிருந்தான் என்றால், அவர்கள் பாதி நாள் செங்கல் செய்ய வேண்டும். பாதி நாள் தம் வேலையை செய்ய வேண்டும். அவர்களுக்கு பாதி நாள் விடுப்பு இருந்தது. பாதி நாள் ஃபிர்அவ்னின் வேலையை செய்ய வேண்டும்.

**EDITOR**
Moulavi.O.M. MUZZAMMIL AHMAD
**SUB EDITOR**
Moulavi. ABDUR RAHMAN TAHIR
Mobile : + 91 96774-14441
+91 88381-58410
E-mail : subeditortamil@gmail.com
Website : www.akhbarbadr.in

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

*Weekly* **BADAR** *Qadian*

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2023-2025 Vol. 8 Thursday 16 February 2023 Issue No. 7

**MANAGER**
SHAIKH MUJAHID AHMAD
Mobile : +91 99153-79255
E-mail : managerbadrqnd@gmail.com

**ANNUAL SUBSCRIPTION** : Rs.600/- (Per Issue Rs. 11/-) (**WEIGHT** - 20-50 gms/issue)

ஆனால், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அந்த மக்களை விடுவிக்க முயற்சி செய்தபோது தீயவர்களின் தீங்கிழைத்தலால் இஸ்ரவேலர்களின் பணி அதிகரிக்கப்பட்டது. தண்டனையாக என்ன நடந்தது என்றால், பாதி நாள் நீங்கள் செங்கல் செய்ய வேண்டும். பாதி நாள் நீங்கள் புல் சுமக்க வேண்டும் என்று அவர்களுக்கு கட்டளை வழங்கப்பட்டது. அதுவும் ஃபிர்அவ்னின் பணியாகவே இருக்கும். அவர்களுக்குத் தமக்கென எந்த நேரமும் இருக்கவில்லை. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு இந்தக் கட்டளை கிடைத்தபோது, அவர்கள் இஸ்ரவேலர்களுக்கு அதை வாசித்துக் காட்டியபோது அவர்களின் சமுதாயத்தினர் மிகவும் கோபப்பட்டார்கள்.

மேலும், இவ்வாறு கூறினார்கள்: மூஸாவே! எங்களுக்குக் கிடைத்த துன்பத்தை இறைவன் உமக்கு வழங்குவானாக! அவர்கள் மேற்கொண்டும் ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு எதிராக சில தீய துஆக்களை செய்தார்கள். ஆனால், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அந்த மக்களுக்கு நீங்கள் பொறுமை காக்க வேண்டும் என்றே கூறினார்கள். தவ்ராத்தில் இந்த சம்பவம் முழுவதும் எழுதப்பட்டுள்ளது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் ஆறுதல் கூற, ஆறுதல் கூற அவர்கள் இன்னும் அதிகம் சினம் கொண்டார்கள். இன்னும் அதிகமாக கோபத்தில் எழுந்தார்கள். கடைசியில் என்ன நடந்தது என்றால், எகிப்திலிருந்து தப்பி ஓடுவதற்கான ஆலோசனை செய்யப்பட்டது. அங்கிருந்து ஹிஜ்ரத் செய்வதற்கான ஆலோசனை செய்யப்பட்டது. மேலும், எகிப்து வாசிகளின் துணிமணிகள் பண்ட பாத்திரங்கள் எதை எடுத்திருந்தார்களோ அதை கையோடு கொண்டு சென்றார்கள். அவர்களுக்கு கிடைத்ததை உடன் எடுத்துக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் சமுதாயத்தை உடன் அழைத்துக் கொண்டு வந்தபோது, ஃபிர்அவ்ன் தனது படையை எடுத்துக் கொண்டு அவர்களைப் பின் தொடர்ந்தான். ஃபிர்அவ்னின் மக்களின் படை தமக்கு அருகில் இருப்பதை இஸ்ரவேலர்கள் பார்த்தபோது, அவர்கள் மிகவும் வேதனைக்குள்ளானார்கள். திருக்குர்ஆனில் எழுதப்பட்டுள்ளது. அப்போது அவர்கள் கூச்சலிட்டு இவ்வாறு கூறினார்கள்:

اِنَّا لَمُدْرَكُوْنَ

மூஸாவே! நாம் பிடிக்கப்பட்டோம். ஆனால், நபித்துவ கண்களால் முடிவைக் கண்டிருந்த ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் அந்த மக்களுக்கு இந்த பதிலை தான் வழங்கினார்கள்.

كَلَّا اِنَّ مَعِیَ رَبِّیْ سَیَهْدِیْنِ

ஒருபோதும் அல்ல. என் இறைவன் என்னுடன் இருக்கின்றான்.

தவ்ராத்தில் எழுதப்பட்டுள்ளது. அந்த மக்கள் இதையும் கூறினார்கள்: எகிப்தில் நமக்குக் கபர்கள் இருக்கவில்லையா? இந்த மனஉளைச்சல் உண்டானதற்கான காரணம் என்னவென்றால், பின்னால் ஃபிர்அவ்னின் படை இருந்தது. முன்னால் நைல் நதி இருந்தது.

அவர்கள் இவ்வாறு கூறிக் கொண்டிருந்தார்கள். நாம் எகிப்தில் இருந்திருந்தால், அங்கும் கூட மரணித்து தான் இருக்க வேண்டும். அங்கேயே அடக்கப்பட்டிருக்கலாமே! இப்போதோ மிகவும் கஷ்டத்திற்குள்ளாகி விட்டோமே! முன்னால் கடல் உள்ளது. பின்னால் படை உள்ளது. அது நம் அனைவரையும் கொன்று குவித்து விடும். மிகவும் கவலைக்குள்ளாகியிருந்தார்கள்.

அன்னார் (அலை) கூறுகின்றார்கள்:

பின்னால் சென்றும் தப்ப முடியாது; முன்னால் சென்றும் தப்ப முடியாது என்பதை அவர்கள் பார்த்தனர். ஆனால், அல்லாஹ் வல்லமையும், ஆற்றலும் கொண்ட இறைவன் ஆவான். நைல் நதி வழியாக அவர்களுக்குப் பாதை கிடைத்துவிட்டது. இஸ்ரவேலர்கள் அனைவரும் எளிதாக கடந்து சென்றுவிட்டார்கள். ஆனால், ஃபிர்அவ்னின் படை மூழ்கிவிட்டது. இது மகத்துவ மிக்க அற்புதமாக இருந்தது. அத்தகைய நேரத்தில் அல்லாஹ் அவர்களுக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்து விட்டான். இதுவே இறையச்சமுடையவருக்கு நடக்கிறது. ஒவ்வொரு நெருக்கடியிலிருந்தும் அவருக்கு ஈடேற்றமும் வழியும் கிடைக்கிறது. يَجْعَلْ لَّهٗ مَخْرَجًا (அத்தலாக் : 3)

துஆ மற்றும் அது ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு இடைப்பட்ட நேரத்தில், சில சமயங்களில் சோதனைகள் மீது சோதனைகள் வரும். எப்படிப்பட்ட சோதனைகள் வரும் என்றால் அவை இடுப்பை முறித்துவிடும். ஆனால், நிரந்தர மனப்பாங்குடையவர் நல்லியல்புடையவர் இந்த சோதனைகள் மற்றும் கஷ்டத்திற்கு இடையிலும் தனது இறைவனின் அருளின் நறுமணத்தை நுகர்கின்றார். தொலைநோக்குப் பார்வையுடன் பார்க்கின்றார். அதற்குப் பிறகு உதவி வருகிறது.

இந்த சோதனைகள் வருவதில் இந்தவோர் இரகசியமும் உள்ளது. அதாவது, துஆவிற்கு எழுச்சி அதிகரிக்கிறது. ஏனெனில், எந்த அளவு அழுகையும், மன்றாடலும் அதிகரித்துக் கொண்டே செல்கிறதோ அதே அளவு ஆன்மாவில் உருக்கம் ஏற்பட்டுக் கொண்டே செல்லும். மேலும், இவை துஆ ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான வழிமுறைகளைச் சேர்ந்ததாகும்.

மென்மை ஏற்படுவது, உருக்கம் உருவாகுவது மற்றும் துஆக்களின் பால் கவனம் ஏற்படுவது ஆகியவை அல்லாஹ் துஆக்களை ஏற்றுக் கொள்ள விரும்புகின்றான் என்பதற்கான சான்றாகும். எனவே ஒருபோதும் பதற்றமடையக் கூடாது. பொறுமையின்மை மற்றும் நிம்மதியின்மையினால் நாம் நம் அல்லாஹ்வின் மீது தப்பெண்ணம் கொள்ளக் கூடாது. எனது துஆ ஏற்றுக் கொள்ளப்படாது அல்லது ஏற்றுக் கொளள்ப்படுவதில்லை என ஒருபோதும் கருதக் கூடாது. கூறுகின்றார்கள்:

இப்படிப்பட்ட சிந்தனையால் மனிதன் அல்லாஹ் துஆவை ஏற்றுக் கொள்ளக் கூடியவன் என்ற பண்பை மறுக்கக் கூடியவனாகி விடுவான். அல்லாஹ்வுக்கு எதிராக இத்தகைய சூழ்நிலை உருவாகிவிட்டால், பின்னர் நாத்திகத்தின் பக்கம் அடியெடுத்து வைக்கப்படும். இன்றைய நாட்களில் மார்க்கம் மற்றும் இறைவனின் எதிரிகளின் எல்லா விதமான கவனமும், நான் கூறியதுபோன்று இந்த விஷயத்தின் பக்கம் இருக்கிறது. அதாவது, இறைவன் உங்களுக்கு என்ன தந்தான்? மார்க்கத்தின் பலன் என்ன? மார்க்கம் சோம்பேறியாக்குகிறது. மார்க்கம் கற்பனை விஷயங்களை மூளையில் உருவாக்குகின்றது ஆகிய விஷயங்கள் உள்ளத்தில் போடப்படுகின்றன. இத்தகைய நேரத்தில் ஒவ்வோர் அஹ்மதியின் பணி என்னவென்றால், அல்லாஹ்வுடன் உறுதியான தொடர்பை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். தற்காலிக அல்லது தேவையின்போது மட்டும் தொடர்பும், இறைவணக்கங்களும் இருக்கக்கூடாது.

மாறாக, நிம்மதியான நிலைகளிலும், சொகுசான காலகட்டங்களிலும் அல்லாஹ்வுடன் தொடர்பு இருக்க வேண்டும். தம்முடைய இறைவணக்கங்களைப் பாதுகாக்க வேண்டும். துஆக்களில் உறுதியான நம்பிக்கை இருக்க வேண்டும்.

இதன் தொடர்ச்சி - 9ம் பக்கம்

**National Watch Company**
**Sales & Service**

**B. Mohamed Adil**
93632 06679
99433 38000
196, Trichy Road, Sulur - 641 402.
Somanur, Anuparpalayam, Karumathampatti.

O.A. NIJAM 99947 57172
**O.A.N. Doors & Steels**
V.A. SAIT 99430 30230

All Types of wooden Doors, Skin Doors Steel Doors, Membrane Doors, PVC Cup Boards, TMT Rods, Cements, Cover Blocks and Con-
5C/6-A, Ambai Road, Kulavanikarpuram,
{ opp. Karuna Clinic } Tirunelveli-627005

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press. Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad